விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 23 புதன்கிழமை (08.07.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 201

WESTERN UNION MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Wastern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
(C-1504)

# மகிந்தவுக்கு வழங்கப்பட்டிருக்கும் சிறப்புரிமையை நீக்கவேண்டும்

## தேர்தல்கள் ஆணையாளரிடம் ஐ.தே.க கோரிக்கை



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடுவராயின் முன்னாள் ஜனாதிபதியாக அவருக்கு வழங்கப்பட்டிருக்கின்ற சிறப்புரிமைகள் மற்றும் வரப்பிரசாதங்களை உடனடியாக நீக்க வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல்கள் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)



## முன்னாள் போராளி கைது

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி தெற்கு பகுதியில் புனர்வாழ்வு பெறாமல் தங்கியிருநத முன்னாள் போராளியை நேற்று முன்தினம்திங்கட்கிழமை இரவுகைது செய்துள்ளதாக தெல்லிப்பழை பொலிஸார் தெரிவித்தனர்.

சக்திவேல்இராஜகுமரன்(வயது 41) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸாரின் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து கைது செய்யப்பட்ட இவரிடமிருந்து கடவுச்சீட்டு, 23ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவை களமிறக்கும் விவகாரம் கூட்டமைப்பிற்குள் குழப்பம் நீடிப்பு

(கொழும்பு)

பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் சார்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை களமிறக்குவதில் தொடர்ந்தும் கட்சிக்குள் குழப்ப நிலைமை நிலவுவதாக தெரிகின்றது. கூட்டணியில் தமது அணியைச் சேர்ந்த சகலருக்கும் வேட்பாளர் பட்டியலில் அனுமதி மறுக்கப்பட்டால் மகிந்த அணி தனித்து களமிறங்கும் தீர்மானத்தில் உள்ளதாகவும் அதற்கேற்ற வகையில் வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்பட்டுவரு 24ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவை இணைத்து போட்டியிடுவது சுதந்திரக் கூட்டணிக்கு பெரும் பலம்

### கட்சியை பலப்படுத்தி விட்டோம் என்கிறார் நிமல்



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் மகிந்த ராஜபக்ஷவை இணைத்துக்கொண்டமை கட்சியை பலப்படுத்தும் செயற்பாடாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் நிமல சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியை ஒன்றிணைத்து மீண்டும் பலமான ஆட்சியை அமைக்க வேண்டும் என்பதே எம் அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைத்து நல்லாட்சியை ஏற்படுத்தும் நோக்கத்தில் தான் கடந்த காலங்களில் நாம் போராடினோம்.

இந்த போராட்டத்தில் மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் இணைத்துக்கொள்ள 23ஆம் பக்கம் பார்க்க....

## மனோ கணேசன் - த.தே.கூட்டமைப்பு பிரதிநிதிகள் நேற்று திடீர் சந்திப்பு

(கொழும்பு)

தமிழ் முற்போக்கு கூட்டணி, ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களான செல்வம் அடைகலநாதன், எம்.ஏ.சுமந்திரன், ஸ்ரீகாந்தா ஆகியோருக்கும் இடையில் நேற்று அவசர சந்திப்பொன்று இடம்பெற்றது.

ஜனநாயக மக்கள் முன்னணி தலைமையகத்தில் நடைபெற்றுள்ள இந்த சந்திப்பு தொடர்பில் மனோ கணேசன் கருத்து கூறியதாவது,

கூட்டமைப்புக்கும், எமது கட்சிக்கும் இடையில் நீண்ட காலமாக நல்லுறவு நிலவுகின்றது.

இது ஒரு அவசர சந்திப்பு. கூட்டமைப்பு தங்களது ஆசன பங்கீடுகளை சிறப்பான முறையில் செய்து முடித்துள்ளதை அறிந்து நமது மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டோம்.

அதேவேளை தெற்கில் எமது கூட்டணி ஐக்கிய தேசிய கட்சியுடன் நடத்தி வரும் பேச்சுக்கள் தொடர்பில் நாம் கருத்து பறிமாறிக்கொண்டோம். தமிழரசு கட்சி தலைவர் மாவை சேனாதிராசா 23ஆம் பக்கம் பார்க்க....

## ரூபாய் 9.4 மில்லியனுக்கு நாங்கள் சாப்பிடவில்லை

### உண்மையை திரிபுபடுத்தியதாக மகிந்த அறிக்கை

(கொழும்பு)

ராஜபக்ஷ குடும்பத்தினர் 9.4 மிலலியன் ரூபாய்க்கு காலை உணவை பெற்றுக்கொண்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டானது உண்மையை திரிபுப்படுத்திய குற்றச்சாட்டாகும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஊடகப் பிரிவு அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ராஜபக்ஷ குடும்பத்தினர் ஹில்டன் ஹோட்டலில் இருந்து ஒரு வேளை காலை உணவை பெற்றுகொண்டமைக்காக 9.4 மில்லியன ரூபாய்க்கான பற்றுச்சீட்டு கிடைத்துள்ளதாகவும் இதுவரை அந்த பணத்தை ராஜபக்ஷவினர் செலுத்தவில்லை 24ஆம் பக்கம் பார்க்க....

## மத்திய வங்கியின் ரூ.900 கோடியை தேர்தலுக்கு பயன்படுத்தினார் மகிந்த

### பிரதமர் ரணில் குற்றச்சாட்டு

(கொழும்பு)

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் மத்திய வங்கியின் சுமார் 900 கோடி ரூபாயை தேர்தல் பிரசார நடவடிக்கைக்காக மகிந்த பயன்படுத்தியதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐ.தே.கவின் தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று நடைபெற்ற விஷேட செய்தியாளர் சந்திப்பிலேயே ரணில் 23ஆம் பக்கம் பார்க்க....



## வேட்பாளர் பட்டியல் பெண்களுக்கு 30 வீதம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் சகல அரசியல் கட்சிகளும் தமது வேட்பு மனுக்களில் 30 வீதமான இடத்தை பெண்களுக்கு வழங்க வேண்டும் என மகளிர் விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் தேசிய பட்டியலில் மூன்றில் ஒரு வீதத்தை பெண்களுக்காக ஒதுக்குமாறும் அமைச்சு அரசியல் கட்சிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் வேடபாளர் பட்டிய 23ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினருக்கான கொடுப்பனவுகள் ஆயுள் முழுவதும் செலுத்தப்படும்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

படையினருக்கான கொடுப்பனவுகள் அவர்களின் ஆயுட்காலம் முழுவதும் செலுத்தப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு அமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

படையினருக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் 55 வயதுடன் மட்டுப்படுத்தாது அவர்களின் ஆயுட்கலம் முழுவதும் வழங்க வேண்டுமென ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

இதற்கான அமைச்சரவை அனுமதியும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மூன்று தசாப்த காலமாக போரிட்டு உயிர்த தியாகம் செய்த மற்றும் உடல் ஊனமுற்ற படைவீரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு பல்வேறு படையினர் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

இதுவரையில் இந்தத் திட்டம் படையினர்களின் 55 வயது வரையில் மட்டுமே வழங்கப்பட்டது.

எனினும் எதிர்காலத்தில் ஊனமுற்ற படையினர்களின் ஆயுட் காலம் முழுவதிலும் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட உள்ளன.

படையினர் கொடுப்பனவுகளுக்காக அரசாங்கம் பல கோடி ரூபாய் பணத்தை செலவிடுகின்றது.

படையினர்களுக்கு இந்த அரசாங்கம் பல்வேறு வசதிகளையும் நிவாரணங்களையும் வழங்கி வருவதாக அமைச்சர் ருவான் விஜேவர்தன அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று தெரிவித்துள்ளார்.(செ-11)

## டியூவின் அறிக்கை பொய்யானது - ரணில்

(கொழும்பு)

பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் டியூ. குணசேகர சமர்ப்பித்த இடைக்கால அறிக்கை மோசடியானது என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் முறி பத்திர விவகாரம் தொடர்பான நாடாளுமன்ற அறிக்கை என அதனை அவர் கூறினாலும் அதில் அவரது தனிப்பட்ட கருத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

இதனால், அது சம்பந்தமாக பிரதியமைச்சர் சுஜீவ சேனசிங்கவுடன் பகிரங்க விவாதத்திற்கு வருமாறும் பிரதமர், டியூ. குணசேகரவுக்கு அழைப்பு விடுத்துள்ளார். (செ-11)

## கஞ்சாவுடன் கைதான மீனவர்களிற்கு 16-ம் திகதி வரை விளக்கமறியல் விதிப்பு



(மன்னார்)

தலைமன்னார் கடற்பரப்பில் கஞ்சாவுடன் கைது செய்யபட்ட தமிழக மீனவர்கள் நால்வரையும் எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் மாவட்ட நீதிபதி ஆசீர்வாதம் கிறேசியன் அலெக்ஸ் ராஜா உத்தரவிட்டார்.

வியாபாரத்திற்கென தமிழகத்தின் ராமநாதபுரத்தை சேர்ந்த மீனவர்களால் இலங்கைக்கு கடத்தப்பட இருந்த கஞ்சா பொதிகளை நேற்று முன்தினம் திங்கட்கிழமை அதிகாலை தலைமன்னார் கடற்படையினர் மீட்டனர்.

அத்துடன் அவற்றை வைத்திருந்தனர் எனத் தெரிவிக்கப்படும் நான்கு தமிழக மீனவர்களையும் தலைமன்னார் கடலில் வைத்து கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

குறித்த மீனவர்கள் நான்கு பேரையும் நேற்று செவ்வாய்கிழமை மன்னார் மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தியதுடன் மீட்கப்பட்ட கஞ்சாவையும் நீதிமன்றில் ஒப்படைத்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி நான்கு தமிழக மீனவர்களையும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டதுடன் இவர்களை ஜூலை மாதம் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

தமிழக மீனவர்கள் யாருக்கு போதை பொருளை விற்பனை செய்ய முற்பட்டனர் என்பதைக் கண்டுபிடிக்க பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(செ-11)

## திருமலையில் கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் பரிசோதனைக்கு

(திருகோணமலை)

திருகோணமலை பிரதான மைதானத்தை அண்மித்த பகுதியில் நீதிமன்ற உத்தரவிற்கு அமைய மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின்போது மனித எச்சங்கள் சில கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி 17 ஆம் திகதி திருகோணமலை மக்கெய்ஸர் விளையாட்டரங்கின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் மனித எச்சங்கள் சில கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

இந்த விடயம் தொடர்பில் திருகோணமலை நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டதை அடுத்து, மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்ட இடத்தில அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

மனித எச்சங்கள் கண்டெடுக்கப்பட்ட பகுதியில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கு தடை விதிக்கப்பட்டதுடன் அந்த இடத்திற்கு பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது.

திருகோணமலை நீதவான் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணிகளின் போது மனித எச்சங்கள் சில கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்த மனித எச்சங்கள் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோத்னைக்காக தற்போது அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அகழ்வுப் பணிகள் இடம்பெற்ற இடத்திற்கு அரச இரசாயனப் பகுப்பாய்வாளர்கள், நில அளவியலாளர்கள் உள்ளிட்ட மேலும் பல அதிகாரிகள் அழைக்கப்பட்டிருந்தனர். (செ-11)

## சரத்தின் மருமகன் தேர்தலில் போட்டி

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட உள்ளதாக ஜனநாயகக் கட்சியின் தலைவரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் மருமகனான தனுன திலக்கரட்ன தெரிவித்துள்ளார்.

ஜனநாயகக் கட்சியின் சார்பில் தான் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தனுன திலக்கரட்ன, சரத் பொன்சேகாவின மூத்த மகளான அப்சராவை திருமணம் செய்திருந்தார். அப்சரா சில மாதங்களுக்கு முன்னர் வேறு ஒருவரை மறுமணம் செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ராஜிவைத் தாக்கிய சிப்பாய் தலைமை வேட்பாளராக போட்டி



(கொழும்பு)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தியைத் தாக்கிய இலங்கை கடற்படையின் முன்னாள் சிப்பாய் விஜித் ரோகண விஜேமுனி, வரும் நாடாளுமன்றத் தேர்தலில், கம்பகா மாவட்டத் தலைமை வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார்.

பொது பல சேனாவின் அரசியல் கட்சியான பொது ஜன பெரமுன (பிஜேபி) சார்பிலேயே இவர் கம்பகா மாவட்ட தலைமை வேட்பாளராக போட்டியிடுகிறார்.

1987ஆம் ஆண்டு இலங்கை வந்திருந்த அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜிவ்காந்தியை, அணிவகுப்பு நிகழ்வின் போது விஜித் ரோகண விஜேமுனி துப்பாக்கியால் தாக்கியிருந்தார்.

சிறைத்தண்டனையின் பின்னர் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட அவர இந்த தேர்தலில் போட்டியிடவுள்ளார்.

அதேவேளை, பிஜேபி கட்சியின் தேசிய அமைப்பாளர் வண.விதாரந்தெனிய நந்த தேரர், கொழும்பு மாவட்டத்தில் தலைமை வேட்பாளராகப் போட்டியிடவுள்ளார். (செ-11)


மானிப்பாய் கோவில்பற்று ப.நோ.கூ சங்கத்தின்

**இதய அஞ்சலிகள்**



**எஸ்.பி.நடராஜா**

கூட்டுறவை நேசித்த

தொழில் அதிபரின்

மறைவுக்கு எமது

இதய அஞ்சலிகள்

அமரரின் ஆத்மா

சாந்தியடைய

பிரார்த்திக்கின்றோம்.

-பணிப்பாளர்களும்,

பணியாளர்களும்

மானிப்பாய் கோவில்பற்று

ப.நோ.கூ சங்கம்


## வாகன விபத்தில் 21 பேர் காயம்

(கொழும்பு)

கேகாலை ரம்புக்கனை பிரதேசத்தில் அரச பஸ் ஒன்று எதிர்திசையில் பயணித்த பிறிதொரு பஸ் ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளன.

நேற்றுக் காலை இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ் விபத்தில் 21 பேர் காயமடைந்துள்ளதுடன், அவர்கள் கேகாலை போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்தில் 7 பெண்கள், சிறு குழந்தை மற்றும் 13 ஆண்களும் காயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கேகாலை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (செ-11)


**மானிப்பாய் கோவில்பற்று பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் கிளைக்குழுத் தெரிவு கூட்டம் பிற்போடல் தொடர்பான அறிவித்தல்**

எமது சங்கத்தில் எதிர்வரும் 12.07.2015 ஞாயிற்றுக் கிழமை நடைபெற இருந்த பின்வரும் கிளைக்குழுத் தெரிவுக் கூட்டங்கள்.

01) 07 மணிமண்டபம் நவாலி
02) 12 கட்டுடை மானிப்பாய்
03) 15 ஆலங்குழாய் சண்டிலிப்பாய்
04) 16 சுதுமலை
05) 20 உயரப்புலம்

பாராளுமன்ற தேர்தல் அறிவிப்பு காரணமாக மறுஅறிவித்தல் பிற்போடப்பட்டுள்ளது. இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

செயலாளர், 2015.07.08
மானிப்பாய் கோ.ப.ப.நோ.கூ.சங்கம் (சி-1503)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண வரலாற்றில் நீங்கள் எப்போதும் கண்டிராத நிகழ்வு உங்கள் நகரில் கணக்கிட முடியாது இலட்சத்துக்கு மேற்பட்ட டிசைன்களில் தொகையான ஆபரணங்கள்

யாழ்ப்பாண யுவதிகள் தங்க முலாம் பூசப்பட்ட மற்றும் ரேடியம் பூசப்பட்ட அவுஸ்திரேலியா வைர நகைகளை கொள்வனவு செய்யலாம்

# உரிய ஏற்றுமதி விலையான ரூ. 1500 /=, 3000 /= வரையிலான நகைகளுக்கு கடைசி இரு தினங்கள் மட்டும்

# ரூபாய். 150 /= - 300 /= மட்டுமே

## 2015 ஜூலை 8,9

**(புதன், வியாழன்) திகதிகளில்**

**நேரம் : முற்பகல் 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை**

**(பகல் உணவு இடைவேளை கிடையாது)**

ரூ. 150/- க்கும், ரூ. 300/- க்கும் விற்பனை செய்யும் ரூ. 3000/- ஏற்றுமதி பெறுமதி கொண்ட 10 இலட்சம் நகைகளை இன்றே கொள்வனவு செய்யுங்கள்

இவ் விளம்பரத்தில் எல்லா டிசைன்களையும் குறிப்பிட இடமில்லை சில ஆபரணங்களை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம்.

- மும்பாய் தங்க முலாமிடப்பட்ட செயின் பெண்டன் — ரூ. 150/- Only
- சிப்ரா தங்க முலாமிடப்பட்ட கம்மல் — ரூ. 150/- Only
- அமெரிக்கன் டைமன் கல் பதித்த கம்மல் — ரூ. 150/- Only
- மேல் நாட்டு மாதிரியிலான தோடுகள் — ரூ. 150/- Only
- அவுஸ்திரேலிய டயமன்ட் மோதிரம் — ரூ. 150/- Only
- அவுஸ்திரேலிய டயமன்ட் செயின் — ரூ. 300/- Only
- பஞ்சாம் பியூட்டி குயின் மாலை — ரூ. 300/- Only
- அமெரிக்க டயமன்ட் நெக்லஸ் — ரூ. 300/- Only
- கிரிஸ்டல் நெக்லஸ் செட் — ரூ. 300/- Only
- ஐதராபாத் முத்து நெக்லஸ் செட் — ரூ. 300/- Only
- இத்தாலிய டயமன்ட் தோடுகள் — ரூ. 300/- Only
- ரேடியம் பிளேடிங் டயமன்ட் தோடுகள் — ரூ. 300/- Only
- ஜெய்ப்பூர் குண்டன் நெக்லஸ் செட் — ரூ. 300/- Only
- அவுஸ்திரேலிய டயமன்ட் மோதிரம் — ரூ. 300/- Only

விசேட சலுகை : விவாக சடங்குகள் மற்றும் வைபவங்களுக்கு ரூபாய் 500/-ரூ 1000/- வரை ஆபரணங்கள்

# இடம் : வீரசிங்கம் மண்டபம்

இல. 12, கே.கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.

அனுமதி இலவசம் தொலைபேசி : 075 5075675 பெண் விற்பனை பிரதிநிதிகள் தேவை

(976)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சஜின்வாஸ் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைப்பு

**ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்தன எதிர்வரும் 21 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.**

கடந்த அரசாங்கத்தின் ஆட்சியில் ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான வாகனங்களை முறைகேடான முறையில் பயன்படுத்தியதாக சஜின்வாஸ் குணவர்தன மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

அவர் நேற்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டதுடன் அவரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டார். (இ-7)




# மின்சார விநியோகம் தடைப்படும்

உயர் அழுத்தம மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் சனிக்கிழமை 11 ஆம் திகதி வரை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை வடமாகாணத்திலுள்ள சில பகுதிகளில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

08.07.2015 புதன் யாழ். பிரதேசத்தில் கந்தரோடை, உடுவில் கற்பக்குணை, சங்குவேலி, ஆனைவிழுந்தான், நாதோலை, சித்திரமெளலி, ஆலடி, அண்ணா சிலையடி, மண்டான் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் செக்கட்டிப்புலவு பிரதேசம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் மணல்குளம், சூரியகட்டைக்காடு, முசலிப் பிரதேசம், பரிகாரிக்கண்டல், பூந்தீவுக் கண்டல், மடுக்கரை, கூளாங்குளம், புதுவெளி, அரிப்பு நீர்ப்பாசன சபை, சிலாவத்துறை, CECB, முள்ளிக்குளம் கடற்படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும்

09.07.2015 வியாழன் யாழ். பிரதேசத்தில் காஞ்சிபுரம், விபுலானந்தர் வீதி, அந்தோனியார் வீதி, பானாவெட்டி ஆஸ்பத்திரி வீதி, தோப்புக்காடு, எரிபொருள் நிரப்பு நிலையத்தடி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் பட்டானிச்சூர் பிரதேசம், பட்டக்காடு பிரதேசம், வேப்பங்குளம் பிரதேசம், மாமடுவிலிருந்து மகாகச்சக்கொடியவரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன்மடு, பறயனாலங்குளத்திலிருந்து நேரியகுளம் வரை, செட்டிக்குளம் வைத்தியசாலை, பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் வி.சி.கே ஆலை, வலயம் - 01, 02, 03 மற்றும் 04, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் திருக்கேதீஸ்வரத்திலிருந்து எள்ளுப்பிட்டி ஆகிய பிரதேசங்களிலும்

10.07.2015 வெள்ளி யாழ். பிரதேசத்தில் உசன், விடத் தற்பளை, கெற்பெலி, கிளாலி, கந்தரோடை, உடுவில் கற்பக்குணை, சங்குவேலி, டொலர் கூட்டுத்தாபனம், கரிசன் 5 ஆவது பொறியியல் படைமுகாம், காங்கேசன்துறை வடக்கு கடற்படை முகாம், காங்கேசன்துறை இலங்கை கப்பற்கூட்டுத்தாபனம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் செக்கட்டிப்புலவு பிரதேசம், சின்ன வலயங்கட்டு, பரசன்குளம், விளாத்திக்குளம், இரணையலுப்பைக்குளம், காகாகையன்குளம், கோவில் புளியங்குளம், கல்மடு, பூம்புகார் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் வட்டக்கண்டல், குருவில் ஆகிய பிரதேசங்களிலும்

11.07.2015 சனி யாழ். பிரதேசத்தில் துணவி, பண்டத்தரிப்பு, மாதகல், இளவாலை, தொல்புரம், சங்கானை, சாந்தை, சில்லாலை, சீரணி, சண்டிலிப்பாய்.வட்டுக்கோட்டை ஒரு பகுதி, தொட்டியாலடி, பிரான்பற்று, மாரிசன்கூடல், சேந் தான்குளம், இளவாலை பெரியவிளான், மெய்கண்டான், சுழிபுரம், யம்புகோளபட்டினம், உபயகதிர்காமம், வல்லிபுரக்கோவில், வல்லிபுரம் நீர்ப்பாசனம், வராத்துப்பளை, கற்கோவளம், மாதனை, நெல்லண்டை, சிவப்பிரகாசம், வெளிச்சவீடு, ஜெயந்த கைத்தொழிற்சாலை பிறைவேற் லிமிற்ரெட் கற்கோவளம், கொக்குவில் நொதேர்ண் இண்டஸ்ரியல்,தொழில்நுட்பக்கல்லூரி, பல்கலைக்கழக கல்லூரி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சிப் பிரதேசத்தில்முழங்காவில், நாச்சிக்குடா, வெள்ளாங்குளம், கனகராயன்குளம், பெரியகுளம், மன்னகுளம், புதூர், பரசங்குளம், ஜகோன், 652 ஆவது படைப்பிரிவு முகாம், நாச்சிக்குடா கடற்படை முகாம், இயாஸ்மொகமட் ஐஸ்தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் பட்டானிச்சூர் பிரதேசம், பட்டக்காடு பிரதேசம், வேப்பங்குளம் பிரதேசம், மாமடுவிலிருந்து மகாகச்சக்கொடியவரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமலகம, பிரப்பன்மடு, கோவில் குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, சூசைப்பிள்ளையார்குளம், வவுனியா நகரம், கந்தசாமி கோவில் வீதி, றம்பைக்குளம், வவுனியா பஜார், நாகேந்திரம் அரிசி ஆலை, ராணி அரிசி ஆலை, S.V. அரிசி ஆலை, CEC கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் விடத்தற்தீவு, விடத்தற்தீவு வைத்தியசாலை, இலுப்பைக்கடவை, மூன்றாம்பிட்டி, வெள்ளாங்குளம், தேவன்பிட்டி,பெரியமடு, சன்னார், வெளளாங்குளம், வெள்ளாங்குளம் இராணுவ படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும்.(இ-9)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 8<br>உயரம்: 5’7"<br>தகைமை/தொழில்: BSC லண்டன்<br>தொ.இ: B/907 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 8 1/4<br>உயரம்: 5’<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/1612 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 53 செவ் 8 இல்<br>உயரம்: 5’8"<br>தகைமை/தொழில்: BSC/ லண்டன்<br>தொ.இ: B/911 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 34 உயரம்: 5’2"<br>தகைமை/தொழில்: BA/ அரச தொழில்<br>தொ.இ: G/1613 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 35 செவ் 2 இல்<br>உயரம்: 5’11"<br>தகைமை/தொழில்: A/L பிரான்ஸ்<br>தொ.இ: B/914 | பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 49 செவ் 2 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்<br>தொ.இ: G/1615 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: உத்திராடம்<br>கி.பா: 41 செவ் 4 இல்<br>உயரம்: 5’9"<br>தகைமை/தொழில்: A/L/ பிரான்ஸ்<br>தொ.இ: B/915 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 51 செவ் 1 இல்<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்: தாதி/ அரச தொழில்<br>தொ.இ: G/1616 |

## கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## ராசி பலன்

08.07.2015
(ஆனி 23, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
சப்தமி மாலை 6.12 மணிவரை
உத்தரட்டாதி முன்னிரவு 7.44 மணிவரை
இராகுகாலம் 11.58-1.28 மணிவரை
சுபநேரம்-4.28-5.58

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது சந் | | | சூரி செவ் புதன் |
| | கிரகநிலை | | |
| | | | குரு சுக் |
| | | சனி | ராகு |

**மீனம்:** புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும். எப்படி நடக்குமோ என நினைத்தகாரியம் நல்ல வடிவில் நடைபெறலாம். தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மேடம்:** நண்பர்கள் கடைசிநேரத்தில் கை கொடுத்து உதவுவர். தொழில்ரீதியாக புதிய பொருப்புக்கள் வந்து சேரும். பயணங்களால் பலன் உண்டு. மனச் சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**இடபம்:** இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம். வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும். பொது வாழ்வில் பாராட்டும், புகழும் கூடும் நாள். முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்:** தொழில் வளர்ச்சி கூடும்நாள். பேச்சை குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள். புதிய முயற்சிகள் எளிதில் கை கூடும். போசன சுகமுண்டு.

**கும்பம்:** எதிர் பார்ப்புகள் நிறைபெறும் நாள். இல்லத்தில் இன்பங்கள் கூடும்நாள். நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர். வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கடகம்:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது. முன்னேற்றம் காண்பதற்கு முயற்சியெடுக்கும் நாள். திடீர்பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு. உடல் நலன் சிராகும்.

**மகரம்:** கனிவாக பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள். தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள். அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும்.

**சிம்மம்:** குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம். ஆதாயம் இல்லாத அலைச்சல்கள் ஏற்படலாம். வாகன பழுதுச் செலவுகள் கூடும்.

**தனுசு:** பெற்றோர் மீது பிரியம் கூடும் ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். எதிர்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு. உறவினர்களின் வருகையுண்டு. எடுத்த காரியங்களை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்படலாம். பிள்ளைகளின் தேவைகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** நினைத்த காரியத்தை முடிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். உற்சாகமான நாள். வியாபார விருத்தியுண்டு. சுவாரஷ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** புதிய முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்படும் குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும். நண்பர்களின் சந்திப்பு இடம் பெறலாம். புதிய பொருட்சேர்க்கையுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படைமுகாம் அகற்றப்பட்டு சம்பூர் மக்கள் மீள்குடியேற்றம்

## கிழக்கு மாகாண ஆளுநர் உறுதி

(கொழும்பு)

**பத்து ஆண்டுகளுக்கு மேலாக தனியாரா லும், கடற்படையாலும் ஆக்கிரமிக்கப்பட்டிரு ந்த சம்பூரின் முதலாம் வட்டாரம் முதல் ஏழாம் வட்டாரம் வரையுள்ள பிரதேசம் விரைவில் விடு விக்கப்பட்டு மக்கள் மீள்குடியேற்றம் செய்யப் படுவர் என கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோ உறுதியளித்துள்ளார்.**

நேற்று முன்தினம் கிழக்கு மாகாண ஆளுநருக்கும் சம்பூர் மக்கள் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு முற்பகல் 10மணிக்கு இடம்பெற்றது.

இதில் கடற்படை முகாம் அமைந்துள்ள பகுதி முழுமையாக விடுவிக்கப்பட்டு சம்பூர் மேற்குப் பக்கமாக உள்ள 210 ஏக்கரில் கடற்படை முகாம் அமைக்கப்படும் என அவர் உறுதியளித்தார்.

இதைவிட தனியார் கையகப்படுத்திய 817 ஏக்கர் நிலமும் நீதிமன்ற தீர்ப்பின்மூலம் கிடைக்கும் எனவும் தெரிவித்தார்.

இதுவரை கடற்படை முகாம் அமைந்திருந்த சம்பூரின் ஏழு வட்டாரங்களும் அடங்கியிருந்த பிரதேசம் முழுமையாக விடுவிக்கப்படுகின்றது.

அதற்கு மாற்றீடாக சம்பூரின் மேற்குப் பக்கம் உள்ள நீனாக்கேணி, சாக்கரவட்டவன், சுண்டிக்குளி, ஏமவட்ட வன், மாவடிவட்டவன், பனங்கட்டிகுளம், கண்டியடிப் பற்றை, கற்குவாரி உள்ளிட்ட 210 ஏக்கர் நிலம் கடற்படை மயமாகின்றது.

இப்பிரதேசத்தில் உள்ள காணி உரிமையாளர்க ளிடம் ஒப்புதல் பெற்றே முகாம் அமைக்கப்படவுள்ளதாக ஆளுநர் கூறியுள்ளார். எதுவாயினும் இன்னும் ஓரிரு வாரங்களில் குடிமனை நிறைந்த சம்பூர் பிரதேசம் விடுவிக்கப்படும் என உறுதியளித்துள்ளார்.

இதன் பின்னர் நேற்று முன்தினமே மக்கள் பிரதி நிதிகளை கடற்படையினருடன் தொடர்பை ஏற்படுத்தி கல்குடா இந்து மயானம், குறிஞ்சிக்குமரன் ஆலயம் உள்ளிட்ட பிரதேசத்தை பார்வையிட்டு அதனையும் விடுவிக்கும் கோரிக்கையை மக்கள் பிரதிநிதிகள் கடற்படை தளபதியிடம் முன்வைத்துள்ளனர். கடற்ப டையினரும் அதற்கு ஒப்புதல் தெரிவித்துள்ள னர். (இ-7)

## சமகால அரசியல் நிலவரங்களால் விரக்தியடைந்துள்ள சோபித தேரர்

சமகால அரசியல் நிலவரங்களால் விரக்தியடைந்துள்ளமையால் அனைத்து அரசியல் நடவடிக்கைகளில் இருந்தும் விலக தீர்மானித் துள்ளதாக நியாயமான சமூகத்திற்கான தேசிய அமைப்பின் ஏற்பாட்டாளர் மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். நான் மேற்கொள்ளும் தீர்மானங்கள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு விழிப்புணர்வு செய்தேன்.

நியாயமான சமூகத்திற்கான தேசிய அமைப்பினை தொடங்கி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கும் வரையில் நடத்தி வந்தேன். நான் எதிர்பார்த்த தேசிய அளவிலான முக்கிய செயற்பா டுகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாமையினால் விரக்திய டைந்துள்ளேன். இதன் பின்னர் எந்தவொரு நபரையும் நான் நம்புவதற்கு தயாராக இல்லை.

நான் தற்போது அனைத்து நடவடிக்கைகளில் இருந்து விலகி எனது வேலையை மாத்திரம் பார்த்துக்கொண்டுள்ளேன். நியாயமான சமூகத்திற்கான தேசிய அமைப்பினூடாக எதிர்பார்த்தவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை.

யாருடன் வேலை செய்வது? எங்களுக்கு இலாபங்களையும், பிரயோசனங்களையும் எதிர்பார்க்கவில்லை, நாட்டிற்கு நல்லதை எதிர்பார்த்தே செயற்பட்டேன். யாருக்கும் அதனை செய்ய முடியா தென்றால் என்ன செய்வது? நான் இவற்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமும் கூறினேன் என மாதுலுவாவே சோபித தேரர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## நான் கட்சிக்காக அதிகபட்ச தியாகத்தை செய்துள்ளேன்

### நிமால் சிறிபால தெரிவிப்பு



(கொழும்பு)

கட்சி மற்றும் கட்சியாளர்களை பாதுகாத்து முன்னோக்கி செல்வதே தனது அவசியம் என எதிர்க்கட்சி தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பதுளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நான் ஒரு போதும் பதவிகளுக்கு ஆசைப்பட்டவன் அல்லன். மக்கள் பிரதமர் வேட்பாளராக பதுளை பிரதேசத்தில் என்னை எதிர் பார்த்த போதிலும், நான் கட்சி மற்றும் கட்சிக்காரர்களுக்காக அதிக பட்ச தியாகத்தை செய்துள்ளேன் என அவர் கூறியுள்ளார்.

பதவிகளை விட தாயை போல் உள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாப்பதோடு, மகிந்த ராஜபக்ஷவுடன் எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெறுவோம் என எதிர்க்கட்சி தலைவர் நிமால் சிறிபால டி சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் மலேரியாத் தடைப்பிரிவினர் இரத்தப்பரிசோதனை நடவடிக்கையில்

(கரணவாய்)

கரணவாய் ஜே/350 கிராம சேவையாளர் பிரிவில் யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் தலைமையிலான மலேசியா தடைப்பிரிவினர் இரத்தப் பரிசோதனைகளை நேற்று மேற்கொண்டனர்.

நேற்றுக்காலை கரணவாய்ப்பகுதிக்கு வீடு வீடாகச் சென்ற மலேரியா தடைப் பிரிவு உத்தியோகத்தர்கள் 70 இற்கும் மேற்பட்ட பொது மக்களின் இரத்த மாதிரிகளை எடுத்துப் பரிசோதித்தனர்.

பரிசோதனைக் கருவிகள் மற்றும் உபகரணங்களை இளங்கோ சனசமூக நிலையத்தில் வைத்து இந்த பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

மலேரியா காவி கிருமி உள்ளவர்களை இனங்காண்பதற்காக இந்தப் பரிசோதனை நடவடிக்கை முதற்தடவையாக கரணவாய் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கரவெட்டிப் பிரதேசத்தில் உள்ள ஏனைய கிராமங்களிலும் இந்தப் பரிசோதனை நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையிலிருந்து முற்றாக மலேரியா நோயை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகள் வெற்றி பெற்றுள்ள நிலையில் மலேரியா நோய்க்காவி நோயாளர்கள் யாராவது இன்றும் இருக்கிறார்களா எனக் கண்டறியும் பொருட்டே இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-60)

# முற்றுகை



(கரணவாய்)

**பருத்தித்துறை அல்வாய் முத்துமாரி அம்மன் கோயிலுக்கு அருகிலுள்ள பனம்கூடலில் மறைவாக மேற்கொள்ளப்பட்டு வந்த கசிப்பு உற்பத்தியை பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர்.**

நேற்றுக்காலை 7 மணியளவில் இராணுவ புலனாய்வுப் பிரிவினரும் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களும் இணைந்து இந்த திடீர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

காலைவேளை சற்றும் எதிர்பாராத விதத்தில் தேடுதல் நடவடிக்கைக்காக சென்றவர்களைக் கண்ட நபர்கள் கசிப்பு மற்றும் கசிப்புக் காய்ச்சுவதற்கான உபகரணங்கள் என்பவற்றைக் கைவிட்டு தலைதெறிக்க தப்பியோடியுள்ளனர்.

அங்கு சென்ற மதுவரித்திணைக்கள உத்தியோகத்தர்கள் 50 லீற்றர் கசிப்பு, 5.5 லீற்றர் ஸ்பிறிற் மற்றும் பரல்கள் என்பவற்றை கைப்பற்றியுள்ளனர். இந் நிலையில் கசிப்பு உற்பத்தியை மேற்கொண்டு வந்தவர்களைத் தேடி பொலிஸார் வலை விரித்துள்ளனர். (இ-3-60)

## செட்டியவூர் வீதி புனரமைப்பு

ஒரு கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா திட்டத்தில் தொண்டைமானாறு கெருடாவில் தெற்கு செட்டியவூர் வீதி புனரமைக்கப்பட்டு வருகிறது.

கலையரசி சனசமூக நிலைய அங்கத்தவர்களின் பங்களிப்புடன் வீதி திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இ-3-52)

## இறுதித் தேர்வும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம் சிவதொண்டன் சபையினால் நற்சிந்தனைப்பாடல் இசை இறுதித் தேர்வும் (தனி இசை) பரிசளிப்பும் எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிமுதல் தேர்வும் தொடர்ந்து பரிசளிப்பு நிகழ்வும் நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (இ-3)

## விரிவுரை

பூங்கனியியல் அபிவிருத்தியின் புதிய பரிமாணம் எனும் கருப்பொருளில் யாழ். பல்கலைக்கழக உயிரியல் மண்டபத்தில் இன்று பி.ப. 3 மணிக்கு விரிவுரை ஒன்று இடம்பெறவுள்ளது.

இதில் அவுஸ்திரேலியாவின் மேற்கு சிட்னியைச் சேர்ந்த பேராசிரியர் ஏ.எஸ்.காந்தராஜா விரிவுரை நிகழ்த்துவார். (இ-3)

## வேலைவாய்ப்பற்றவர்கள் பதிவு மேற்கொள்ள முடியும்

(யாழ்ப்பாணம்)

மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தால் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வேலைவாய்ப்பற்ற இளைஞர்-யுவதிகளுக்கான பதிவுகள் கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபம், ஆவரங்கால் சிவசக்தி மண்டபம்- அச்சுவேலி கலாமினி மண்டபம் ஆகிய இடங்களில் நாளை வியாழக்கிழமை காலை 9 மணி முதல் பி.ப.4.15 மணிவரை இடம்பெறவுள்ளன.

இப்பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வேலைவாய்ப்பற்ற இளைஞர்-யுவதிகள் அன்றையதினம் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கோப்பாய் பிரதேச செயலர் கேட்டுள்ளார். (இ-3)

## மதுபோதையில் இடையூறு 6500 ரூபா அபராதம்

பருத்தித்துறை நகரப் பகுதியில் மதுபோதையில் நின்று பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்த இரண்டு இளைஞர்களுக்கு தலா 6 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட இவர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிபதி இந்த அபராதத்தை விதித்துள்ளார். (இ-3-60)




## திருமுறை மனனப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம், சைவச் சிறார்களின் மனனம் செய்யும் ஆற்றலையும் சைவ சமய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையை முன்னிட்டு திருமுறை மனனப் போட்டியை நடத்தவுள்ளது.

இப்போட்டி தரம் 1, 2 பாலர் பிரிவிலும் தரம் 3, 4 கீழ் பிரிவிலும் நடத்தப்படவுள்ளது.

பாலர் பிரிவிற்கு "நத்தார் படை ஞானன்பசு", "பொன்னார் மேனியனே" ஆகிய இரு திருமுறைகளும்

கீழ் பிரிவிற்கு "பித்தாபிறைசூடி பெருமானே", "மற்றுப் பற்று எனக்கு இன்றி நின் திருப்பாதமே" ஆகிய இரு திருமுறைகளும் மனனம் செய்யப்படல் வேண்டும்.

திருமுறை மனனப்போட்டி எதிர்வரும் ஜூலை மாதம் 19 ஆம் திகதி நடைபெற வுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி ஜூலை 11 ஆம் திகதியாகும். பரிசில்கள் ஜூலை 24 ஆம் திகதி சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை அன்று வழங்கப்படும்.

மேற்படி திருமுறை மனனப் போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் சைவசமய அபிவிருத்திக்கழக அறிவகம் இல.82, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் பி.ப.3 மணி முதல் 6 மணி மணி வரை தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என சைவ சமய அபிவிருத்திக்கழக பரீட்சைச் செயலரும் சமய பிரசாரகருமான சு.சிறிகாந்தன் அறிவித்துள்ளார். (இ-3)

## ஆக்கக் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும்

(யாழ்ப்பாணம்).

வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு நிறுவன பயிலுநர்களின் ஆக்கக் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இலக்கம் 39, கல்லூரி வீதி, நீராவியடியிலுள்ள நியூ கேற்வே மற்றும் வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு நிறுவன யாழ். பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

## சுன்னாகம் நிலத்தடி நீர் பிரச்சினைக்கு உரிய தீர்வை பெற்றுக்கொடுக்கவில்லை

### விஜயகலா ஆதங்கம்

சுன்னாகம் பகுதியில் நிலத்தடி நீரில் உள்ள மாசினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு கடந்த கால அரசாங்கமும் தமது அரசாங்கமும் உரிய தீர்வை இதுவரை பெற்றுக் கொடுக்கவில்லை என மகளிர் விவகார பிரதி அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வலிகாமம் தெற்குப் பகுதியில் நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்துள்ளமை தொடர்பாக அவரை தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் வலிகாமம் பகுதியில் நிலத்தடி நீர் மாசடைந்திருப்பது பாரிய பிரச்சினையாகவுள்ளது.

மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள பகுதிகளிலும் இதன் பாதிப்பு காணப்படுகின்றது. ஆனால் இதுவரை நிலத்தடி நீர் மாசு தொடர்பான பிரச்சினையில் எந்தவிதமான முன்னேற்றமும் காணப்படவில்லை.

இப்பிரச்சினை தொடர்பாக ஜப்பானில் இருந்து வந்த குழு ஒன்று மீள் பரிசீலனை செய்வதாக கூறியிருந்தபோதும் இக்குழு நியமிக்கப்பட்டு 6 மாதங்களை கடந்த நிலையிலும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை.

இது தொடர்பாக நிபுணர்களிடம் நான் கேட்டபோது தற்போது நிலத்தடி நீரில் உள்ள மாசு பரவலடைவது சற்றுக் குறைவடைந்துள்ளதாக கூறியுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)





சிவன் பவுண்டேஷன் அமைப்பினால் கடந்த 4 ஆம் திகதி குடாநாட்டில் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லும் பணிகளில் கோணப்புலம் அகதி முகாம் சென்று வாழ்வாதார மேம்பாட்டுக்காக பல்வேறு மனிதாபிமான உதவிகள் வழங்கி வைக்கப்பட்டது. சிவன் பவுண்டேசன் அமைப்பின் தலைவர் கணேஷ்வரன் வேலாயுதம் நோயுற்ற முதியவரின் வைத்திய செலவுக்கு நிதி உதவி வழங்குவதையும் சுயதொழில் மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி ஒன்றையும் தந்தையிழந்த குடும்பமொன்றுக்கு வியாபாரத்தை விஸ்தரிப்பதற்காக ரூபா 20ஆயிரம் நிதி உதவி வழங்குவதையும் முகாமில் ஓலைக்குடிசை தீப்பிடித்து எரிந்து சேதத்திற்குள்ளான குடும்பத்திற்கு அதை முழுமையாக திருத்தி அமைப்பதற்கான நிதி உதவி வழங்கி வைப்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## சிவன் வேலாயுதம்

சிவன் வலது குறைந்தோர் கல்வி நிலையத்தின் பணிப்பாளர்

**கணேஷ்வரன் வேலாயுதம்**

அவர்களின் புதல்வன்

**சிவன் வேலாயுதம்**

காலமானார்.

பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள், இலங்கையிலுள்ள 14 கிளைகளையும் சேர்ந்த சிறார்களினதும் ஆழ்ந்த கவலையை அனைவருக்கும் அறிவிக்கின்றோம்.

பிறப்பு : 01.12.1995 இறப்பு : 06.07.2015

## ஆழ்ந்த துக்கத்துடன்

கணேஷ்வரன் வேலாயுதம் (தந்தை)
எட்னா வேலாயுதம் (தாய்)
லீலா வேலாயுதம் (அக்கா-அமெரிக்கா)
மறைந்த ஈஸ்வரி வேலாயுதம் (அப்பம்மா)
மறைந்த கந்தர் வேலாயுதம் (அப்பப்பா)
மறைந்த மாட்டன் கோமஸ் (அம்மப்பா)
மறைந்த ஜஸ்மின் கோமஸ் (அம்மம்மா)
ராஜேஸ்வரி அத்தை (லண்டன்)
யோகேஸ்வரி அத்தை (லண்டன்)
மறைந்த டிகேஸ்வரி (அத்தை)
மறைந்த புவனேஸ்வரி (அத்தை)
திலகேஸ்வரி அத்தை (நெல்லியடி)
இரத்தினேஸ்வரி அத்தை (லண்டன்)
கமலேஸ்வரி அத்தை (கொழும்பு)
சர்வேஸ்வரன் பெரியப்பா (லண்டன்)
மறைந்த விக்கினேஸ்வரன் - பெரியப்பா



தரணியில் வந்துதித்த எம் மகனே
எம் அன்பும் பாசமும் நிறைந்த
– பொக்கிஷம் நீ
பார்க்கும் இடமெல்லாம் – உன்
பாசமுகம் தெரியுதையா
சிறகொடித்த பறவைகள் போல்
கலங்குகின்றோம் – நாமிங்கு



(C-1501)

தகவல் : கணேஷ்வரன் வேலாயுதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கிடையிலான விவாதப் பயிற்சிப் பட்டறைகள்

(மல்லாவி)

**இலங்கை தமிழ் விவாதிகள் கழகத்தின் ஏற்பாட்டில் நாடு தழுவிய ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் அறிவுசார் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் விவாதப்பயிற்சிப் பட்டறைகளை நடத்தி தேசிய ரீதியில் விவாதப் போட்டியொன்றை நடத்தி மாணவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கவுள்ளதாக இலங்கை தமிழ் விவாதிகள் கழகத்தின் துணைச்செயலாளர் செல்வி.மாதினி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

நாடு தழுவிய ரீதியில் நுவரெலியா, கண்டி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மாத்தளை, திருகோணமலை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் தரம்9 தொடக்கம் தரம்13 வரையில் கல்வி பயிலும் மாணவர்களில் விவாதத்துறையில் ஆர்வம் உள்ளவர்களுக்கு விவாதப்பயிற்சி பட்டறைகளை நடத்தி முடிவில் விவாதப்போட்டியொன்றையும் நடத்தவுள்ளது.

இதன் முதல் கட்டமாக எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் காலை 8.30 மணிதொடக்கம் பிற்பகல் 4மணிவரை கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் உள்ள மாணவர்களுக்கு விவாதப்பயிற்சி பட்டறை நடத்தப்படவுள்ளது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4மணிவரை முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளில் கல்வி பயின்று வருகின்ற தரம் 9தொடக்கம் தரம் 13 வரையிலான மாணவர்களில் பாடசாலை ரீதியாக தலா எட்டு பேர் வீதம் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு விவாதப்பயிற்சி பட்டறை மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் நடத்தப்படவுள்ளது.

விவாதப்பயிற்சி பட்டறையில் கலந்து கொள்ளவுள்ள பாடசாலைகள் அந்தந்த வலயக்கல்வித் திணைக்களங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# பேருந்து உரிமையாளர் மீது குழுவாக இணைந்து தாக்குதல்

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் கீழ் இயங்குகின்ற மல்லாவி சாலையில் தனியார் பேருந்து உரிமையாளர் ஒருவரை மத்திய பேருந்து உரிமையாளர் ஒருவர் குழுவாக இணைந்து மூர்க்கத்தனமாகத் தாக்கியமையால் அவரின் தலையின் உட்பகுதி, செவிப்பறை என்பன பாதிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் மல்லாவி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் கடந்த 5ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் மல்லாவி நகரப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

பேருந்து தொடர்பில் ஏற்பட்ட பணி முரண்பாடு காரணமாக பிரச்சினைக்குரிய பேருந்து உரிமையாளர் ஒருவர் குழுவாக இணைந்து தனித்துநின்ற மத்திய பேருந்து உரிமையாளரை மூர்க்கத்தனமாக தாக்கியுள்ளார். இச்சம்பவத்தின் போது செல்வபுரம் பாண்டியன் குளத்தைச் சேர்ந்த சிவகோபால் சந்திரகுமார் (வயது-39) என்ற குடும்பஸ்தரே தாக்கப்பட்டவராவார்.

சம்பவம் தொடர்பாக அவசர பொலிஸ் இலக்கமான 119இற்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அவ்விடத்திற்கு விரைந்த மல்லாவி பொலிஸார் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டனர். (2-15)

## முன்னாள் போராளிகளை ஆதரிப்பது கட்டாயமாகும்

## கிழக்கு மாகாணசபை உறுப்பினர் தெரிவிப்பு

(வவுனியா)

நல்லாட்சி நடைபெறும் இக்காலகட்டத்தில் ஜனநாயகப் பாதையில் பயணிக்க விரும்பும் முன்னாள் போராளிகளை ஆதரிப்பது தமிழ்மக்களின் தலையாய கடமையாகும். தவிர அவர்களை தடுப்பது நியாயமற்றது என கிழக்கு மாகாணசபை உறுப்பினர் கு.புஸ்பகுமார் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அண்மையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

முன்னாள் போராளிகளின் கைது அல்லது தண்டனைகளுக்கு எதிராக குரல் கொடுக்க யாரும் இல்லை. ஜனநாயக வழியில் திரும்பும் அவர்களை ஆதரிப்பதற்கும் எவருமில்லை. அப்படியானால் அவர்களின் எதிர்காலம் என்ன என்பதை அனைவரும் சிந்திக்க வேண்டும்.

தொழில் வாய்ப்புக்காக அவர்கள் செல்லும்போது, முன்னாள் போராளி எனும் பெயர் சூட்டப்பட்டு திருப்பி அனுப்பப்படுகின்றனர். பொலிஸ் நிலையங்களுக்கு செல்லும் போதும் குற்றவாளிகள் போல் நடத்தப்படுகின்றனர். இன்னும் பலர் சிறையில் வாடுகின்றனர். இவ்வாறு பல இன்னல்களை அவர்கள் எதிர்நோக்குவதால், அவர்களது குடும்பங்களின் நிலை பரிதாபத்துக்குரியதாகின்றன.

ஆகவே, ஜனநாயக நீரோட்டத்தில் இணைந்து அவர்களின் பிரச்சினைகளை அவர்களே தீர்த்துக்கொள்ள முன்வருவதில் எவ்வித தவறும் இல்லை என்றார். (2)



வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகனின் மூலதன நன்கொடையின் கீழ் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பல வருடகாலமாக எவ்வித கொடுப்பனவுகளும் இன்றி கடமையாற்றிக் கொண்டிருக்கும் 10 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அண்மையில் துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைக்கப்பட்டதை படத்தில் காணலாம்.

# வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப்போட்டி நாளை

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டி -2015 நாளை வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை வரை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இத் தடகளப் போட்டியின் ஆரம்ப நாள் நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வடக்கு மாகாண விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கலந்து கொள்ளவுள்ளார்.

இத் தடகளப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வு எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண விளையாட்டுத் துறை அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்ளவுள் ளார். (2-9)

# ஆசிரியர்களுக்கான இடமாற்றத்திற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(மல்லாவி)

வடக்கு மாகாணக் கல்வித்திணைக்களத்தின் கீழுள்ள பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற இலங்கை ஆசிரியர் சேவையிலுள்ள ஆசிரியர்களின் 2016 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழுள்ள பாடசாலைகளில் கஷ்ட, அதிகஷ்ட பிரதேசங்களில் கடமையாற்றி ஐந்து ஆண்டுகள் முழுமையான சேவைக் காலத்தை பூர்த்தி செய்தவர்களும் மற்றும் வசதியான பிரதேசத்தில் ஆறு ஆண்டுகள் முழுமையான சேவைக்காலத்தை பூர்த்தி செய்தவர்களும் இடமாற்றத்திற்காக விண்ணப்பிக்க முடியும்.

இவ்விடமாற்றங்கள் பின்வரும் நிலைகளில் வடக்கு மாகாண சபையின் நிர்வாக பரப்பினுள் மேற்கொள்ளப்படும்.

இதற்கமைய வலயத்திற்குள்ளான இடமாற்றங்கள், கல்வி வலயங்களுக்கு இடையிலான (மாவட்டங்களுக்கு உள்ளான) மாவட்டங்களுக்கிடையிலான இடமாற்றங்கள், மாகாணங்களுக்கிடையிலான இடமாற்றங்கள் ஆகிய முறைகளில் ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் வழங்கப்படவுள்ளது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களினை ஆசிரியர்கள் கடமையாற்றுகின்ற கல்வி வலயங்களுக்கு எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும்.

வலயக்கல்வித் திணைக்களங்கள் ஆசிரியர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களினை வலயக்கல்வி இடமாற்ற சபையினைக் கூட்டி பரிசீலனை செய்து அவற்றுள் சிபார்சு செய்யப்படுபவற்றை மட்டும் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளருக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னதாக அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

அத்தோடு இடமாற்றம் தொடர்பான விண்ணப்பப்படிவமும் அறிவுறுத்தல் குறிப்புக்களும் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




## மணல் ஏலவிற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு மணல் ஏல விற்பனை நடைபெறுமென நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.

அன்றையதினம் ஏல விற்பனைக்கான மணலினை ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு அரைமணித்தியாலத்திற்கு முன்னர் பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிடமுடியும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனர்வாழ்வு பெற்ற

# முன்னாள் போராளிகள் 10பேரே சிறைவாசம் அனுபவிக்கின்றனர்

## பூந்தோட்ட புனர்வாழ்வு முகாம் அதிகாரி கூறுகிறார்

(மல்லாவி)

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உறுப்பினர்களாக இருந்து செயற்பட்டு 2009 ஆம் ஆண்டு இராணுவத்திடம் சரணடைந்து புனர்வாழ்வு பெற்று சமூகத்துடன் இணைக்கப்பட்ட 12ஆயிரம் முன்னாள் போராளிகளில் குற்றச்சாட்டுக்களில் ஈடுபட்டவர்கள் என கூறப்படும் சுமார் 10 பேருக்கு உட்பட்டவர்களே சிறைச்சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் புனர்வாழ்வு காலத்தில் வழங்கப்பட்ட பயிற்சிகளின் அடிப்படையில் சுயதொழில்களில் ஈடுபடுவதுடன் தினசரி கூலி வேலைகளையும் மேற்கொண்டு தமக்கான வாழ்வாதார வருமானத்தை தேடிக் கொள்வதாக வவுனியா மாவட்ட பூந்தோட்ட புனர்வாழ்வு முகாம் அதிகாரி லெப்டினன்ட் கேணல் பீ.பி.எச்.பெர்னாண்டோ தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், சமூகத்துடன் இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகள் சுமார் 12 ஆயிரம் பேர் சமூக நீரோட்டத்துடன் இணைந்து வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கு புனர்வாழ்வு பெற்ற காலப்பகுதியில் வழங்கப்பட்ட பயிற்சிகளான மேசன், வயரிங், நீர் குழாய் பொருத்துதல், விவசாய செய்கை, கைப்பணி பொருள் உற்பத்தி போன்ற புனர்வாழ்வுப் பயிற்சிகளைக் கொண்டு சமூகத்துடன் இணைக்கப்பட்ட போது தமக்கான வாழ்வாதார வருமானத்தையும் இதன் மூலம் தேடிக் கொண்டனர்.

இதேவேளை இவர்களுக்கு வழங்கப்பட்ட மும்மொழி பயிற்சிகளின் ஊடாக சிறந்து விளங்கியவர்கள், தனியார் மற்றும் அரச நிறுவனங்களில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர்.

தற்போது பூந்தோட்ட முகாமில் ஒரு பெண் போராளி உட்பட 50 பேர் வரை புனர்வாழ்வு பெற்றுவருகின்றனர்.

இவர்களது காலமான ஒரு வருட முடிவின் பின்னர் குடும்பத்துடன் இணைக்கப்பட்டு சமூக மயமாக்கப்படவுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளனர். (2-15)

உருத்திரபுரத்தில் இருந்து கிளிநொச்சி

# காலை வேளையில் பேருந்து சேவை இன்மையால் பயணிகள் காத்திருப்பு

(கிளிநொச்சி)

உருத்திரபுரத்தில் இருந்து கிளிநொச்சிக்கு காலை வேளையில் பேருந்து சேவை இன்மையால் பல்வேறுப்பட்ட கஷ்டங்களை எதிர் கொள்வதாக பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நோயாளர்கள் மருத்துவ சேவையைப் பெறுவதற்கும் வைத்தியசாலை விடுதிகளில் தங்கி நின்று சிகிச்சை பெற்று வருகின்ற நோயாளர்களை பார்வையிட செல்வதற்கும் உரிய நேரத்திற்கு பேருந்து போக்குவரத்து சேவை இன்மையால் பல்வேறுபட்ட இன்னல்களை எதிர்கொண்டு வருவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.



உருத்திரபுரத்தில் இருந்து கிளிநொச்சிக்குக் காலை 6 மணிக்கு பேருந்து போக்குவரத்து சேவையொன்று நடத்தப்பட்டால் நோயாளர்கள் தொடக்கம் அரச உத்தியோகத்தர்கள் வரை அச்சேவையினால் பயனடையக் கூடியதாக இருக்குமென இப்பகுதியிலுள்ள பொது அமைப்புக்கள் உரிய அதிகாரிகளுக்கு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சருக்கும் தனியார் பேருந்து சங்கத்தினருக்கும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு மகஜர்கள் வழங்கி சுட்டிக்காட்டி இருந்தனர்.

இதேவேளை இதற்கான நேர அட்டவணையொன்று தயாரிக்கப்படுவதாகவும் அது விரைவில் நடைமுறைப்படுத்தப்படுமெனவும் கூறப்பட்டு பல மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரை நடைமுறைப் படுத்தப்படவில்லையென பொது மக்கள் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

எனவே பொதுமக்களின் நலன்கருதி காலை 6 மணிக்கும் உருத்திரபுரத்தில் இருந்தும் இரவு 7.30 மணிக்கு கிளிநொச்சியில் இருந்தும் பேருந்து சேவைகளை ஏற்படுத்தித் தருமாறு பாதிக்கப்பட்டபொதுமக்கள் கோரிக்கை விடுகிகின்றனர். (2-254)

வன்னி தேர்தல் தொகுதியில்

# 2,52,777 பேர் வாக்களிக்கத்தகுதி

## தேர்தல் ஆணையாளர்

(மல்லாவி)

அடுத்தமாதம் நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலின் போது வன்னி மாவட்டத் தேர்தல் தொகுதியில் 2 இலட்சத்து 52 ஆயிரத்து 777 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய மன்னார் மாவட்டத்தில் 7 ஆயிரத்து 232 பேரும் முல்லைத்தீவு மாவட்ட த்தில் 63 ஆயிரத்து 840 பேரும் வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 705 பேருமாக மொத்தம் 2 இலட்சத்து 52 ஆயிரத்து 777 பேர் வாக்களிக்கத்தகுதி பெற்றுள்ளனர் என அவர் மேலும் கூறியுள்ளார். (2-15)




# காணிப்பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்குமாகில் உதவித் திட்டங்கள் வழங்குவோம்

## கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

காணி அபிவிருத்தி அமைச்சின் நேரடி தலையீட்டின் கீழ் கிளிநொச்சி, கண்டாவளை, மத்திய வகுப்புத்திட்ட காணிகளில் குடியிருப்பவர்களுக்கு தீர்வினை பெற்றுத் தந்து அந்த காணிகளை மக்களுக்கு வழங்கும் பட்சத்தில், அவர்களுக்கான உதவித் திட்டங்களை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

கண்டாவளை பிரதேசத்தில் ஏற்கனவே வழங்கப்பட்டு பயன்பாடின்றிக் கிடந்த மத்திய வகுப்புத்திட்ட காணிகளில் ஆயிரத்து 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் கடந்த 30 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கான காணி உரிமம் இல்லாததால் நிரந்தர வீட்டுத்திட்டங்கள், நிலையான வாழ்வாதாரம் என்பவற்றை பெற்றுக் கொள்ள முடியாது மிகவும் பின் தங்கிய நிலையில வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், இவ் விடயம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அர சாங்க அதிபர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஏற்கனவே வழங்கப்பட்ட மத்திய வகுப்புத்திட்ட காணிகள் பயன்படு த்தப்படாமல் இருந்தமையானது அவர்களது அக்கறையின்மையை காட்டுகின்றது. இவ்வாறான காணிகள் அரசாங்கத்தினால் மீளப் பெறப்பட்டு காணிகள் இன்றி மீள்குடியேறி மிக நீண்டகாலமாக வாழ்ந்து வரும் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பது தான் என்னுடைய அபிப்பிராயம.

அந்த வகையில், இந்த காணிகள் தொடர்பாக காணி அபிவிருத்தி அமைச்சு தலையிட்டு இதற்கு உடனடியாக தீர்வொன்றினைப் பெற்று தற்போது இருக்கின்ற மக்களுக்கு இந்த காணிகளை வழங்குமாயின் அந்த மக்களுக்கான உதவித்திட்டங்களை வழங்குவதற்கு தயாராகவுள்ளோம் என்று கூறினார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1185

# அதிசய பாறை... அசத்தல் ஆர்தர்!

முற்காலத்தில் இங்கிலாந்தை ஆள்வதற்கு அப்போது ராஜா யாரும் இல்லை. ஊர்ப் பெரியவர்கள் சேர்ந்துதான் ஒவ்வொரு பிரதேசத்தையும் நிர்வாகம்செய்து வந்தார்கள். தங்களுக்கு ஒரு வலிமையான ராஜா வேண்டும் என்று மக்களுக்குத் தோன்றியது. வலிமையாக இருந்தால் மட்டும் போதாது. அறிவாளியாகவும், நேர்மையானவராகவும் மக்கள் நலனில் அக்கறை உடையவராகவும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒருவரை எப்படிக் கண்டுபிடிப்பது என்று மக்கள் ஆலோசனை செய்தார்கள்.


இதற்கு இடையே ஒருநாள், நகர மையத்தில் ஒருபாறை திடீரெனக் காட்சியளித்தது. இதுவரை யாரும் பார்த்திராத பாறை அது. அந்தப் பாறையில் ஒரு வாள் ஊன்றப்பட்டிருந்தது. அந்த வியப்பான பாறையைக் காண்பதற்கு மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தார்கள்.

இந்தப் பாறை மிகவும் அதிசயமாக இருக்கிறதே! ஒருவாள் வேறு இருக்கிறது! இங்கே எப்படி வந்தது என்று ஒருவரை ஒருவர் கேட்டுக் கொண்டார்கள். அந்த வாளை எடுப்பதற்காக முயற்சி செய்தார்கள். ஆனால், அது மிகவும் வலுவாகப் பாறையில் ஊன்றப்பட்டிருந்தது. தமக்கான ராஜாவைத் தேர்ந்து எடுப்பதற்காக கடவுளே இந்தப் பாறையையும் வாளையும் உருவாக்கி இருக்க வேண்டும் என்று மக்கள் நினைத்தார்கள்.

பாறையில் ஊன்றப்பட்டிருக்கும் வாளை இழுத்து எடுப்பவரே அரசர் ஆவதற்குத் தகுதியானவர் என்றும் முடிபு செய்தார்கள். இந்தச் செய்தி நாடெங்கும் பரவியது. ராஜா ஆகும் எண்ணத்துடன் வாளை உருவப் பலரும் முயன்றார்கள். ஆனால், எவ்வளவுதான் முயன்றாலும் வாளை அசைக்கக்கூட முடியவில்லை.

பலசாலிகளான பலரும் முயற்சி செய்தும் பயன் எதுவும் ஏற்படவில்லை. பாறையும் பாறையில் இருக்கும் வாளும் எல்லோருக்கும் சவால்விட்டபடி நகரின் மத்தியில் பல மாதங்களாக இருந்தன.

இந்தச் சமயத்தில் ஆர்தர் எனும் பெயருடைய சிறுவன் ஒருவன் அங்கே வந்தான். ஆர்தரின் அண்ணன் ஒரு படைவீரன். வாளைப் பார்த்த போது ஆர்தர் மகிழ்ச்சி அடைந்தான்.



அந்த வாளைப் பாறையிலிருந்து பிடுங்கி எடுத்தால் ராஜா ஆகிவிடலாம் என்பது அவனுக்குத் தெரியவே தெரியாது. அவன் எண்ணம் எல்லாம் வேறு ஒன்றாக இருந்தது.

அடடா, எவ்வளவு அருமையான வாள்! இதை எடுத்துச்சென்று அண்ணனுக்குப் பரிசாக அளிக்கலாம். போருக்குப் போகும்போது அண்ணனுக்கு இந்த வாள் மிகவும் உபயோகப்படும் என்று நினைத்தான். ஆர்தர், வாளைப் பிடித்து ஒருமுறைதான் இழுத்தான். மிகச் சுலபமாக அவன் கையோடு அது வந்துவிட்டது.

ஹா........ஹா........ ஹா....... பிரமாதம்! திடீரென்று அங்கே வெடிச் சிரிப்பு கேட்டது. மந்திரவாதி மெர்லினுடைய சிரிப்புதான் அது. தன் மந்திர வித்தையால் பாறையையும் வாளையும் அங்கே உருவாக்கியது மெர்லின்தான். மந்திரவாதி சொன்னான்: சிறுவனே! நான்தான் இவற்றை இங்கே ஸ்தாபித்தேன். நீ இப்போது செய்த செயலின் மூலமாக, இந்த நாட்டுக்கு ராஜாவாக ஆகியிருக்கிறாய். நீதான் இந்த நாட்டை ஆள்வதற்குத் தகுதியானவன். வா! நான் எல்லா வித்தைகளையும் உனக்குக் கற்றுக்கொடுக்கிறேன் என்றான்.

ஆர்தர், மெர்லினுடன் சென்றான். மெர்லினும் ஆர்தலுக்கு எல்லாக் கலைகளையும் கற்றுக்கொடுத்தான். திறமை மிகுந்த சிறுவனான ஆர்தர் அனைத்தையும் வெகு விரைவில் கற்றுக்கொண்டாான. சீக்கிரமே அவன் இங்கிலாந்தின் அரசனாக முடிசூடிக் கொண்டான்.

ஆர்தரின் ஆட்சி தர்ம நியாயத்தின்படி இருந்தது. அவன் ஆட்சியில் மக்கள் எல்லா நலன்களுடன் வாழ்ந்தார்கள்.

நான் ராஜாவாகவும் நீங்கள் குடி மக்களாகவும் இருந்தாலும் நீங்கள் எல்லா விடயங்களிலும் என்னுடன் துணையிருங்கள். நாம் நாட்டுக்காக ஒன்றிணைந்து செயற்படுவோம்! என்று மக்களிடம் அடிக்கடி சொல்வான் ஆர்தர்.

புதிய ராஜாவை மக்களுக்கு மிகவும் பிடித்துவிட்டது. எதிரிகளின் ஆக்கிரமிப்பை எதிர்ப்பதற்காக வலிமை வாய்ந்த ஒரு படை வேண்டும் என்று ஆர்தருக்குத் தோன்றியது. உடனே அவன் வலிமையும் துணிவும் உள்ள ஆட்களைக் கொண்டு ஓர் அமைப்பை உருவாக்கினான். நாட்டை எதிரிகளிடமிருந்து காப்பாற்றுவது மட்டுமல்ல, கஷ்டப்படுபவர்களுக்கு உதவுவதும் அந்த அமைப்பின் நோக்கம். அந்தப் படைவீரர்கள் தங்கள் ராஜாவின் எல்லாக் கட்டளைகளையும் உடனடியாக நிறைவேற்றினார்கள். ஆர்தர் ராஜாவின் வீரப்போராளிகள் என்று புகழ்பெற்ற இவர்களுக்குத் தளபதி என்று எவரும் இல்லை. எல்லோருக்கும் சமமான பதவிகள் அளிக்கப்பட்டிருந்தன.

போர்க்காலத்தில் ராஜாவும் இவர்களில் ஒருவனே. நாட்டைக் காக்கிற ஒரு படைவீரன்! ஆர்தர், எதிரிகளைத் துரத்தியடித்தான். துன்பத்தில் இருப்பவர்களுக்கு உதவி செய்தான். மக்களின் விருப்பத்துக்கு ஏற்றபடி அவன் வெகுகாலம் ஆட்சி செய்தான். இங்கிலாந்தை ஆட்சி செய்தவர்களில் மிகச் சிறந்த ராஜா அவன்தான். நாட்டுக்கு ஆபத்து ஏற்படும்போது மக்களைக் காப்பாற்றுவதற்காக ஆர்தர் ராஜாவும் அவன் வீரர்களும் இப்போதும் வருவார்கள் என்று மக்கள் நம்புகிறார்கள்.

★★★★★★★★★★

## 07.2015 08 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1099 - முதலாம் சிலுவைப் போர்: 15,000 கிறிஸ்தவ போர் வீரர்கள் பட்டினியுடன் ஜெருசலேம் அருகில் சமய ஊர்வலம் சென்றனர்.
- 1497 - வாஸ்கொடகாமாவின் இந்தியாவுக்கான முதல நேரடிப் பயணம் தொடக்கம்.
- 1709 - ரஷ்யாவின் முதலாம் பியோத்தர் போல்ட்டாவா என்ற இடத்தில் சுவீடனின் பன்னிரண்டாம் சார்ல்ஸ் மன்னனைத் தோற்கடித்தான்.
- 1815 - பதினெட்டாம் லூயி பாரிஸ் திரும்பி பிரான்சின் மன்னனானான். இரு வாரங்களே பதவியிலிருந்த நான்கு வயது இரண்டாம் நெப்போலியன் பதவி இழந்தான்.
- 1859 - சுவீடன்-நோர்வே மன்னனாக சுவீடனின் பதினைந்தாம் சார்ல்ஸ் முடி சூடினான்.
- 1889 - வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் முதலாவது இதழ் வெளியானது.
- 1892 - நியூபவுண்லாந்தின் சென் ஜோன்ஸ் நகரில் இடம்பெற்ற பெரும் தீ நகரில் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது.
- 1982 - ஈராக் ஜனாதிபதி சதாம் உசேன் படுகொலை முயற்சியிலிருந்து தப்பினார்.
- 1985 - திம்புப் பேச்சுவார்த்தைகள்: இலங்கை அரசுக்கும் ஈழ விடுதலை அமைப்புகளுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின.
- 1990 - ஜேர்மனி ஆர்ஜென்டீனாவை வென்று 1990 கால்பந்து உலகக்கிண்ணத்தை வென்றது.
- 2003 - சூடான் விமானம் விபத்துக்குள்ளாகியதில் 117 பேர் கொல்லப்பட்டனர். இரண்டு வயது குழந்தை ஒன்றுமட்டும் உயிர் தப்பியது.
- 2006 - ம. பொ. சி., புலவர் குழந்தை ஆகியோரின் நூல்கள் நாட்டுடமை ஆக்கப்பட்டன்.

### பிறப்புகள்

- 1895 - ஈகர் தம், ரஷ்யா இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1971)
- 1906 - பிலிப் ஜான்சன், அமெரிக்கக் கட்டடக் கலைஞர் (இ. 2005)
- 1949 - ராஜசேகர ரெட்டி, ஆந்திர முதலமைச்சர் (இ 2009)
- 1972 - சௌரவ் கங்குலி, இந்தியத் கிரிக்கெட் துடுப்பாளர்

### இறப்புகள்

- 1695 - கிறிஸ்டியான் ஹைஜன்ஸ், டச்சு கணிதவியலாளர் (பி. 1629)
- 1979 - சின்-இட்டீரோ டொமனாகா, நோபல் பரிசு பெற்றவர் (பி. 1906)
- 1979 - றொபேர்ட் வூட்வேர்ட், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1917)
- 1989 - வி. வி. வைரமுத்து, ஈழத்து நாடகத்துறையின் முன்னோடி, நடிகமணி (பி. 1924)
- 1994 - கிம் இல்-சுங், வடகொரியத் தலைவர் (பி. 1912)
- 2007 - சந்திரசேகர், 11 ஆவது இந்தியப் பிரதமர், (பி. 1927)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 233

# அஹங்காரத்தை விடுதல்

ஆக்ஞா சக்கரமானது புருவங்களுக்கு மத்தியில் இருக்கிறது.

சமஸ்கிருதத்தில் ஆக்ஞா என்றால், ஆணை அல்லது உத்தரவு என்று பொருள். ஆக்ஞா சக்கரம் தலைமைச் சக்கரமாக அறியப்படுகிறது.

அது கடுமைத்தனத்தாலும் அஹங்காரத்தினாலும் பூட்டப்படுகிறது (அடைபடுகிறது).

அதை கள்ளங்கபடமற்ற தன்மையினாலும் எளிமையினாலும் அறிவுக்கூர்மையினாலும் அஹங்காரத்தை அதன் எல்லா வடிவங்களிலும் விடுவதன் மூலமும் மலரச் செய்ய முடியும்.

தியான முறை: திவ்ய நேத்ரா தியானம்- ஒரு ஜொராஸ்ட்ரிய தியான முறையில் இருந்து எடுக்கப்பட்டது.

ஆக்ஞா சக்கரம் சக்ரராஜ் என்று அடைக்கப்படுகிறது- இதுவே எல்லா சக்கரங்களுக்கும் தலைமைச் சக்கரமாகும்.

இதைத் தூண்டி விடுவதற்காகச் செயற்படாத மதங்களே இல்லை என்று சொல்லும் அளவிற்கு இந்த சக்கரம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஆக்ஞா திறக்கும் பொழுது, முழு இருப்புத் தன்மையுமே ஒரு மாறுபட்ட பிரதேசத்தில் பிரதேசத்தில் பிரவேசிக்கிறது; ஒரு முழு அடுக்கு புலன்கள் திறக்கின்றன. இதுதான் எல்லா கீழை நாடுகளின் கடவுள்களின் நெற்றியிலும் மூன்றாவது கண்ணாகக் குறிப்பிடப்படுகிறது. ஆக்ஞா விழிப்படைந்ததன் குறியீடே மூன்றாவது கண்.



நீங்கள் இந்தியாவின் ஒரு புனிதம் வாய்ந்த நகரமான வாரணாசியில் இறந்தால், தானாகவே விடுதலை பெற்று விடுவீர்கள் என்று ஒரு பழங்கூற்று இருக்கிறது.

வாரணாசி என்பது நாம் அறிவது போல் ஒரு வெறும் நகரமல்ல. அது வாரணா என்கிற புருவங்கள், நாசியாகிய மூக்கைச் சந்திக்கும் இடமும்கூட; அதுவே ஆக்ஞா சக்கரத்தின் சரியான இருப்பிடமுமாகும். விடுதலை பெற்ற அல்லது ஞானமடைந்த நிலையில் அஹங்காரம் அழிந்துவிடுவதன் அடையாளக் குறியீடே அது.

ஆக்ஞா சக்ரம் அஹங்காரம், கடுமைத்தனம், நம்மைப் பற்றியே அதிகம் சிந்தித்தல் (அதனால்தான் வாழ் க்கையையும் மிகவும் கடுமையாக எடுத்துக் கொள்கிறோம்) ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்டது.

கடுமைத்தனம் என்றால் என்ன?

கடுமைத்தனம் என்பது மற்ற எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டு, ஏதோ ஒன்றுக்கு மட்டுமே, தேவையற்ற, அதிக முக்கியத்துவம் கொடுப்பது, வாழ்க்கை முழுவதுமே ஒரு நாடகம்தான், அது ஒவ் வொரு நிமிடமும் விரிந்து தன்னை வெளிப்படுத்திக் கொள் கிறது என்பதைப் புரிந்துகொள்ள இயலாமையிலிருந்தே அது முனை விடுகிறது. வாழ்க்கையில் அதிக எதிர்பார்ப்பு இருப்பதன் விளைவே கடுமைத்தனம்.

ஒரு சின்னக் கதை...

இரண்டு சிறுவர்கள் கடற்கரையில் மணற்கோட்டை கட்டி விளையாடிக் கொண்டிருந்தனர். திடீரென்று அவர்களுக்குள் சண்டை வந்து, அதில் ஒரு சிறுவன் கோபத்தில் மணற்கோட்டையை உதைத்துவிட்டான். மற்ற சிறுவனோ மன்னனிடம் சென்று தனது முக்கியமான பிரச்சினையைப் பற்றி முறையிட்டான். இந்த ஒன்றுமில்லாத வெறும் மணற் கோட்டைக்காக இவ்வளவு செய்கிறானே என்று அவனைக் கண்டு மன்னன் சிரிக்க ஆரம்பித்தான்.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# கருவாச்சி காவியம்



## வைரமுத்து-181

...கருவேல மரத்துல கட்டிக் கெடக்குற பசுமாட்டுக்குள்ளேயும் போயிப் பாத்துட்டு வந்தான்.

ஒனக்குக் கி.... கி... கிறுக்குப் புடிச்சிருச்சா? போ... போ... போ... போயிப் படு ஆத்தா.

கெனாக் கண்டனா? எம் பிள்ள வரலையா? கண்கட்டி வித்தையா? குறளி வேலையா? ஆளுவராமப் பேச்சு மட்டும் வருமா? புத்திக்குள்ள புழுவாக் குடையுது கருவாச்சிக்கு; படபடபடங்குது பால் குடுத்து வத்திப்போன பழைய மொல.

எம் பிள்ளையப் பாக்கணும்; எத்தனையோ வருசமாச்சு அவன் என்னிய விட்டுப் போயி. பிள்ளையப் பாக்கணும்.

அன்னைக்கு வரைக்கும் பொத்தி வச்சிருந்த பாசம் பொத்துக்கிட்டு ஊத்தவும், தேஞ்சு கெடந்த திரேகத்துக்குள்ள ஒரு தெம்பு வந்திருச்சு.

எப்படியும் பாத்தாகணும் எம்பிள்ளைய.

வேர் புடிச்ச நாத்து தலையத் தூக்கி நிக்கிற மாதிரி விழுந்து கெடந்த மனசு எந்திரிச்சிருச்சு.

வெறுங்கையோடயா போறது வீட்டுக்கு?

மருமக இருக்கா. ரெண்டு பக்கிகள வேற பெத்து வச்சிருக்கானாம்.

நஞ்சு போன துணிகளையாச்சும் மஞ்சப் பையில புதுசுன்னு புடிச்சுப் போகணும்; நமத்துப் போன பலகாரம் ரெண்டக் கையில புடிச்சுப் போகணும்; அதுக்குத் துட்டு வேணுமே துட்டு...

துட்டுச் சேக்குற ஆசை சிக்குப் புடிச்ச குடுமியப் புடிச்சு ஆட்டுது பாவம் அவள. எங்கிட்டுச் சேக்குறது துட்டு? காஞ்சு கருவாடாக் கெடக்கு ஊரு. மனுசங்களையும் மரம்மட்டைகளையும் தின்டு முழுங்கிப் பசியாறிக் கிட்டிருக்கு பஞ்சம்.

முந்திமாதிரி ஓடியாடி வேல செய்ய முடியல; உக்காந்து செய்யிற வேலையாப் பாத்தா. புளியம் பழம் தட்டுனா. துவரங்குச்சிய எடுத்துப் பொழுதுக்கும் புளியம்பழம் தட்டி அன்னாடம் அரைக்காரூவா சேத்தா. புளியம்பழ ஓடுமிச்சம்; அதை எரு தட்ட எடுத்துக்கிட்டா. புளிய வெதையும் மிச்சம். கஞ்சியில்லாத பிள்ளைகளுக்கு அதை அவிச்சும் குடுத்துக்கிட்டா. இந்தா இந்தான்னுப் புடிச்சு ஒம்போதுரூவா சேத்துட்டா.

கல்லு ஒடைக்கப் போனா கரட்டுக்கு. கனகமும் பவளமும் அவளுக்குச் சுத்தியல் ஒண்ணு வாங்கிக் குடுத்தாக சொந்தத்துக்கு. மொத மூணு நாளு கல்லொடைக்க வரல. கல்லொடைக்கிறேன்னு விரல்ல நச்சுன்னு போட்டு நகத்தப் பேத்துக்கிட்டா. அடிபட்டா, நீங்களும் நானும் என்னாம்போம்....? அம்மாம்போம்; இல்ல- அய்யோம்போம். அவ அழகுசிங்கம்ன்னா. கருவுலயிருந்து பிள்ள வெளியவந்து பல வருசமாச்சு; ஆனா நெஞ்சவிட்டு எறங்கல.

அடுத்த ஒரு மாசத்துல இன்னொரு பத்து ரூவா சேத்துட்டா. மொத்தம் பத்தொம்போது இருக்கு பையில. நாளைக்கு மகன் வீட்டுக்குப் போறதா முடிவு பண்ணிட்டா.

மகனுக்குப் பணியாரம் சுட்டெடுத்தா பாருங்க... தலைக்கு வேப்பெண்ண வைக்கவே வக்கில்லாமக் கெடக்கிறவ மகனுக்கின்னதும் பசு நெய்யில குறிப்பாட்டுறா பணியாரத்தை. ஏலமும் சுக்கும் போட்டுக் கருப்பட்டிப்பாலக் காய்ச்சி எடுத்தா. ஈயச்சட்டியில பணியாரத்த நெப்பிக் கருப்பட்டிப் பால் ஊத்தி ஊத்தி ஊற வச்சா.



(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.கவுடன் இணைவது குறித்து இதுவரையில் தீர்மானிக்கவில்லை

## முஸ்லிம் காங்கிரஸ் விளக்கம்

(கொழும்பு)

**இம்முறை பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து போட்டியிடுவது குறித்து இதுவரை தீர்மானிக்கவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.**

பொதுத் தேர்தலில் எத்தரப்பிற்கு ஆதரவு வழங்குவதென்பது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நேற்று முன்தினம் மாலை முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் கூடியுள்ளனர்.

அங்கு இறுதி இணக்கப்பாடு எட்டப்பட வில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் சபிக் ரஜாப்தீன் தெரிவித்துள்ளார்.

வேட்பு மனு வழங்குவதில் ஐக்கிய தேசிய கட்சி முன்வைத்த ஒப்பந்தங்களினாலே இவ்வாறான சிக்கல் நிலை தோன்றியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹகீம் தலைமையில் மேலும் பல கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துளளார்.(இ-7)

# மகிந்த குடும்பத்தின் காலை உணவுக்கு 94 இலட்சம் ரூபா

## முன்னாள் எம்.பி.தெரிவிப்பு

மகிந்த ராஜபக்ஷ குடும்பமும் சுற்றமும் ஒருநாள் காலை உணவிற்காக 94 இலட்ச ரூபாவினை செலவிட்டுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நலீன் பண்டார தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாட்டு தலைவர்கள் மாநாடு நடைபெற்ற சந்தர்ப்பத்தில் மகிந்த ராஜபக்ஷ குடும்பமும் நண்பர்களும் ஒருவேளை காலை உணவிற்காக மட்டும் 94 இலட்ச ரூபாவினை செலவிட்டுள்ளனர்.

அலரிமாளிகைக்கு உணவு வழங்கிய ஹில்டன் ஹோட்டல் 94 இலட்ச ரூபா கொடுப்பனவு வழங்கப்படவில்லை என மகிந்த ராஜபக்ஷ குடும்பத்திற்கு எதிராக குற்றம் சுமத்தியுள்ளது.

2013ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அப்போதைய செயலாளர் லலித் வீரதுங்கவின் பெயரிற்கு ஹோட்டல் விலைப்பட்டியலை அனுப்பி வைத்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடையும் வரையில் இந்தப் பணம் செலுத்தப்படவில்லை. வெள்ளை, கறுப்பு கொக்லடன் பூசப்பட்ட நுவரெலிய ஸ்டோபரி, கறுப்பு கொக்லட்டில் மூழ்கடிக்கப்பட்ட மாம்பழம், கிறீம் சீஸ், வெள்ளரி சான்ட்விட்ச், மீன் சான்ட்விட்ச், அபெல் டெனிஸ், அன்னாசி டெனிஸ் உள்ளிட்ட பல உணவு வகைகள் இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ அல்லது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ அலரிமாளிகையில் அரச பணத்தில் விருந்துபசாரங்களை நடத்துவதில்லை என நலீன் பண்டார ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார். பிரதமர் விருந்துபசாரங்களை அலரிமாளிகையில் நடத்தினாலும் அது அவரது சொந்த செலவில் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வேட்பாளர்கள் வெளிப்படுத்த வேண்டும்



எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடவுள்ள அனைத்து வேட்பாளர்களும் தமது உண்மையான சொத்துக்களையும் பொறுப்புக்களையும் வெளிப்படுத்த வேண்டும் என்று பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

தமது முகநூலின் மூலம் அவர் இந்தக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடுவோர் சுத்தமான கைகளுடன் போட்டியிட வேண்டும் என்பதே தமது எதிர்பார்ப்பு என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தநிலையில் கடந்த ஐந்து வருடங்களாக தாம் பொதுமக்களின் நிதியில் சம்பளம் பெற்றுக்கொண்டு வாழ்வது தமக்கு வெட்கத்தை தருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)


இணுவில் கந்தசுவாமி கோவில் மஹோற்சவம்




இன்று பதினெட்டாம் திருவிழா

ஒருமுகத் திருவிழா

இணுவில் நொச்சியம்பதி கந்தவேள் கட்டளைக்கலிப்பா

இணுவில் நொச்சியம்பதி கந்தன் மஹோற்சவம்
எண்ணியின்று பதினெட்டாம் திருவிழாவிலே
துணையாய் ஐங்கரன் சங்கரன் போல் வேளும்
தோன்றியே ஒரு குதிரைமேல் வருகிறான்
அணையும் காட்சியோ வேலுடன் மயிலுமாய்
அழகு செய்திட ஐயன் முருகவேள்
இணையும் நாவல் மரத்தினிற் காட்சியும்
இனிது சொல்லும் கதையும் அறிவீரே

அன்று நாவல் மரம் மேல் முருகனார்
ஔவை கேட்ட பழத்தினைப் போடவும்
நன்று என்றே ஔவை சுவைத் துண்ண
நாடிஊதியுண் பழம் சுட்ட பழமென்ன
நின்று வாடிடும் ஔவைக்கு முருகனார்
நீடிலை வடிவேலுடன் நின்றதை
இன்று நேற்றல்ல என்றுமில் விழாவிலே
எடுத்துக் காட்டுமிது நாவற்பழவிழா

ஆலவட்டம் கொடி குடை சகிதமாய்
அசைந்து மேளங்கள் தாளங்கள் ஆர்த்திட
தீபம் காட்டியே அந்தணர் அர்ச்சிக்க
சிவநாதா முருகா என அடியார் போற்ற
கோல மாகவே குஞ்சரி வள்ளியோடு
குலவி வேலன் கொலுவாய் வலம் வரும்
ஞாலம் போற்றிடு ஆண்டுதோறும் நிகழ்
நல்விழாவினை நாடிக்கண் டுய்மினே
முருகா உனைப் பாடவைத்தாய்

சித்திரங்கள் கதை சொல்லும் கோபுரம்
சென்று வான்தொடும் இணுவைப் பெருங்கோயில்
அத்தனாம் கந்தசுவாமி குகனுக்கு
ஆயிரம் நாமம் அர்ச்சித்தார் அந்தணர்
பக்தி மிக்க அடியார் திருக்கூட்டம்
பண்ணின் பாடல் பல புகழ் சூட்டினார்
உத்தமனான பதினெட்டாம் விழாயானும்
உணர்ந்து பாமாலை ஓதிப் புனைந்தேனே

இணுவில், முதுபெரும்புலவர் கலாபூஷணம்
புலவர் க.சிற்றம்பலம்

பதினெட்டாம் திருவிழா உபயகாரர்

(சி-1389)


# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## வீழி

Botanical Name:Cadaba fruticosa

Family:Capparidaceae

பல கிளைகளையுடைய பெருஞ் செடிவகையைச் சார்ந்தது. இதன் பட்டை மண்ணிறமாகவும் நார்த் தன்மையுடையதாகவும் இருக்கும். இலைகள் 2.5–3 செ.மீ. நீளமாகவும் கோளவடிவமைப்புடையதாகவும் இருக்கும். பூக்கள் மங்கிய வெள்ளை நிறமுடையவை. மஞ்சள் கலந்த சிவப்பு நிறமுடைய பழங்களுள் கறுப்பு நிற விதைகள் காணப்படும்.

### பரம்பலும் இனவிருத்தியும்

யாழ்.மாவட்டத்தில் நாவற்குழி, கைதடி, மருதனார்மடம், சரசாலை மற்றும் நெடுந்தீவு பிரதேசங்களில் பரம்பல் அதிகமாகக் காணப்படும். இம்மூலிகையை வேர்க்கன்றுகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

### மருத்துவ பயன்கள்

இதன் உலர்ந்த இலைகளைப் பொடித்து கோப்பி விதைகளுடன் சேர்த்து இடித்து கோப்பி மென்பானமாக பயன்படுத்தினால் இரும் புச்சத்து நிறைந்த மென்பானமாவதுடன் உடலுக்கு நல்ல பலத்தையும் கொடுக்கும்.

இதன் இலைகளை துவையல் செய்து அல்லது சமைத்து உண்ணின் கரப்பான், வெள்ளை, பசியின்மை, வயிற்றுப்புழு, வெளிக்குப் போகாமை இவைகளை போக்கி உடலுக்கு வன்மையைத் தரும்.

இலையைக் குடிநீரிட்டு ஆமணக்கு நெய் சேர்த்துக்கொடுக்க கழிச்சலை உண்டாக்கி புழுக்களை வெளிப்படுத்தும் வாத, பித்த, கப குற்றங்களை தன்னிலைப்படுத்தும்.

இலையை வதக்கி கட்டிகளுக்கு வைத்துக் கட்ட கட்டிகளின் வீக்கம் தணியும். அல்லது இலையை நீரிட்டுக் காய்ச்சி வீக்கங்களின் மீது யாதுமொரு தைலத்தையும் பூசிய பின் இந்



நீரை விட்டுக்கழுவ வீக்கம் குறையும்.

முதிர்ந்த வீழியின் பட்டைகள் மஞ்சள் கலந்த வெண்ணிறமாகவும் நார்த்தன்மை நிறைந்ததாகவும் சிறிது கடினமானதாகவும் காணப்படும். நார்த்தன்மையான இதன் குச்சிகளை பல் தீட்ட பயன்படுத்தலாம் (Tooth brush) போன்றது.

வீக்கத்துடன் கூடிய மூட்டு வியாதிகளில் இதன் இலைகளை சிறுகச் சிறுக அரிந்து பொட்டணியாக சூடு சுட்டி ஒத்தடம்கொடுக்க வீக்கம் குறைந்து வலி தணியும்.

குறிப்பு: வீழியின் கிழங்கு பசும் பொன்னிறமாக இருக்கும் வெட்டி சோதித்து நீர்த்தளத்தில் நிற்கும் மூலிகையை வெட்டிப் பார்த்தால் நுனியில் தேங்காயைப் போல் இருக்கும்.

இதன் இலையை வாயிலடக்கி எவ்வளவு தூரமும் ஓடலாம். நிற்கும்போது ஏதாவது ஒன்றை பிடித்துக்கொண்டு நிற்க வேண்டும். அவ்வளவு சக்தியைக் கொடுக்கக் கூடிய ஒரு மூலிகையாகும். சித்தர்கள் தமது இரசவாதத்தில் இம் மூலிகையை பயன்படுத்தியுள்ளார்கள்.

இவ்வாறு அரிய செய்கைகளைக் கொண்ட மருத்துவ பகுதிகளையுடைய இம்மூலிகையின் சில பகுதிகளை நாம் நமது அன்றாட வாழ்வில் முன்பு கூறிய மருத்துவக் குணங்களின் அடிப்படையில் பயன்படுத்தினால் அதிலொரு பகுதி ஆரோக்கியத்தையாவது பெற முடியுமல்லவா? அத்துடன் மூலிகைகள் சேகரிக்கும் இடங்கள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய தேசியக் கட்சியில் இணையப் போவதில்லை

## தயாசிறி ஜயசேகர தெரிவிப்பு

**ஐக்கிய தேசியக் கட்சியில் தாம் இணைந்து கொள்ளப் போவதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என வடமேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.**



கொழும்பு ஊடகமொன்றுக்கு தொலைபேசி மூலம் அளித்த பேட்டியிலேயே இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர்,

இவ்வாறு வெளியான தகவல்கள் வெறும் வதந்திகளேயாகும். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினால் மட்டுமே அரசாங்கத்தை அமைக்க முடியும்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குருநாகல் மாவட்டத்தில் போட்டியிடுவதில் எனக்கு எவ்வித ஆட்சேபனையும் கிடையாது.

மகிந்த ராஜபக்ஷ வேட்பாளர் பட்டியலில் இணைக்கப்பட்டமை கட்சிக்கு மேலதிக வெற்றியாகும்.

நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் அங்கம் வகிப்பது சவாலுக்குரிய விடயமல்ல எனவும் தமக்கென தனியான வாக்காளர் கூட்டமொன்று காணப்படுவதாகவும் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். (இ-7)

# காணாமற்போன கண்காணிப்பு விமானம்; இலங்கையிடம் உதவிகோருகிறது இந்தியா

காணாமற் போயுள்ள இந்திய கடற்படைக்கு சொந்தமான டோனியர் விமானம் தொடர்பில் இந்திய அதிகாரிகள் இலங்கையிடம் உதவி கோரியுள்ளனர். இந்திய கரையோர பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த டோர்னியர் விமானம் 3 வீரர்களுடன் கடந்த ஜூன் மாதம் 8 ஆம் திகதி முதல் காணாமல் போயிருந்தது.

வழமை போல காரைக் கால் மற்றும் கூடலூர் கரையோரப் பகுதிகளில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இந்த விமானம் காணாமற்போனது.தீவிரமான சோதனைகளின் பின்னரும் இதனை கண்டுபிடிக்கமுடியவில்லை. இந்நிலையில் குறித்த விமானம் இலங்கையின் கடற்பகுதியில் காணாமற போயிருக்கலாமா? என்ற சந்தேகத்தை இந்திய தரப்பினர் எழுப்பியுள்ளதோடு இது தொடர்பில் இலங்கையிடம் உதவியும் கோரியுள்ளனர். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 350 | 300 |
| தக்காளி | 100 | 120 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 50 |
| கோவா | 120 | 120 | 100 | 80 |
| கரட் | 120 | 200 | 250 | 120 |
| பூசணி | 30 | 40 | 40 | 30 |
| புடோல் | 60 | 80 | 60 | 60 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 160 | 150 | 140 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 180 | 160 | 130 |
| வெண்டிக்காய் | 100 | 70 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 160 | 100 |
| பயற்றங்காய் | 80 | 80 | 60 | 80 |
| லீக்ஸ் | 100 | 180 | 140 | 100 |
| பீற்றூட் | 100 | 140 | 120 | 120 |
| கறிமிளகாய் | 120 | 180 | 200 | 120 |
| முருங்கைக்காய் | 120 | 300 | 250 | 300 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 80 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 25-40 | 50 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 200 | 120 | 160 | 120 |
| வெங்காயப்பூ | 200 | 300 | 280 | 140 |
| முள்ளங்கி | 40 | 30 | 100 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 20 | 20 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 30 |

# மகிந்தவின் வெற்றியைத் தடுப்பதற்கே முன்கூட்டி தேர்தல் நடத்தப்படுகின்றது

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் வெற்றியீட்டக் கூடாது என்பதற்காக தேர்தல் முன்கூட்டியே நடத்தப்படுகின்றது எனவும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் போர்க்குற்றவியல் விசாரணை அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னதாக தேர்தல் நடத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தீர்மானித்தார் எனவும் சர்வதேச ஊடகம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

போர்க்குற்ற விசாரணை அறிக்கையில் இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தால் அந்த அறிக்கையை சாதகமாகக் கொண்டே மகிந்த ஆட்சியை கைப்பற்றுவார்.

இது குறித்து மேற்குலக நாடுகள் ஜனாதிபதியை அறிவுறுத்தியிருந்தன. செப்டெம்பர் மாதம் விசாரணை அறிக்கை வெளியிடப்படவுள்ளது.

சில வேளைகளில் இந்த அறிக்கை ஓகஸ்ட் மாத இறுதியில் ஊடகங்களுக்கு கசியக் கூடும்.

எனவே விசாரணை அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேர்தலை நடத்தத் தீர்மானித்தார்.

மேலும் பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் ஏற்படக் கூடிய குழப்ப நிலைமைகளை கருத்திற் கொண்டும் ஜனாதிபதி தேர்தலை நடத்தத் தீர்மா னித்துள்ளார், என சர்வதேச ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 425

வெங்கடேஸ் சுபா


வாழ்க்கையில் அன்பான
உறவு கிடைப்பது
முக்கியம் அல்ல...
வாழ் நாள் முழுவதும்
அன்பாக இருப்பதே
முக்கியம்...!

காயா காயத்திரி




கீர்த்தனா கருணாகரன்

தந்தை : பரீட்சை நல்லா எழுதினீயாடா
மகன் : நல்லா எழுதியிருக்கன்பா
தந்தை : எத்தனை கேள்வி கேட்டாங்க?



மகன் : 5 கேள்விகள்
தந்தை : எத்தனை கேள்வி செய்யாமல் விட்டாய்?
மகன் : முதல் 3 கேள்வியும் கடைசி 2 கேள்வியும்
தந்தை : ?????

கஜன் மகாதேவன்



என்னடா
நடக்குது
இங்க
நான்
வந்திட்டன்டா

மின்னெரி மின்னெரிகொட்டுவ




சிவம் சக்தி

எனக்கு எங்க அப்பா அம்மா
I love u னு பெயர் வைச்சிருக்கலாம்...



எத்தனை பொண்ணுங்க லவ்வ
சொல்லியிருப்பாங்க!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கம் இலங்கையின் போர்க்காயங்களைக் குணப்படுத்துமா?



25 ஆண்டுகளுக்குப் பின்னர் முதற் தடவையாக கடந்த மாதம் தனது சொந்தக் காணிக்குச் சென்ற பரமேஸ்வரி உதய குமாரன் மிகவும் அதிர்ச்சியுற்றார். பரமேஸ்வரியின் சொந்த இடம் பளை வீமன்காமம். இவரது வீட்டில் எவ்வித தளபாடங்களும் காணப்படவில்லை.

ஓடுகள் அனைத்தும் சேதமடைந்து விட்டன. அத்துடன் கதவுகளும் காணப்பட வில்லை. 1990 நவம்பரில் பரமேஸ்வரி தனது வீட்டை விட்டு வேறிடத்திற்கு குடி பெயர வேண்டியநிலை ஏற்பட்டது. இவர் மட்டுமல்ல இவர் போன்ற பல ஆயிரக்கணக் கான மக்கள் போர்ச் சூழல் காரணமாக தமது சொந்த வீடுகளை விட்டு இடம்பெயர வேண்டியேற்பட்டது.

சிறிலங்கா இராணுவத்தினரின் போர் விமானங்கள், போர்க் கப்பல்கள் போன்ற மும்முனைத் தாக்குதல்களிலிருந்தும் தமது உயிரைக் காப்பாற்றுவதற்காக மக்கள் தமது கைகளுக்கு அகப்பட்ட பொருட்களை மட்டும் எடுத்துக் கொண்டு தமது சொந்த இடங்களை விட்டு வெளி யேறினர். இதற்கு பரமேஸ்வரியின் குடும் பம் மட்டும் விதிவிலக்கல்ல.

இதன் பின்னர் பரமேஸ்வரியின் சொந்த ஊர் சிறிலங்கா இராணுவத்தினரால் உயர் பாதுகாப்பு வலயம் எனப் பெயரிடப்பட்டது. 25 ஆண்டுகளுக்குப் பின்னர் கடந்த ஏப்ரல் மாதமே மீண்டும் இந்த மக்கள் தமது சொந்த இடத்திற்குச் செல்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது. 80,000 வரை யான மக்களின் உயிர்கள் பறிக்கப்பட்ட உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து ஆறு ஆண்டுகள் கடந்த பின்னரே தற்போது உயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்பட்டு வருகின்றன.

'நான் எனது வீட்டை 25 ஆண்டுகளுக் குப் பின்னர் தற்போது பார்க்கும் போது என்னால் என்னைக் கட்டுப்படுத்த முடிய வில்லை. எனது வீட்டைச் சூழப் பற்றைகள் வளர்ந்துவிட்டன. காட்டைப் போல் மாறி விட்டது' என பரமேஸ்வரி கூறுகிறார்.

சிறிலங்காவின் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடந்த ஜனவரியில் ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்ட போது, நாட்டின் வடக்கு கிழக்கில் மீளிண க்கப்பாடு ஏற்படுத்தப்படும் என வாக்குறுதி வழங்கியிருந்தார். மைத்திரியின் முன்னு ரிமைகளில் வடக்கு கிழக்கில் மீளிணக் கப்பாட்டை ஏற்படுத்துவதும் ஒன்றாகும்.

போரின் போது சிதைக்கப்பட்ட, அழிக் கப்பட்ட மற்றும் சேதமாக்கப்பட்ட கட்டடங் கள் மற்றும் வீதிகள் மீளவும் நிர்மாணி க்கப்பட்டாலும் கூட, போரின் தாக்கத்தால் உடைந்துள்ள மனங்களையும் இதயங் களையும் மீள்வும் ஒட்டவைப்பதற்கான எவ்வித மீளிணக்கப்பாடும் மேற்கொள்ள ப்படவில்லை என கடந்த மாதம் சிறிலங்கா இராணுவ வீரர்களின் சேவையைப் பாரா ட்டி இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஜனாதிபதி சிறிசேன தெரிவித்திருந்தார்.

சிறிலங்கா இராணுவத்தினரால் பயன் படுத்தப்பட்ட மற்றும் கையகப்படுத்தப்பட்ட தமிழ் மக்களின் காணிகள் மற்றும் சொத் துக்கள் தற்போது சிறிசேன அரசாங்கத் தால் மெது மெதுவாக உரிமையாளர்களி டம் கையளிக்கப்படுகின்றன. இருப்பினும் இன்னமும் 13,000 குடும்பங்கள் இடம் பெயர்ந்தோர் முகாங்களில் அல்லது உறவி னர்களின் வீடுகளில் தங்கியிருப்பதாக தரவுகள் சுட்டிநிற்கின்றன.

சிறிலங்கா இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடை யில் தொடரப்பட்ட யுத்தத்தின்போது இடம் பெற்ற பல்வேறு குற்றச் செயல்கள் தொடர் பில் உள்நாட்டு விசா ரணைப் பொறிமுறை ஒன்றை மேற் கொள்வேன் என சிறிசேன உறுதியளித்திருந்தார்.

சிறிலங்காவின் உள்நாட்டுப் போர் தொடர்பான விசாரணை அறிக்கை ஒன்றை ஐ.நா மனித உரிமைகள் பேர வையில் முன்வைப்பதற்கான கால அவகாசத்தை செப்ரெம்பர் மாதம் வரை தந்துதவுமாறு சிறிசேன கோரியிருந் தார். இதற்கு அமெரிக்காவும் தனது ஆத ரவை வழங்கியிருந்தது.

பரமேஸ்வரி போன்று கணவன் மாரை இழந்த பெண்களுக்கு உதவு வதற்கென சிறிசேன அரசாங்கம் வடக்கில் அலுவலகம் ஒன்றை அமை த்துள்ளது. ஆனால் இவ்வாறான முயற்சிகள் மட்டும் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்துவதற்குப் போதாது என தமிழ்த் தலைவர்கள் வாதிடுகின்றனர்.

சிறிசேனவின் நகர்வு வரவேற் கத்தக்கது எனவும் ஆனாலும் தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை மற்றும் தமிழர் தாயகப் பிரதேசங்களிலிருந்து இராணுவ வீரர்களை அகற்றுதல் போன்ற முக்கிய பிரச்சினை களை சிறிசேன அரசாங்கம் முன்னெடுக்கத் தவறியுள்ளதாகவும் தமிழ்த் தலைவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

'இவ்வாறான பிரச்சினைகள் முன்னு ரிமைப்படுத்தப்படாவிட்டால், மீளிணக்கப்பாட் டில் எவ்வித உண்மையான முன்னேற்ற மும் ஏற்படாது' என யாழ்ப்பாணப் பல்கலை க்கழகத்தின் விரிவுரையாளர் குமார வடி வேல் குருபரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள வரலாற்று முக்கிய த்துவம் மிக்க கோட்டையின் சுவர்கள் தற் போது செப்பனிடப்பட்டுள்ளன. ஆனால் போரின போது குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட நீர்த் தாங்கி இன்னமும் அகற்றப்படவில்லை. தென்னிலங்கையிலிருந்து சிறிலங்காவின் வடபகுதி நோக்கி 'போர்ச் சுற்றுலாப் பயணி கள்' வருகை தருகின்றனர். இவர்கள் பேரு ந்துகளில் பெருமளவில் வடக்கைப் பார்வை யிடச் செல்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் போர்க் காலத்தில் அழிவுற்றிருந்த தொடருந்து நிலையம் தற் போது மீண்டும் செயற்படத் தொடங்கியுள் ளது. இதுபோன்ற பல்வேறு இடங்கள் போர்ச சுற்றுலாப் பயணிகளால் பார்வையிடப்படு கின்றன. 1990 இல் தனது பயணிகள் சேவையை நிறுத்தியிருந்த யாழ்தேவி மீண்டும் தற் போது தனது பணியை ஆரம்பித்துள்ளது. வடக்கு கிழக்கின் மீள்கட்டு மாணங்களுக் காக முன்னால் அதிபர் மகிந்த ராஜபக்ச பல மில்லியன்களை செலவிட்டுள்ளார்.

அத்துடன் 2013 இல் முதற் தடவையாக வடக்கு மாகாணசபை தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுவதற்கான அனுமதியையும் மகிந்த வழங்கியிருந்தார். இவ்வாறான பல மீள்கட்டுமாணப் பணிகள் மேற்கொள்ளப் பட்ட போதிலும் மக்களின் மனங்களிலிருக் கும் ஆழமான வடுக்களைக் களைவதற்கு ராஜபக்ச எவ்வித முயற்சிகளையும் மேற் கொள்ளவில்லை என விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

சிறிலங்காவின் உள்நாட்டுப் போரில் ஈடு பட்ட இரண்டு தரப்பினரும் பல்வேறு மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகவும், இறு திக்கட்டப் போரின் போது 40,000 வரை யான பொதுமக்கள் படுகொலை செய்யப் பட்டதாகவும் ஐ.நா வல்லுனர் குழு 2011 இல் வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டியிரு ந்தது.

பாதுகாப்பு வலயங்கள், வைத்தியசாலை கள், வழங்கல் பாதைகள் போன்ற முக்கிய பல இடங்களைக் குறிவைத்து சிறிலங்கா இராணுவத்தினர் எறிகணை வீச்சுக்களை மேற்கொண்டதாக வல்லுனர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

இதேபோன்று தமிழீழ விடுதலைப் புலிகள் சிறுவர்களைப் படையில் இணைத் தமை, பொது மக்களை மனிதக் கேடயங்க ளாகப் பயன்படுத்தியமை போன்ற பல்வேறு குற்றங்களில் ஈடுபட்டதை வல்லுனர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறான குற்றச்சாட்டுக்களை விசா ரணை செய்வதற்கான உள்நாட்டு விசா ரணைப் பொறிமுறை ஒன்றை அமைக்க வுள்ளதாக சிறிசேன அரசாங்கம் வாக்குறுதி வழங்கியிருந்தது. இதற்கான 'தொழினுட்ப உதவிகளை' ஐ.நாவிடமிருந்து பெற்றுக் கொள்வதாகவும் சிறிசேன அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஆனால் உள்நாட்டு விசாரணைப் பொறி முறையில் சிறுபான்மைத் தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ளவில்லை எனவும் இதற்கு முன்னர் அமைக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுக்களின் அரச சார் செயற்பாடு களே இதற்குக் காரணம் எனவும் விரிவுரை யாளர் குருபரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில், போரின் போது காணாமற்போன பல ஆயிரக்கணக்கான மக்கள் தொடர்பாக விசாரணைகள் மேற் கொள்ளப்படுகின்றன. போரின் போது கணவன்மாரை இழந்த பெண்களின் நலன் களில் அக்கறை செலுத்த சிறிலங்காவின் தற்போதைய அரசாங்கம் முயற்சிக்கிறது. இதற்கான வழிவகைகள் ஆராயப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் மட்டும் 31,000 வரையான பெண் தலைமைத்துவக் குடும் பங்கள் உள்ளதாக பெண்கள் விவகாரத் திற்கான யாழ்ப்பாண மாவட்டத்தின் ஒரு ங்கிணைப்பாளர் நவரட்ணம் உதயாணி தெரிவித்துள்ளார். இவர்களில் பெரும்பாலான வர்கள் பொருத்தமான தொழில் வாய்ப்பைப் பெற முடியாது தவிக்கின்றனர். இவர்கள் மீள்திருமணம் செய்வதற்கு தமிழ்க் கலா சாரம் தடையாகக் காணப்படுகிறது.

யாழ்ப்பாணத்தின் புறநகரில் சிறிய வீடொன்றில் வாழும் 57 வயதான சிவபாலு லேவதியம்மாவின் கணவர் போரின் போது கொல்லப்பட்டார். இதனால் இவர் தனது பிள்ளைகளை வளர்ப்பதற்கு பெரிதும் சிரம ப்படுகிறார். போரின் போது இவரது கணவர் கொல்லப்பட்ட பின்னர், குடும்பத்தைப் பரா மரிப்பதற்காக மீன்களைக் கருவாடாக்கி விற்கும் பணியில் இவர் ஈடுபடுகிறார்.

இவரது மகனான சிவநேசன் 2009ல் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட போதும் இதுவரை எவ்வித தகவல்களும் கிடைக்கப் பெறவில்லை என லேவதியம்மா கூறுகிறார். 'எனது மகன் என்னிடம் வரு வான் என நான் கனவு கண்டேன். அவன் என்னிடம் வந்து என்னைக் கட்டியணைத்து சாப்பாடு தருமாறு கேட்பதாக நான் கனவு கண்டேன். இந்தக் கனவை நான் மாதத்தில் இரண்டு தடவைகளாவது காண்கிறேன்' என லேவதியம்மா தெரிவித்தார்.

இதுவரையில் சிறிலங்கா அரசாங்க த்தால் 1000 ஏக்கர் நிலங்கள் மட்டுமே மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. ஆனா லும் சிறிலங்கா இராணுவத்தால் 10,000 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ள தாக சிறிலங்காவின் மீள்குடியேற்ற அமை ச்சின் செயலாளர் றஞ்சினி நடராஜபிள்ளை தெரிவித்தார். ஆனாலும் இதை விட அதிக ளவிலான காணி சிறிலங்கா இராணுவத் தினர் வசம் உள்ளதாக சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலங்களில் சிறிலங்காவின் முன்னாள் அரசாங்கம் புதிய முகாங் களை, கடற்கரையோர விடுதிகள் எனப் பல்வேறு களியாட்ட சார் கட்டடங்களை அமைத்திருந்தது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் பரமேஸ்வரி மற்றும் அவரது அயலவர்கள் மீண்டும் அவர்களது சொந்த இடங்களைச் சென்று பார்வையிட அனுமதிக்கப்பட்டதானது இவர்களுக்கு மகிழ்ச்சியாக உள்ளது. எனி னும் காடுகளால் சூழப்பட்ட தமது வீடுகள் மற்றும் காணிகளை சுத்தப்படுத்து வதற்கு இவர்கள் பல மைல் தூரத்திலிருந்து நாள் தோறும் பயணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

மீள்குடியேற்ற மக்களுக்கு சிறிலங்கா அரசாங்கத்தால் 280 டொலர்கள் வழங்கப் படுவதாக தெரிவிக்கப்பட்ட போதிலும் தாம் இதுவரையில் 100 டொலர்கள் மட்டுமே பெற்றுள்ளதாகவும் நிலங்களைத் துப்பரவு செய்வதற்காக இந்த நிதி வழங்கப்பட்டுள்ள தாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது இராணுவத்தினரால் கைய ளிக்கப்பட்ட இடங்களில் ஆங்காங்கே மிதி வெடிகள் தொடர்பான எச்சரிக்கைப் பதா கைகள் காணப்படுகின்றன. ஏதாவது வெடி பொருட்களைக் கண்டால் உடனடியாகத் தொலைபேசியில் தொடர்பு கொள்வதற் கான தொலைபேசி இலக்கமும் வழங்கப் பட்டுள்ளது.

தனது அயலவர்களும் விரைவில் சொந்த இடத்தில் குடியேற வருவார்கள் என பரமேஸ்வரி நம்புகிறார். தான் இப் போது மகிழ்வாக இருப்பதாகவும் நான் எனது சொந்த வீட்டிற்குத் திரும்பி வந்தமை தன்னை உற்சாகப்படுத்தியுள்ளதாகவும் பரமேஸ்வரி தெரிவித்தார்.

ஒவ்வொரு நாளும் பூசகர் ஒருவர் பரமேஸ்வரியின் சொந்த ஊரிலுள்ள சிறிய கோயிலில் பூசை செய்வதற்கு வருகை தருகிறார். இது ஒரு பிள்ளையார் கோயி லாகும். இக்கோயிலில் பூசை செய்யும் பூசகரான கணேசமூர்த்தி சர்மாவிற்குத் தற்போது 70 வயது. இவர் முதன் முதலாக ஏப்ரல் 21 அன்று இந்த இடத்தைப் பார்வை யிடச் சென்றார். ஆனால் கோயிலிருந்த காணி பற்றையால் சூழப்பட்டிருந்தது.

தன்னால் இதனை முதலில் அடை யாளங் காணமுடியவில்லை என இவர் தெரிவித்தார். இவரது கோயிற் காணியில் 350 ஆண்டுகால ஆலமரம் ஒன்று இப்போ தும் நிற்பதைக் கண்டபோது பூசகர் மிகவும் மகிழ்ச்சியும் மனநிம்மதியும் அடைந்தார். தற்போது இங்கு பூசைகள் இடம்பெறு கின்றன. மக்கள் பூசகரிடம் ஆசிர்வாதம் பெறுகின்றனர்.

தமது சமூகத்தை மீளக்கட்டியெழுப்பு வதற்கான முதலாவது நகர்வாக மக்கள் இங்கு மீளவும் வருகை தருகின்றனர். நீர் மற்றும் மின்சார வசதியை ஏற்படுத்தித் தருவதாக வாக்குறுதி அரசாங்கம் வாக்கு றுதி வழங்கியுள்ளதால் 'மக்கள் நம்பிக்கை யுடன் உள்ளதாக' பூசகர் தெரிவித்தார்.

-நித்தியபாரதி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாந்தோட்டையில் போட்டியிடுவதற்கு மகிந்த அஞ்சுகிறார்

## அமைச்சர் கஜந்த கருணாதிலக சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எந்த மாவட்டத்தில் போட்டியிடுவது என்பதில் குழப்பத்தில உள்ளார். மேலும் தனது மாவட்டமான அம்பாந்தோட்டையில் போட்டியிடுவதற்கு அவர் பெரும் அச்சப்படுகின்றார் என்று ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவிததுள்ளார்.**



ஜனவரி 8 ஆம் திகதி வெற்றி கொண்ட சவால்களை மீளவும் வெற்றிகொள்வது எமக்கு பெரிய சவால் அல்ல. எவர் தேர்தலில் களமிறங்கினாலும் நாமே பெரும்பான்மையை பெற்று ஆட்சியமைப்போம் என்றும் அவர் குறிப்பிட்டார். ஐக்கிய தேசியக்கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கத்தினால் அரச ஊழியர்கள் புறக்கணிக்கப்படுவதாகவும், அநீதி இழைக்கப்படுவதாகவும் குற்றம் சுமத்துகின்றார். எனினும் எந்த ஆட்சிக் காலத்தின் போது அரச ஊழியர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது என்பது அனைவரும் அறிந்த விடயமாகும்.

குறுகிய காலத்தினுள் நாட்டு மக்களுக்கு பல்வேறு சேவைகளையும் வழங்கியுள்ளோம். இந் நிலையில் முன்னாள் ஜனாதிபதியின் குற்றச்சாட்டுகள் நியாயமற்றதாக மாறியுள்ளது.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீளவும் அரசியலில் பிரவேசிக்க முனைகின்றார். இவரது வருகையினால் நாம் அச்சம் அடையப்போவதில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எந்த மாவட்டத்தில் போட்டியிடுவது என்பதில் குழப்பத்தில் உள்ளார். மேலும் தனது மாவட்டமான அம்பாந்தோட்டையில் போட்டியிடுவதற்கு பெரும் அச்சப்படுகின்றார்.

ஜனவரி 8 ஆம் திகதி வெற்றி கொண்ட சவால்களை மீளவும் வெற்றி கொள்வது எமக்கு பெரிய சவால் அல்ல. எவர் தேர்தலில் களமிறங்கினாலும் நாமே பெரும்பான்மையை பெற்று ஆட்சி அமைப்போம்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்புமனு நடவடிக்கைகள் அனைத்தும் முழுமையாக பூர்த்தியாகியுள்ளன. ஊழல் மோசடிகளுடன் தொடர்புபடாதோரையே தெரிவு செய்துள்ளோம்.

எனவே அடுத்த தேர்தலில் பெரும்பான்மை வாக்குகளை பெற்று ஆட்சிப்பீடமேறுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வாக்களிக்க அடையாள அட்டை இல்லாதோர் விண்ணப்பிக்கலாம்

## ஆட்பதிவு ஆணையாளர் அறிவிப்பு

தேர்தலில் வாக்களிக்க அடையாள அட்டை அவசியமாதலால் அடையாள அட்டை இல்லாதோர் பிரதேச செயலாளர் அலுவலகங்களில் அதற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டுமென ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர திணைக்களம் தெரிவித்துள்ளது.

கிடைக்கும் விண்ணப்பங்களை ஓகஸ்ட் மாதம் 01 ஆம் திகதியளவில் திணைக்களத்துக்கு சமர்ப்பக்க பிரதேச செயலாளர் அலுவலகங்கள் செயற்பட வேண்டுமென திணைக்கள ஆணையாளர் நாயகம் ஆர். எம்.எஸ். சரத்குமார தெரிவித்தார்.

புதிதாக அடையாள அட்டை பெற 10ஆயிரம் பேரே விண்ணப்பித்துள்ளனர்.

இதில் 9ஆயிரம் பேருக்கு அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டு விட்டன. ஏனையவை பல குறைபாடுகளைக் கொண்டுள்ளதால் அவற்றை சரி செய்து மீண்டும் விண்ணப்பிக்குமாறு திணைக்களம் அறிவித்துள்ளது. அடையாள அட்டைகளை புதிப்பித்து திருத்துமாறு ஒரு இலட்சத்து 60 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்தன.

ஒரு இலட்சத்து 50ஆயிரம் விண்ணப்பங்கள் சரி செய்யப்பட்டு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

மீதியான அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன என்றும் ஆணையாளர் தெரிவித்தார். (இ-7)

## 4 சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தின

எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நண்பகல் வரை நான்கு சுயேட்சைக்குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக மாவட்ட தேர்தல்கள் செயலக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 5 உறுப்பினர்களை தெரிவு செய்ய பாராளுமன்ற தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

கடந்த 2010ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு 3 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு மற்றும் ஐக்கிய தேசிய கட்சி என்பன தலா ஒரு ஆசனங்களையும் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வன்முறைகள் தொடர்பில் 13 முறைப்பாடுகள் பதிவு

நாடாளுமன்றத்தேர்தல் வன்முறை கள் தொடர்பில் இதுவரை யில 13 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் நேற்று முன்தினம் முதல் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றது.

பொதுத் தேர்தல் தொடர்பிலான 13 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸ் தேர்தல் முறைப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

தாக்குதல் அச்சுறுத்தல் கட்சிக் காரியாலயங்களை தாக்கி அழித்தல் உள்ளிட்ட சம்பவங்கள் தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் வன்முறைகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் சட்ட மீறல்கள் மற்றும் வன்முறைகளில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார். இது தொடரபில் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுளளதாகத் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தல் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக பிராந்தியங்களுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் பூரண கண்காணிப்பின் அடிப்படையில் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## மனமும் சிந்தனையும்

ஒருவரைப் பார்த்து "உன்னுடைய நண்பர்கள் யார்?" என்று கேட்டுப் பாருங்கள்.

கொஞ்ச நேரம் யோசித்துப் பதில் சொல்லுவார். அவரிடம் ''உன்னுடைய எதிரிகள் யார்'' என்று கேளுங்கள் கடகடவென்று ஒப்பிப்பார்.

நமது மனம் நண்பர்களை விட எதிரிகளை நன்றாக நினைவில் வைத்திருக்கும். இது ஒரு ஆச்சரியமான உண்மை.

உங்களால் நண்பர்களை மறந்துவிட முடியும். ஆனால் எதிரிகளை மறந்து விட முடியாது.

இது ஒரு வேடிக்கையான நிலைதான்.

அழகான தருணங்களை மறந்து விடுகிறோம். நமது மனம் மலர்களைவிட முட்களைத் தான் கவனிக்கிறது.

தன்னைக் காயப்படுத்தும் எதையும் அது உடனே கண்டு கொள்கிறது.

ஒரு தெளிந்த சிந்தனையுடைய மனம் மிக அழகாக உள்ள எல்லாவற்றையும் கவனிக்கும். தான் நன்றியுடன் உணரக் கூடிய எல்லாவற்றையும் பார்த்து குறித்துக் கொள்ளும். இப்படிப்பட்டவர்களின் வாழ்க்கை இயல்பாகவே நன்றாக அமையும்.

மனதில் உள்ள ஒரு சிறிய அமைப்பை மாற்றுவதைப் பொறுத்துத்தான் இந்த விடயம் என்கிறார் ஓஷோ.

ஒரு யூதக் கோயில் இருந்தாலும் அது யூதர்களின் மடமாகவும் இருந்தது. அந்தக் கோயிலின் தலைமைக் குரு மிகவும் கண்டிப்பானவர்.

இந்தக் கோவிலை ஒட்டி ஒரு தோட்டமும் இருந்தது. அதில் இரண்டுயூதர்கள் நடந்து போய்க்கொண்டிருந்தார்கள். காலையில் ஒரு மணி நேரம் மாலையில் ஒரு மணி நேரம் அவர்கள் நடக்க அனுமதி உண்டு. மற்ற நேரங் களில் மதப் புத்தகங்களை படிக்க வேண்டும். பிற விதி முறைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

அந்த இரண்டு பேரும் தொடர்ந்து புகைபிடிக்கும் பழக்கம் உள்ளவர்கள். ஆனால் கோயில் மடத்தில் இருக்கும் போது அவர்கள் புகைபிடிக்க முடியாது. அது கடுமையான குற்றம்.

சரி... நாம் தோட்டத்தில் இருக்கும் போதாவது புகை பிடிக்கலாமா? என்று அவர்கள் இருவருக்குமே ஒரு ஆசை இருந்தாலும் இப்படிக்கேட்டால் மதகுரு என்ன சொல்வாரோ என்று பயம்.

ஒருநாள் அந்த இருவரில் ஒருவன் கலங்கிப் போய் தோட்டத்துக்கு போய்க்கொண்டிருந்தான். அங்கே மற்றவன் ஆனந்தமாக புகைபிடித்துக் கொண்டிருந்தான். அதைப் பார்த்ததும் இவனுக்கு அதிர்ச்சி!

"என்ன இது கேட்காமலேயே ஆரம்பித்து விட்டாயா?" என்றான். "இல்லை நான் கேட்டேன்" என்றான் அவன். ''நான் கேட்க என்னை கன்னா பின்னாவென்று திட்டி புகைபிடிக்க வேண்டும் என்றால் நரகத்துக்கு போ என்று சொல்லி விட்டார். உன்னை எப்படி அனுமதித்தார்?'' என்று கேட்டான் இவன்.

அவன் சிரித்துக்கொண்டே, ''நீ எப்படிக் கேட்டாய் சொல்!'' என்றான்.

"ஜெயம் சொல்லும் போது புகைபிடிக்கலாமா? என்று கேட்டேன் சத்தம் போட்டு.அடிக்கவே வந்துவிட்டார்" என்றான் இவன்.

"நான் வேற மாதிரிக் கேட்டேன். ஐயா, புகைபிடிக்கும் போது ஜெபிக்கலாமா? என்று கேட்டேன். அதில் தவறேதும் இல்லை என்று பதில் சொன்னார்" என்றான்.

ஒரு சிறிய மாற்றம் தான்... அது மிகப் பெரிய மாறுதலை ஏற்படுத்தி விட்டது. மனம் நல்ல விதமாக சிந்திக்க ஆரம்பித்தால் மகிழ்ச்சிக்கு பஞ்சம் இருக்காது.

ஒரு கஞ்சன் ஆற்றில் விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்தான். கூரையில் நின்ற ஒருவர் "உன் கையைத்தா பிடித்து இழுத்து கரையில் விடுகிறேன்" என்றார். எதையும் கொடுத்து பழக்கம் இல்லாத அவன் கையையும் கொடுக்க மாட்டேன் என்றான்.

இவர் பார்த்தார். உன் கையை கொடு என்று சொல்வதற்குப் பதிலாக நான் என் கையை கொடுக்கிறேன் பிடித்துக் கொள்! என்றார்.

'கப்' என்று பிடித்துக் கொண்டான். இழுத்து கரையில் விட்டு விட்டார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப் பெயர்ச்சி பலன்கள்

## எட்டாமிடத்திற்கு வருகிறது! எதிலும் கவனம் தேவை!



**எட்டாமிடத்திற்கு வருகிறது!**
**எதிலும் கவனம் தேவை!**
**நிதானத்தோடு செயற்பட்டு**
**தேவைகளைப் பூர்த்தி**
**செய்து கொள்ளும்**
**மகர இராசி நேயர்களே!**

மனவலிமை அதிகம் பெற்ற உங்களுக்கு இதுவரை உங்கள் ராசிக்கு சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் இப்பொழுது அஷ்டம ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கப் போகிறார். அதே நேரத்தில் குரு பார்க்கும் இடங்கள் 2, 4, 12 என்பதால் அந்த ஸ்தானங்கள் எல்லாம் புனிதம் அடைகின்றன. விருச்சிகத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது, சனியும் குருவைப் பார்க்கிறது. எனவே, சனியால் பார்க்கப்பட்ட குரு தன் பார்வையை முழுமையாக குறிப்பிட்ட மூன்று இடங்களில் செலுத்த முடியுமா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மேலும் குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் ராகு- கேது பெயர்ச்சி நிகழ இருக்கிறது. ஜனவரி 2016 இல் பாம்பு கிரகங்களின் ஆதிக்கம் மேலோங்கிஇருக்கிறது. 2 இல் கேதுவும் 8 இல் ராகுவும், சஞ்சரித்து சர்ப்ப தோஷத்தின் பின்னணியில் செயற்படப் போகிறார்கள். எனவே, குரு ப்ரீதி, சனி ப்ரீதி, சர்ப்ப ப்ரீதி ஆகிய மூன்றையும் சார பமறிந்து ஸ்தலங்களுக்கு சென்று செய்து வந்தால் ஜோரான வாழ்க்கையை அமைத்துக்கொள்ள இயலும்.

**தளராத மனதிற்கு சொந்தக்காரர்!**

தாராள குணம் கொண்ட உங்களுக்கு தளராத மனமும் இருக்கும். சிக்கனத்தின் சிகரமென்று மக்கள் உங்களை சொல்வர். தோற்றத்தை வைத்து உங்களை எடைபோட முடியாது. உடன்பிறப்புகள் மீது உங்களுக்கு அதிக பாசம் இருக்கும். இப்படிப்பட்ட குணாங்களைப் பெற்ற உங்களுக்கு சிம்ம குரு செயறபாடுகளில் வெற்றியைக் கொடுக்குமா என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**எட்டினில் குருதான் வந்தால்**
**இல்லத்தில் தொல்லை கூடும்!**
**பெட்டியில் தொகை வைத்தாலும்**
**பிறருக்கே பயனாய் மாறும்!**
**திட்டங்கள் மாறிப் போகும்!**
**திருப்பங்கள் பலவும் சேரும்!**
**வெற்றியைக் காண வேண்டின்**
**விரதத்தைக் கடைப்பிடிப்பீர்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் கைக்கொள்ள வேண்டிய நேரமிது. மாற்றுக் கருத்துடையோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதால் அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. குறிப்பாக கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயற்பட்டால் குதூகலம் உருவாகும். ஆபத்து வராமலிருக்க அடுத்தவர்களை விமர்சனம் செய்யாமல், ஆலய வழிபாட்டை மேற்கொள்வது உகந்தது.

வாக்கு கொடுக்கும் முன் யோசித்துக் கொடுப்பது நல்லது. விரயங்கள் கூடுதலாக இருக்கும் நேரம் என்பதால் சுப விரயங்களை மேற்கொள்ளுங்கள். குடும்பச் சுமை கூடுதலாக இருக்கும். இடமாற்றங்களை ஏற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்படலாம். எனவே எந்த முடிவையும் யோசித்து ஏற்பது நல்லது.

உங்கள் ராசிக்கு 3, 12 இறகு அதிபதியானவர் குரு பகவான். எனவே வரவு செலவு திருப்திகரமாக அமையவும், வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகவும் குருவிற்கு கவசம் பாடி வழிபடுவது அவசியமாகும்.

மகம் நட்சத்திரக் காலில் குரு சஞ்சரிக்கப் போவதால் உத்திராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களும், அவிட்டம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் தாரா பலம் பெற்ற நாளில் சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும். விரதங்களை நம்பிக்கையோடு மேற்கொள்வது நல்லது.

**குரு பார்வை**
**கொடுக்கும் யோகங்கள்!**

நவக்கிரகத்தில் நல்லவன் என்றும், சுப கிரகம் என்றும், பொன்னவன் என்றும் வர்ணிக்கப்படும் குருபகவான் உங்களுக்கு ராசிநாதனாக விளங்குகிறார். அவர் அஷ்டமத்தில் சஞ்சரித்தாலும் கூட அவரது பார்வை 2, 4, 12 ஆகிய இடங்களில் எல்லாம் பதிவாகின்றது.

**இரண்டினை குருதான் பார்த்தால்**
**லாபங்கள் வந்து சேரும்!**
**நான்கினைக் குருதான் பார்த்தால்**
**நலம்யாவும் வாய்க்கும் உண்மை!**
**பனிரெண்டைக் குருதான் பார்த்தால்**
**பயணத்தால் பலன் கிடைக்கும்!**




என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது வரவு திருப்தி தரும். வாழ்க்கைத் துணையாலும் வருமானம் வந்து சேரும். உறவினர்களுக்கு உதவியாகக் கொடுத்த பணம் வரவில்லையே என்ற கவலை அகலும்.

குருவின் பார்வை 4 ஆம் இடத்தில் பதிவதால் சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும். உடல்நலம் சீராகி உற்சாகப்படுத்தும். குழந்தைகளின் கல்விக் கனவுகளை நனவாக்குவீர்கள். தாயின் உடல் நலம் சீராகும். வீடு வாங்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும். சொந்தங்களால் ஏற்பட்ட சொத்துப் பிரச்சினை அகலும். மாமன், மைத்துனர் வழியில் நடைபெறும் சுபகாரியங்களை முன்னின்று நடத்தி வைப்பீர்கள்.

குரு 12 ஆம் இடத்தைப் பார்ப்பதால் அயன, சயன ஸ்தானம் வலுவடைகின்றது. எனவே, கணவன், மனைவிக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். புதிய வீடு கட்டிக் குடியேற வேண்டுமென்ற எண்ணம் நிறைவேறும். திருமண முயற்சிகளில் வெற்றி கிட்டும். விரயங்களை சுப விரயங்களாக மாற்றிக் கொள்ள வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கலாம். பெற்றோர்களின் மணி விழாக்களை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். பெண் குழந்தைகளின் சுபச்சடங்குகள் ஒரு சில குடும்பங்களில் ஏற்படும்.

**கேது சாரத்தில்**
**குரு சஞ்சரிக்கும் பொழுது!**

இக்காலத்தில் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துவது நல்லது. காரியத் தடைகளை முறியடிக்க கடவுள் வழிபாடு தேவை. சீரான முன்னேற்றத்திலும் சிறு சிறு இடையூறுகள் ஏற்படலாம். புதிய முதலீடுகள் செய்வதைத் தவிர்ப்பது நல்லது. வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும். பூர்வீகச் சொத்துக்களை பாகப் பிரிவினை செய்து கொள்வது சம்பந்தமாக எடுத்த முயற்சி திருப்தி அளிக்காது. அரசியலில் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் மாறலாம்.

**சுக்ர சாரத்தில்**
**குரு சஞ்சரிக்கும் பொழுது!**

இக்காலம் ஒரு பொற்காலமாக அமையும். எல்லா வகையிலும் உங்களுக்கு லாபம் கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. தங்கம், வெள்ளி வாங்குவதில் தனிக்கவனம் செலுத்துவீர்கள். வாகன யோகம் முதல் வளர்ச்சிக்கு வித்திடும் யோகம் வரை அனைத்தும் வந்து சேரும். தொழிலில் புதிய முதலீடுகள் செய்ய போதுமான பண வசதி இல்லையே என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பால் மகிழ்ச்சிக் கடலில் மிதப்பர். கூட்டாளிகள் குடும்பத் தேவையைப் பூர்த்தி செய்வர்.

**சூரிய சாரத்தில்**
**குரு சஞ்சரிக்கும் பொழுது!**

அதிகக்கவனம் தேவைப்படும் நேரமிது. எதிலும் ஆர்வம் குறையாமல் பார்த்துக் கொள்வது நல்லது. வியாபாரப் போட்டிகள் அதிகரிக்கும். முன்கோபத்தைக் குறைத்துக் கொள்வதன் மூலம் முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கலாம். வழக்கமான பணிகளில் சுணக்கம் ஏற்படலாம். பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது.

**அக்கறை செலுத்த**
**வேண்டிய வக்ர காலம்!**

குருவின் வக்ர காலத்தில் நற்பலன்களே அதிகம் வந்து சேரும். 12 இறகு அதிபதி வக்ரம் பெறுவதால் சுபச் செலவுகள் அதிகரிக்கும்.



விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேருவர். வியாபாரப் போட்டிகள் அகலும். வாகன மாற்றம் செய்வது நல்லது. பிரிந்த தம்பதியர் வந்திணைய வாய்ப்பு கிட்டும். இழப்புகளை ஈடுசெய்ய ஏதேனும் ஒரு விதத்தில் வரவு வந்து சேரும். அரை குறையாக நின்ற பணிகள் முடிவடையும். வாங்கல்- கொடுக்கல்கள் திருப்தி தரும். சகோதர வர்க்கத்தினரின் சச்சரவிற்கு ஆளாகாமல் இருப்பது நல்லது.

**செல்வ வளம் தரும்**
**சிறப்பு வழிபாடு!**

சனிக்கிழமை விரதமும், சனி பகவான் வழிபாடும் சஞ்சலம் தீர்க்கும். குறைதீர்க்கும் குருபகவான் சன்னிதிக்குச் சென்று முறையாக வழிபாடு செய்தால் முன்னேற்றத்தின் முதல்படிக்குச் செல்லலாம்.

ஜோதிடக் கலைமணி
சிவல்புரி சிங்காரம்

**மகர ராசியில் பிறந்த பெண்களுக்கு!**

இந்தக் குருப்பெயர்ச்சி வரவும் செலவும் சமமாகும் விதத்திலேயே அமைகின்றது. ஆனி மாதம் முதல் தை மாதம் வரை ஒரு மாற்றமும், தை மாதத்திற்கு மேல் கூடுதல் நற்பலன்களையும் கொடுக்கலாம். ஆரோக்கியத்திற்காக ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை வரும். சகோதர வர்க்கத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது.

கணவன், மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. குடும்பப் பிரச்சினையில் மூன்றாம் நபரின் தலையீடு தேவையில்லை. எந்தப் பிரச்சினையானாலும் நேரடியாகப் பேசி தீர்த்துக் கொள்வது நல்லது. குழந்தைகளின் குணத்தில் மாறுதல் தெரிகின்ற பொழுது நீங்கள் பின்னணியாக இருந்து கவனித்துக் கொள்வது நல்லது.

ராகு-கேது பெயர்ச்சிக்குப் பின்னால் உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பார்த்த பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்க வாய்ப்புஇருக்கின்றது. வியாழன் தோறும் குருதட்சிணாமூர்த்தியை வழிபட்டு வாருங்கள். வடக்குப் பார்த்த விநாயகர் வழிபாடும் வளர்ச்சியைக் கூட்டும். 8பில் ராகு வரப்போவதால் சர்ப்ப சாந்திப் பரிகாரம் செய்வதன் மூலம் நல்ல வாய்ப்புகள் வந்து சேரும். கணவரின் முன்னேற்றத்திலும் தடை ஏற்படாது.

(நாளை கும்பம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பிரதமர் மோடிக்கு உஸ்பெகிஸ்தானில் உற்சாக வரவேற்பு

(தாஷ்கண்ட்)

6 வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு நேற்று முன்தினம் உஸ்பெகிஸ்தான் சென்ற பிரதமர் நரேந்திர மோடிக்கு அங்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டதோடு இந்தியா - உஸ்பெகிஸ்தானுடன் முக்கிய ஒப்பந்தங்களையும் மேற்கொண்டுள்ளது.



பிரதமர் மோடி உஸ்பெகிஸ்தான், கஜகஸ்தான், துர்க்மெனிஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் ஆகிய மத்திய ஆசிய நாடுகளிலும், ரஷ்யாவிலும் 8 நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

தனது பயணத்தின் முதல் கட்டமாக மோடி நேற்று முன்தினம் உஸ்பெகிஸ்தான் நாட்டுக்கு சென்றார். அவர் உஸ்பெகிஸ்தான் நாட்டுக்கு பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறை ஆகும்.

பிரதமர் மோடியை, தலைநகர் தாஷ்கண்ட் விமான நிலையத்தில் உஸ்பெகிஸ்தான் பிரதமர் ஷவ்கத் மிரோமோனோவிச் மிர்சியோயெவ் மற்றும் அவருடைய அமைச்சரவை அமைச்சர்கள் உற்சாகமாக வரவேற்றனர். இதையடுத்து மோடி டுவிட்டரில், சலாம் உஸ்பெகிஸ்தான்.

பிரதமர் மிரோமோனோவிச் உற்சாக வரவேற்பு அளித்ததற்கு நன்றி. இங்கிருப்பதை அற்புதமாக உணர்கிறேன் என்று ஆங்கிலம் மற்றும் உஸ்பெக் மொழிகளில் பதிவு செய்தார்.

இதைத்தொடர்ந்து மிரோமோனோவிச்சுடன் உடனடியாக மோடி பேச்சுவார்த்தை நடத்தினார்.

மாலையில் தாஷ்கண்ட் ஜனாதிபதி மாளிகையில் பிரதமர் மோடிக்கு அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. பின்னர், ஜனாதிபதி இஸ்லாம் கரிமோவ் அவருக்கு சிறப்பு விருந்தும் அளித்தார்.

இதன்பின்பு நடந்த பேச்சுவார்த்தையின்போது, பல்வேறு முக்கிய ஒப்பந்தங்களில் மோடியும், கரிமோவும் கையெழுத்திட்டனர்.

குறிப்பாக இரு நாடுகளிடையே பொருளாதார மற்றும் கலாசார உறவுகளை மேம்படுத்துவது தொடர்பான ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. (இ-7)

## 400 கோடி ரூபாய் பெறுமதியான போதைப் பொருளுடன் இந்தியர் கைதானார்

(கோலாலம்பூர்)

மலேசியாவில் உள்ள கோலாம்பூரில் 400 கோடி மதிப்புள்ள போதை பொருளை பதுக்கி வைத்திருந்த இந்தியர் மற்றும் அவருக்கு உதவியாக இருந்த மலேசியா தொழிலதிபரையும் மலேசியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கோலாலம்பூர் அருகே உள்ள ரவாங் என்ற இடத்தில் 19 டன் மதிப்புள்ள போதை பொருளை மலேசியா பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

பறிமுதல் செய்த போதை பொருளின் இந்திய ரூபாயின் மதிப்பு 400 கோடி ஆகும்.

இந்தியர் தங்கியிருந்த வீட்டில் ஏதேனும் போதை பொருள் உள்ளதா என பொலிஸார் சோதனையிட்ட போது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

அந்த வீட்டில் 742 சாக்கு மூட்டைகளில் இருந்த சுமார் 25 கிலோ மதிப்புள்ள போதை பொருளை பொலிஸார் பறிமுதல் செய்தனர்.

இதற்கு உடந்தையாக இருந்த மலேசியாவை சேர்ந்த தொழில் அதிபரையும் கைது செய்தனர்.

விசாரணையில் இந்த போதை பொருட்கள் அனைத்தும் இந்தியாவில் இருந்து கடத்தி வந்ததாக தொழிலதிபர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

மேலும் அவர்களிடம் மலேசியா பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-7)

# ஜெயாசொத்து குவிப்பு வழக்கு தீர்ப்புக்கு தடைகோரி திமுக மனு

(புதுடில்லி.)

சொத்து குவிப்பு வழக்கில் கர்நாடக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு இடைக்கால தடை விதிக்க கோரி உச்ச நீதிமன்றம் தி.மு.க. சார்பில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

### சிறைத் தண்டனை

சொத்து குவிப்பு வழக்கில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு 4 ஆண்டு சிறைத் தண்டனையும், 100 கோடி ரூபாய் அபராதமும் விதித்து பெங்களூர் தனி நீதிமன்ற நீதிபதி ஜான் மைக்கேல் டி.குன்கா கடந்த ஆண்டு செப்டெம்பர் 27 ஆம் திகதி தீர்ப்பு அளித்தார்.

இந்த வழ்க்கில் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு தலா 4 ஆண்டு சிறைத்தண்டனையும், தலா 10 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. இந்த தீர்ப்பினால் முதலமைச்சர் பதவியையும், சட்டசபை உறுப்பினர் பதவியையும் ஜெயலலிதா இழக்க நேர்ந்தது.

### ஜெயலலிதா மேல் முறையீடு

இந்த தீர்ப்பை எதிர்த்து ஜெயலலிதாவும், மற்றவர்களும் கர்நாடக உயர் நீதிமன்றில் மேல்முறையீடு செய்தனர். இந்த மேல்முறையீட்டு வழக்கை நீதிபதி குமாரசாமி விசாரித்தார். விசாரணைக்கு பின் அவர் கடந்த மே மாதம் 11ஆம் திகதி தனி நீதிமன்ற தீர்ப்பை ரத்து செய்தும், ஜெயலலிதாவையும், மற்றவர்களையும் விடுதலை செய்தும் தீர்ப்பு வழங்கினார்.

இந்த தீர்ப்பை தொடர்ந்து ஜெயலலிதா கடந்த மே மாதம் 23 ஆம் திகதி முதலமைச்சராக பதவி ஏற்றார். மேலும் கடந்த 27ஆம் திகதி சென்னை ஆர்.கே.நகர் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் ஜெயலலிதா ஒரு இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று கடந்த 4ஆம் திகதி சட்டசபை உறுப்பினராக பதவியேற்றார்.

### தி.மு.க. மனு

இந்த நிலையில் ஜெயலலிதாவும், மற்றவர்களும் விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து தி.மு.க. பொதுச்செயலாளர் க.அன்பழகன் சார்பில் நேற்றுமுன்தினம் உச்ச நீதிமன்றில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

க.அன்பழகன் தரப்பில் மூத்த சட்டத்தரணி வி.ஜி.பிரகாசம் இந்த மனுவை தாக்கல் செய்தார். 8 தொகுப்புகளில் 2,289 பக்கங்களை கொண்ட இந்த மனு சிறப்பு அனுமதி மனுவாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ள முக்கிய விபரங்கள் வருமாறு,

### திசை மாற்றும் செயல்

கர்நாடக உயர்நீதிமன்றில் அளித்துள்ள தீர்ப்பில் இந்த வழக்கு தொடர்பாக ஏற்கனவே உச்சநீதிமன்றில் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு பிறப்பித்த வழிகாட்டுதல்களை கடைப்பிடிக்க தவறியுள்ளது.

இந்த வழக்கின் முக்கியமான அம்சங்களையும், சாட்சியங்களிடம் போதுமான விசாரணைகள் மேற்கொள்ளாமலும் கர்நாடக அரசும், மனுதாரர் தரப்பிலும் தாக்கல் செய்த எழுத்துபூர்வமான அறிக்கையை கருத்தில் கொள்ளாமலும் இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இது நீதியை திசை மாற்றும் செயலாகும்.

### பிழைகள் உள்ளன

சாட்சியங்களையும், எதிர்த்தரப்பு வாதங்களையும் சரியான முறையிலும், கவனமாகவும் பரிசீலித்திருக்க வேண்டும். ஆனால் உயர்நீதிமன்றம் விசாரணையில் நீதிபதி இதனை செய்ய தவறியிருக்கிறார். எதிர்த்தரப்பு முன்வைத்த வாதங்களையும், ஆதாரங்களையும் கணக்கில் எடுக்க தவறியிருக்கிறார்.

குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் வாங்கியதாக கூறப்படும் கடன் தொகைகள் மற்றும் சொத்து குவிப்பு தொடர்பான விபரங்கள் தவறாக கணக்கிடப்பட்டு இருக்கிறது. இத்தீர்ப்பில் அளிக்கப்பட்டுள்ள கணக்கு விபரங்களில் பெருமளவில் பிழைகள் உள்ளன. இது குற்றவாளிகளை தப்பிக்க உதவுவது போல அமைந்துள்ளது.

### தவறான கணக்கு

குற்றவாளிகள் தரப்பில் பெற்றதாக கூறப்படும் கடன்கள் மற்றும் வாங்கி குவித்ததாக கூறப்படும் சொத்துகள் பற்றிய விபரங்கள் பெருமளவில் தவறாக கணக்கிடப்பட்டு இருப்பதால் அது இந்த வழக்கின் மீதான முழு விசாரணையிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

குற்றவாளிகள் தாங்கள் பெற்ற கடனை திரும்பி செலுத்தியிருப்பது மற்றும் வங்கிகள் தந்ததாக கூறப்படும் கடன் தொகை உண்மையாகவே வாங்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதை கருத்தில் கொள்ளாமல் அவற்றை வருமானமாக உயர் நீதிமன்றம் தவறாக கணக்கிட்டுள்ளது.

### பொருந்தாது

ஜெயலலிதா சொத்து மதிப்பு வருமானத்தை விட 8.12 சதவீதம்தான் எனக்கூறி உச்சநீதிமன்றம் வழங்கிய, கிருஷ்ணானந்த் அக்னிகோத்ரி என்பவர் மீதான வழக்கின் தீர்ப்பை மேற்கோள்காட்டி அவரை விடுதலை செய்துள்ளது தவறானதாகும்.

குற்றம் சாட்டப்பட்டவர் சொத்து குவித்ததாக கூறப்படும் காலகட்டத்தில் அவர் ஒரு ரூபாய் தான் ஊதியமாக பெற்றுள்ளார் என்று கூறப்படுகிறது. இந்த காலகட்டத்தில் அவர் 2.82 கோடி ரூபாய் சொத்துகளை வருமானத்துக்கு அதிகமாக சேர்த்துள்ளார். இது ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டிய குற்றமாகும். அதனால் கிருஷ்ணானந்த் அக்னிகோத்ரி வழக்கின் தீர்ப்பு இதற்கு பொருந்தாது.

ஜெயலலிதா சட்டவிரோதமான வகையில் பெற்றதாக கூறப்படும் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள பரிசுப் பொருட்கள் குறித்து அவர் அறிவிக்காதது குறித்து எதுவும் கணக்கில் எடுத்து கொள்ளப்படவில்லை.

### தடைவிதிக்க வேண்டும்

• ஜெயலலிதா சட்டவிரோதமாக அந்நிய வருவாய் ரூபாய் 77 இலட்சத்தை வங்கி மூலமாக பெற்றுள்ளது பற்றிய சி.பி.ஐ. வழக்கு பற்றி இந்த விசாரணையில் எதுவும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

சாட்சியங்களையும், ஆவண ஆதாரங்களையும் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் ஜெயலலிதா உள்ளிட்டோரை விடுதலை செய்திருப்பது சட்டத்துக்கு எதிரானதாகும்.

எனவே, கடந்த மே மாதம் 11ஆம் திகதி கர்நாடக உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பின் மீது இடைக்கால தடை விதிக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

### வேண்டுகோள் கடிதம்

இந்த சிறப்பு அனுமதி மனுவை அவசர வழக்காக கருதி விரைந்து விசாரிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து முதல் பக்கத்தில் ஒரு கடிதமும் இணைக்கப்பட்டு இருக்கிறது.

கர்நாடக உயர்நீதிமன்றின் தீர்ப்பை எதிர்த்து ஏறத்தாழ இதே போன்ற விளக்கங்கள் மற்றும் காரணங்களுடனும், கோரிக்கைகளுடனும் கர்நாடக அரசு கடந்த ஜூன் 23ஆம் திகதி உச்சநீதிமன்றில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மேல்முறையீட்டு மனுக்கள் விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

## பாரதச் செய்தி

# பாகிஸ்தான் இராணுவம் பீரங்கித் தாக்குதல்

(ஜம்மு)

காஷ்மீர் சர்வதேச எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் விடிய விடிய பீரங்கி தாக்குதல் நடத்தியது. இதில் குண்டு பாய்ந்து எல்லைப் பாதுகாப்பு படை வீரர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

காஷ்மீரில் இந்தியா-பாகிஸ்தான் சர்வதேச எல்லையில் போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ளது. ஆனால் இந்த ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல் நடத்துவதும், இதற்கு இந்திய வீரர்கள் பதிலடி கொடுப்பதும் அடிக்கடி நடந்து வருகின்றன. இதில் அவ்வப்போது உயிரிழப்புகளும் ஏற்பட்டு வருகிறது.

இந்த நிலையில் ஜம்மு மாவட்டத்தின் ஆர்னியா பிரிவில் அமைந்துள்ள 6 எல்லைப்புற சாவடிகளை குறிவைத்து பாகிஸ்தான் இராணுவம் கடந்த 6ஆம் திகதி மாலை தாக்குதலை தொடங்கியது. முதலில் மாலை 6.52 மணி முதல் 6.55 வரை பாகிஸ்தான் இராணுவம் சிறிய ரக ஆயுதங்களால் சுமார் 30 முறை தாக்குதல் நடத்தியது.

### இந்திய வீரர் சாவு

இதைத்தொடர்ந்து இரவு 7.15 மணிக்கு மீண்டும் பாகிஸ்தான் இராணுவம் தாக்குதலை தொடங்கியது. சிறிய ரக ஆயுதங்கள் மற்றும் சிறிய ரக பீரங்கியால் நடத்தப்பட்ட இந்த தாக்குதலுக்கு இந்திய எல்லை பாதுகாப்பு படை வீரர்கள் பதிலடி கொடுத்தனர். இந்த தாக்குதல் இரவு 8.35 மணி வரை நீடித்தது.

இரவு முழுவதும் பாகிஸ்தான் ராணுவம் தொடர்ந்து விட்டு விட்டு துப்பாக்கியால் சுட்டவண்ணம் இருந்தது. இந்த சண்டை நேற்று முன்தினம் அதிகாலை 5 மணி வரை நடந்தது.

காஷ்மீர் மாநிலம் குப்வாரா மாவட்டத்தில் உள்ள நவ்காம் செக்டர் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பாகிஸ்தான் இராணுவம் நடத்திய துப்பாக்கிசூட்டில் இந்திய எல்லை பாதுகாப்பு படை வீரர் ஒருவர் குண்டு பாய்ந்து பலியானார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த ஜனநாயக படுகொலை இனி நடக்காது !



...ஆமாம். அவர்களில் பலரிடமும்கூட சாதியப் பாகுபாட்டை மிகத் தெளிவாக உணர்ந்திருக்கிறேன். திமுக மீதான பலரின் காழ்ப்புணர்வுக்குப் பின்னணியிலும்கூட என்னைப் போன்ற ஒரு எளியவன் தலைமையில் அது இயங்குவதைத் தாங்கிக் கொள்ள முடியாத ஆற்றாமை இருப்பதை உணர்ந்திருக்கிறேன்.

எவ்வளவு உயரம் போனாலும் இங்கு சாதியம் பின்னின்று நடத்தும் அரசியலை உணர்ந்திருப்பதால்தான் சமூகநீதிக்காக எவ்வளவு தூரம் செல்லவும் நாங்கள் தயாராக இருக்கிறோம். எவ்வளவோ காரியங்களைச் செய்திருந்தாலும், இந்தியாவில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை வலியுறுத்தி வெற்றி கண்டதைப் பெரிய சாதனையாக நாங்கள் நினைப்பதும் அதனால்தான்.

**உங்களிடம் உள்ள சமூக நீதி தொடர்பான இந்தப் பிரக்ஞை அடுத்த தலைமுறை திமுகவினரிடமும் இருக்கிறதா?**

இன்றைக்கு ஊற்றப்படுகின்ற தண்ணீரும், தொடர்ந்து இடப்படுகிற உரமும் எதிர்காலத்தில் நிச்சயமாகப் பயன்படும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

**நெருக்கடிநிலைக் காலகட்டத்துக்கு முன்பே இந்திரா காந்தியின் பேச்சுகள் - நடவடிக்கைகளில், திமுக மீதான ஒரு கசப்புணர்வு இருந்திருப்பதை உணர முடிகிறது. பின்னாளில், திமுகவைத் தடைசெய்ய வேண்டிய இயக்கமாகக்கூட இந்திரா கருதியிருக்கிறார். இத்தனைக்கும் 1971 தேர்தலில் இந்திரா காந்தியுடன் கூட்டணி உறவுகொண்டே திமுக போட்டியிட்டிருக்கிறது. உறவு கசப்படைய என்ன காரணம்? முன்னதாக மொழிப்போர் அனுபவங்கள், சுயாட்சிக் கொள்கை போன்ற விஷயங்கள் ஏதேனும் திமுகவிடம் அவருக்கு ஒவ்வாமையை உருவாக்கியிருந்தனவா?**

மொழி விவகாரம், மாநில சுயாட்சி விவகாரம், சோஷலிச அடிப்படையிலான திட்டங்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் நலன்களில் காட்டிய தொடர் அக்கறை, வடக்கு - தெற்கு பாகுபாட்டு அணுகு முறையில் எங்களுக்கு இருந்த விழிப்புணர்வு, சர்வ வல்லமை படைத்த மத்திய அரசை எதிர்த்துத் துணிச்சலாக அறைகூவல் விடுக்கும் அணுகுமுறை இப்படி எவ்வளவோ விஷயங்கள் காரணமாக திமுக தொடர்ந்து குறிவைக்கப்பட்டிருக்கிறது. திமுக ஒரு தேச விரோத சக்தி என்கிற அளவுக்கு கருத்துகளை விதைப்பதிலும், அவற்றை வளர்ப்பதிலும் எங்களுடைய இயக்கத்தின் தொடக்கக் கால எதிரிகள் தொடர்ந்து ஈடுபட்டுவந்தார்கள். டெல்லியின் அதிகார மையத்தை மட்டும் அல்லாமல் நாடு முழுவதுமே இப்படியான ஒரு எண்ணத்தை உருவாக்குவதில் அக்காலகட்டத்தில் அவர்கள் மெல்ல மெல்ல வெற்றி கண்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

அண்ணாவின் மறைவுக்குப் பின், திமுக சாய்ந்து ஓய்ந்துவிடும் என்று பலர் மனக்கணக்கு போட்டார்கள். திமுகவோ மேலும் வலுப்பெற்று வளர்ச்சி அடைந்தது. இது தாங்கிக்கொள்ள முடியாததாகப் பலருக்கும் இருந்தது. இந்த நிலையில்தான் திமுகவிலிருந்து நண்பர் எம்.ஜி.ஆர் பிரிந்தார்.

**நாம் கொஞ்சம் வெளிப்படையாகவே பேசலாம். திமுகவைப் பலவீனப்படுத்த எம்ஜிஆரை இந்திரா காந்தி பயன்படுத்திக் கொண்டாரா?**

இந்திராவின் மனதில் சிலர் ஊன்றிய விஷ விதை தொடர்ந்து வளர்ந்த வண்ணம் இருந்தது. அதனால், திமுகவை ஒதுக்கவும், ஓரங்கட்டவும், பலவீனப்படுத்தவும் என்னென்ன ஆயுதங்கள் வலிய வந்து அவர் கைகளில் விழுந்தனவோ அவை எல்லாவற்றையுமே அவர் பயன்படுத்திக் கொண்டார் என்பதுதான் உண்மை. அத்தகைய கருவிகளில் ஒன்றாக எம்ஜிஆரும் டெல்லிக்கு வாய்த்தார்.

**எம்ஜிஆர் தானாகவே பிரிந்து சென்று தனிக் கட்சி தொடங்கினாரா அல்லது பிரிக்கப்பட்டு ஊக்குவிப்பும் உற்சாகமும் கொடுக்கப்பட்டாரா என்பதற்கு இன்றுவரை உறுதியான ஒரு பதில் கிடைக்கவில்லையே?**

**இந்தியாவின் கட்டுப்பாடற்ற தீவுகள் என்று தமிழகத்தையும் குஜராத்தையும் ஒருமுறை குறிப்பிடுகிறார் இந்திராகாந்தி. அப்படி என்ன கட்டுப்பாடுகளை அப்போது தமிழகம் மீறியது? இதுவரை வெளியே சொல்லாத இந்திராவின் நெருக்கடிகள், நிர்ப்பந்தங்கள் ஏதும் இருக்கிறதா?**

தமிழகத்தில் திமுகவும் குஜராத்தில் ஸ்தாபன காங்கிரசும் அப்போது ஆட்சியில் இருந்தன. ஜனநாயகத்தைக் காப்பாற்ற எந்த விலையையும் தரத் தயாரான அரசுகளாக அவை இருந்தன. இதை இந்திராவால் ஜீரணிக்க முடியவில்லை. வெளியே பலருக்குத் தெரியாத இன்னொரு காரணம்: தமிழகத்தில் இந்திரா காங்கிரசுடன் ஸ்தாபன காங்கிரஸ் இணைவதற்கு நான் தடையாக இருக்கிறேன் என்ற எண்ணத்தை இங்குள்ள சிலர் இந்திராவிடம் விதைத்து தூபம் போடும் முயற்சியில் வெற்றியும் பெற்றிருந்தனர்.

**ஆனால், எந்த இந்திராவைப் பற்றி இப்படியெல்லாம் சொல்கிறீர்களோ, அதே இந்திராவுடன்தான் அடுத்த தேர்தலில் திமுக கூட்டணி சேர்ந்தது. இன்றளவும் விமர்சிக்கப்படும் இந்த முடிவை நோக்கி உங்களை எது தள்ளியது?**

டெல்லியில் 1977 இற்கும் 1980 இற்கும் இடையில் நடந்த ஆட்சியினால் ஏற்பட்ட எதிர்மறையான விளைவுகளே அந்த முடிவை நோக்கித் தள்ளியது. இந்தியாவுக்கு ஒரு நிலையான ஆட்சி வேண்டும் என்ற அடிப்படையில்தான், "நேருவின் மகளே வருக் நிலையான ஆட்சியைத் தருக" என்று கூற வேண்டிய நிலைக்கு திமுக வந்தது.

**நெருக்கடிநிலையின்போதுதான் ஆட்சியை இழந்தீர்கள். கட்சி ஏராளமான கைதுகளையும் பிரிவுகளையும் சந்தித்தது. திமுகவிலிருந்து பிரிந்த எம்.ஜி.ஆர் பெரிய அளவில் வளர்ந்தார். உங்கள் அரசியல் வாழ்வின் மிக நெருக்கடியான காலகட்டம் என்று அதைச் சொல்லலாமா?**

நெருக்கடிகள் நிறைய இருந்தன என்றாலும், வாழ்வின் மிக நெருக்கடியான காலகட்டம் என்று நெருக்கடிநிலைக் காலகட்டத்தைக் குறிப்பிட முடியாது. அண்ணா மறைந்தபோது உருவானதுதான் பெரும் நெருக்கடி. அண்ணாவால் சில லட்சியங்களை வென்றெடுப்பதற்காக உருவாக்கப்பட்ட இந்த இயக்கத்தைக் கட்டிக் காப்பாற்றி, முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு என் மீது விழுந்ததைவிடவும் பெரிய நெருக்கடி ஏதும் இல்லை.

**நெருக்கடிநிலைக்குப் பெரிய விலை கொடுத்த இயக்கங்களில் ஒன்று திமுக. ஆனால், தமிழகத்தில் தேர்தலில் அதற்கான பலன்களை அப்போது திமுகவால் அறுவடை செய்ய முடியவில்லை. என்ன காரணம்? நெருக்கடிநிலையின் கொடூரச் சூழலைப் போதிய அளவுக்கு மக்களிடம் கொண்டு சேர்க்க திமுக தவறிவிட்டதா அல்லது நெருக்கடிநிலைச் சூழலையும் தாண்டி திமுகவின் ஆட்சி மீது அப்போது இருந்த அதிருப்தியா?**


(தொடரும்)

**இணையம்**

## அதிசய உலகம்

### மனிதர்களோடு நன்றாக உரையாடும் "பெப்பர் ரோபோ"

விதவிதமான வகைகளில் மக்களின் பயன்பாட்டுக்கு ஏற்ற ரோபோகளை தயாரிப்பதில் ஜப்பான் ரோபோ ஆராய்ச்சி நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன.





ஜப்பானைச் சேர்ந்த சாப்ட் பேங்க் ரோபோட்டிக்ஸ் கார்ப் நிறுவனம் சமீபத்தில் பெப்பர் என்கிற மனித வடிவிலான 1000 ரோபோக்களை விற்பனைக்கு கொண்டு வந்தது.

அறிவிக்கப்பட்ட ஒரு நிமிடத்தில் அனைத்து ரோபோக்களும் விற்பனையாகிவிட்டது.

இந்த ரோபோவுக்கு சமைக்கவோ, வீடுகளை சுத்தம் செய்யவோ தெரியாது. ஆனால் மனிதர்களோடு சகஜமாக பழகி நம்முடைய உணர்வுகளை புரிந்துகொள்ளும்.

## சமைப்போம் சுவைப்போம்

### தினை அரிசி உப்புமா



**தேவையானவை**

தினை அரிசி - ஒரு கப்,
வெங்காயம் - 1
கரட் - 1
குடமிளகாய் (சின்னது) - ஒன்று,
பச்சைப் பட்டாணி - அரை கப்,
காய்ந்த மிளகாய் - 2,
கடுகு - அரை டீஸ்பூன், உளுத்தம்பருப்பு - ஒரு டீஸ்பூன், பெருங்காயத்தூள் - சிறிதளவு, மஞ்சள்தூள் - ஒரு சிட்டிகை, கறிவேப்பிலை, எண்ணெய் - ஒரு டீஸ்பூன், உப்பு - தேவையான அளவு.

**செய்முறை:-**

வெங்காயம், குடைமிளகாய், கரடை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். பாத்திரத்தில் எண்ணெய் விட்டு கடுகு, உளுத்தம்பருப்பு, காய்ந்த மிளகாய்தாளிக்கவும். நறுக்கிய வெங்காயம் சேர்த்து, வதங்கியதும் பச்சைப் பட்டாணி, பொடியாக நறுக்கிய கரட், குடமிளகாயை சேர்க்கவும். இதில், ஒரு கப் திணை அரிசிக்கு இரண்டு கப் என்ற விகிதத்தில் தண்ணீர் ஊற்றவும். கொதித்ததும் உப்பு, கறிவேப்பிலை, மஞ்சள் தூள், பெருங்காயத்தூள் போட்டு, திணை அரிசியை போட்டு மூடி, அடுப்பை "சிம்"மில் வைக்கவும். 10 நிமிடம் கழித்து கிளறி இறக்கவும். இந்த தினை அரிசி உப்புமா மிகவும் சத்தானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் கலக்கப்பட்ட மென்பானப் போத்தல்கள் மீட்பு

பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து விற்பனை செய்யப்பட்ட நஞ்சு போதைப்பொருள் கலந்த மென்பானம் அடங்கிய 700 போத்தல்களை கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் ஐவரை மாக்கொலயில் வைத்து கைதுசெய்துள்ளதாக சப்புகஸ்கந்த பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறான போத்தல்கள் மாக்கொல பட்டலந்த வீதியில் உள்ள களஞ்சியசாலையில்களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாக மேல்மாகாண வடக்கு பிரதி பொலிஸ்மா அதிபர் எல்.ஜி. குலரத்னவுக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே இந்த சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட ஐவரும் களஞ்சியசாலையில் பணியாற்றுபவர்கள் என்றும் அவர்கள் 18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.(இ-7)

## கண்ணீர் அஞ்சலி



**ஆசீர்வாதம்**
**வின்சென்ற் துரைராஜா**
**(5ஆம் வாய்க்கால், பரந்தன், கிளிநொச்சி)**


முன்னாள் இரணைமடு திட்ட
முகாமையாளர் ஆசீர்வாதம்
வின்சென்ற் துரைராஜா ஐயா
அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

இரணைமடு திட்ட உப குழுக்களின் சம்மேளனமும்
விவசாயிகளும் இரணைமடு, கிளிநொச்சி.

## இருபத்தாறாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணரங்கில்
11
02
1924

விண்ணரங்கில்
08
07
1989



**கலாநிதி நடிகமணி வி.வி. வைரமுத்து**

கர்நாடக இசைக் கச்சேரி செய்வதில் வல்லமை, பெண்வேடமிட்டு
ரீங்கார ஓசையில் பாடி நடிக்கும் திறமை, இராஜபாட்டில் அரிச்சந்தி
ரன் தொடங்கி வில்லன் அந்திராசி வரையான நடிப்பு மகிமை,
இலக்கண, இலக்கிய நூல்களைக் கற்று ஆசிரியத் தொழிலில்
கடமை ஆற்றிய கல்வித் தகைமை, இசைக்கருவிகளை இசைத்து
நாடகத்தை நெறியாள்கை செய்து நடத்திய ஆளுமைத் தன்மை
இவையாவும் நடந்ததால் நந்தாப் புகழ்பெற்ற நாயகன் என்ற தனிச்
சிறப்பைப் பெற்றார்
எங்கள் தந்தை

"சாரங்கா"
காங்கேசன்துறை.

பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(1060)

# செல்ஃபி


சன்சு


திலீப், மல்லாவி.


கௌசிகன், பருத்தித்துறை.


கஜீபன்


டினேஸ், சந்தோஸ்


செந்தீஸ், யாழ்ப்பாணம்.

உங்கள் செல்ஃபிகளை
photosofvalampurii@gmail.com
என்னும் முகவரிக்கு உங்கள் பெயர்,
முகவரியுடன் அனுப்பிவையுங்கள்.
சிறந்த செல்ஃபிக்கு பரிசில்கள் உண்டு

உங்கள் செல்பிக்கள் ஏதும் பொருள் கூறுவதாகவோ அல்லது [illegible]
பின்புலத்திலோ இருக்குமாறு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பரசர் பிரான்சிஸ் தென்னமெரிக்காவில்



தென்னமெரிக்காவில் உள்ள சில வறிய நாடுகளுக்கு ஒருவார கால பயணமாக நேற்று சென்றுள்ள பாப்பரசர் பிரான்சிஸை ஈக்குவடோரில் ஆயிரக்கணக்கான மக்கள் வரவேற்றனர்.

விமானத்திலிருந்து இறங்கியவுடன் மக்கள் முன் பேசிய பாப்பரசர், உலகின் வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் பலனடையக் கூடியதாக இருக்க வேண்டும் என்று கூறினார்.



இந்த வழிபாட்டில் சுமார் 10 இலட்சம் மில்லியன் பேர் வரையில் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அடுத்து, பொலிவியா மற்றும் பராகுவே ஆகிய நாடுகளுக்கு பாப்பரசர் பிரான்சிஸ் பயணிக்கவுள்ளார். (இ-7)

## 15 ஆண்டுகளுக்கு முன் கடத்தப்பட்ட சிறுவன் பேஸ்புக் உதவியால் தாயுடன் இணைந்தான்

அமெரிக்காவில் 15 ஆண்டுகளுக்கு முன்பு தனது தந்தையால் கடத்தப்பட்ட சிறுவன், தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவேற்றிய புகைப்படத்தின் உதவியால் மீண்டும் தன்தாயுடன்இணைந்துள்ளான்.

கலிபோர்னியா மாகாணத்தில் வசித்து வருபவர் ஹோப் ஹோலந்த். இவருக்கு திருமணமாகி ஜோனதான் மற்றும் ஜேக்கப் என்ற இரண்டு மகன்கள் உள்ளனர். இவர்களில் ஜோனதானை கடந்த 2000ம்ஆண்டு அவனது தந்தை மெக்சிகோவுக்குக் கடத்திச் சென்றார். அப்போது அவனுக்கு வயது மூன்று. இதுகுறித்து ஹோலந்துக்கு எதுவும் தெரியாது. எனினும் ஜோனதானை தேடிக் கண்டுபிடிக்க பல ஆண்டுகளாக அவர் முயன்றார்.

இந்நிலையில், தற்போது 18 வயதாகும் ஜோனதான் சமீபத்தில் தனது பேஸ்புக் பக்கத்தில் சிறு வயதில் எடுத்துக்கொண்ட புகைப்படமொன்றை பதிவேற்றியிருந்தான்.

இந்தப் புகைப்படத்தை எதேச்சையாகக்கடந்து வந்த ஹோப், தனது மகனைக் கண்டுபிடித்த மகிழ்ச்சியில் திளைத்தார். பின்னர்ஜோனதானுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு பல நினைவுகளைப்பகிர்ந்து கொண்டார்.

இதுகுறித்து ஹோப் கூறும் போது, எனது கணவர் அப்போது விடுமுறையில் இருந்தார். அப்போது தன்னுடன் ஜோனதானை வெளியில் கூட்டிச் சென்றார். அவர் திரும்பி வரமாட்டார்என்று நான்நினைத்துக் கூடப்பார்க்கவில்லை. தான் கடத்தப்பட்டது குறித்து ஜோனதானுக்கு எதுவும் தெரியாது. இப்போது என் மகன் எனக்குக் கிடைத்திருப்பதால் என் உலகமே மாறிவிட்டது எனத் தெரிவித்தார். (இ-7)

# விமானத் தாக்குதல் 100 பேர் உயிரிழப்பு

(சனா)

**உள்நாட்டுப் போர் தீவிரமடைந்துள்ள ஏமனில் நாளுக்கு நாள் பலி எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில் நேற்று முன்தினம் சவுதி தலைமையிலான கூட்டுப்படை நடத்திய விமானத்தாக்குதலில் சுமார் 100 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**



ஏமன் நாட்டின் தலைநகரான சனா உள்ளிட்ட பல்வேறு நகரங்கள் ஹவுத்தி கிளர்ச்சியாளர்களால் கைப்பற்றப்பட்டதால் அந்நாட்டில் உள்நாட்டு போர் உச்சகட்டத்தை அடைந்துள்ளது.

இதனால் ஜனாதிபதி அபெட் ரப்பு மன்சூர் ஹாதி, தலை நகர் சனாவிலிருந்து தலைமறைவானார். கிளர்ச்சியாளர்களை ஒடுக்க உதவுமாறு சவுதி அரேபியாவிற்கு வேண்டுகோள் விடுத்தார். ஹாதியின் வேண்டுகோளை ஏற்று ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் மீது சவுதி அரேபியா தலைமையிலான அரேபியகூட்டுப்படைகள் வான்வழி தாக்குதலை தொடங்கின.

இதில் கிளர்ச்சியாளர்கள் பலர் கொல்லப்பட்டதுடன், அவர்களின் முகாம்கள் குண்டுவீச்சில் அழிக்கப்பட்டன. கிளர்ச்சியாளர்களை அழிக்கும் முயற்சியில் நடத்தப்படும் தாக்குதல்களில் ஏராளமான அப்பாவி பொதுமக்களும் பலியாகி வருகின்றனர்.

இந்நிலையில், ஏமனின் துறைமுக நகரமான ஏடனின் வடக்கு சானா மற்றும் அம்ரான் மாகாணம் ஆகிய இடங்களில் நடைபெற்ற வான் வழி தாக்குதலில் மொத்தமாக 100 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் படுகாயங்களுடன் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சிலரOது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-7)




## 27 பேர் உயிரிழப்பு 26 பேர் சிறையிலடைப்பு

குவைத்தில் உள்ள அல்சாதிக் சூதியில் 2 ஆயிரம் பேர் திரண்டு, தொழுகையில் ஈடுபட்டிருந்தபோது, அண்மையில் தற்கொலைப்படை தீவிரவாதி ஒருவர், மனித வெடிகுண்டாக மாறிஅதிபயங்கர தாக்குதல் நடத்தினார்.

இந்த தாக்குதலில் 27 பேர் உடல் சிதறி பலியாகினர். 227 பேர் காயம் அடைந்தனர்.

சம்பவம் நடந்த மசூதிக்கு நேரில் சென்று பார்வையிட்ட மன்னர் சபா அல் அகமது அல் ஜபிர், கடும் கண்டனம் தெரிவித்ததுடன் குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என தெரிவித்தார்.

இந்நிலையில் இந்த சம்பவம் தொடர்பாக 26 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக அரசு சட்டத்தரணி கூறியதாக அந்நாட்டு பத்திரிக்கையில் செய்தி வெளியாகியுள்ளது. இந்த 26 பேரில் 4 பேர் பெண்கள் ஆவார்கள். இவர்கள் அனைவரும் 10 நாட்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அந்த பத்திரிக்கை செய்தி தெரிவித்துள்ளது. (இ-7)

## கின்னஸ் சாதனை படைத்த 116வயது அமெரிக்க பெண்

அமெரிக்காவின் நியூயோர்க் அருகே உள்ள புரூக்ளினை சேர்ந்த பெண் சுசன்னா மஸ்கட் ஜோன்ஸ். இவருக்கு 116 வயதாகிறது.

கடந்த மாதம் 17 ஆம் திகதிதான்தனது 115ஆவது வயதை நிறைவு செய்து 116 வயதை எட்டினார். இதன் மூலம் உலகில் வாழும்மிக வயதான நபர்என்ற பெருமையை பெற்றுள்ளார்.

இவருக்கு முன்பு மிக அதிக வயதில் வாழ்ந்த ஜெரா லியன் டல்பி என்பவர் கடந்த 26 நாட்களுக்கு முன்பு மரணம் அடைந்தார். அதைத் தொடர்ந்து சுசன்னா இந்த பட்டம் பெற்றார். மேலும் உலகின் மிக வயதான நபர் என்ற கின்னஸ் சாதனையும் படைத்தார்.

இவர் கடந்த 1899 ஆம் ஆண்டு ஜூலை 6 ஆம் திகதி நியுயோர்க்கில் உள்ள புரூக்ளினில் பிறந்தார். இவருக்கு உடன்பிறந்த சகோதரர்கள் மற்றும் சகோதரிகளின் குழந்தைகள் 100 பேர் உள்ளனர்.

நீண்ட நாட்கள் வாழ்வதின் இரகசியம் என்ன என்று அவரிடம் கேட்டபோது, நன்றாக தூங்குவதாக தெரிவித்தார். இவருக்கு கண்பார்வை கிடையாது. ஆனால் காது நன்றாக கேட்கிறது. (இ-7)

## அதிக வயதுடைய ஜப்பான் தாத்தா மரணம்



உலகிலேயே மிக அதிக வயதில் வாழ்ந்து வருபவர் என்று சாதனை படைத்தவர் ஜப்பானைச் சேர்ந்த சகாரி மொமோய் (வயது- 112). இவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இறந்ததாக அதிகாரபூர்வமாக நேற்று அறிவித்துள்ளனர். இவர் கடந்த ஆண்டு தனது 111 ஆவது வயதில் அதிக வயதுடையோர் என்ற சிறப்பை பெற்றார். இவர் டோக்கியோவில் உள்ள ஒரு காப்பகத்தில் வாழ்ந்து வந்தார். சமீபகாலமாக சிறுநீரக கோளாறால் அவர் பாதிக்கப்பட்டு வந்தார். பின்னர் ஞாயிற்றுக்கிழமை மரணம் அடைந்துள்ளார்.

புகுஷிமாவில் உள்ள மினாமிசோமாவில் 1903ஆம் ஆண்டு பெப்ரவரிமாதம் 5 ஆம் திகதி பிறந்தார். உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்துள்ளார். இவர் கடந்த ஆண்டு அதிக வயதில் வாழ்பவர் என்று கின்னஸ் சாதனை சான்றிதழ் பெற்றார் என்பது [illegible] அப்போது நான் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் வாழ்வேன் என்று கம்பீரமாக கூறியிருந்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தந்தை தம் பிள்ளைகளுக்கு விட்டுச் செல்லும் சொத்துக்களில் நல்லொழுக்கத்தைவிட மேலான சொத்து எதுவும் கிடையாது. – நபிகள் நாயகம்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## உழைப்பிலும் அறம் காத்த உத்தம பெருந்தகை நடராஜா

அண்ணா தொழிலகத்தின் தொழிலதிபர் பொ.நடராஜா அவர்கள் இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தி இதயத்தை நெருட வைக்கிறது.

மிக உயர்ந்த பண்பாளன் என்பதற்கப்பால்; தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும் என்ற குறளுக்கு உதாரண புருஷராக விளங்கியவர் அவர்.

தனது சொந்த முயற்சியால் சிறுதொழில் முயற்சியை ஆரம்பித்து படிப்படியாக உயர்வடைந்து உச்சமான தொழிலதிபராக உயர்ந்தவர் என்ற பெருமை நடராஜா அவர்களுக்கு உரியது.

பணபலம்; பொருட்பலம்; செல்வாக்குப் பலம் அனைத்தும் இருந்தபோதிலும் பணியுமாம் பெருமை என்பதில் இம்மியும் பிசகாமல் வாழ்ந்த ஒரு அற்புத மனிதரை தமிழ்மண் இழந்துவிட்டது.

எங்கள் முற்றத்தின் மல்லிகை அவர். சிரித்த முகம்; எவரையும் மதிக்கும் உயர்ந்த பண்பு; நடந்து வந்த பாதையை நினைக்கின்ற உயர்ந்த குணம் அத்தனை சால்புகளும் நடராஜா அவர்களின் அணிகலன்கள்.

எங்கள் தமிழ் மண்ணின் விவசாய உற்பத்திகளுக்கு ஊக்கமளித்து –தொழில் முயற்சிகளுக்கு வழிகாட்டி – உள்ளூர் உற்பத்திகளை ஏற்றுமதி செய்து எங்கள் மண்ணில் தொழிற்துறை ஓங்க உழைத்த ஒரு ஒப்பற்ற மனிதருக்கு தமிழ் மண் என்றும் நன்றிக் கடன்பட்டது.

தொழிலதிபர் நடராஜா அவர்களின் கடும் முயற்சியை, நிர்வாகத் திறனை, மனிதநேயத்தை மதித்து பல அமைப்புக்கள் அவருக்கு விருதுகள் வழங்கிக் கௌரவித்தன.

மனிதநேயம் படைத்த நடராஜா அவர்களை கௌரவிக்கும் நிகழ்வொன்றில் உரையாற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள், தொழிலதிபர் நடராஜா அவர்களுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஒரு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்த பேராசிரியர் ஒருவர், நடராஜா அவர்களுக்கு கலாநிதிப் பட்டம் வழங்க வேண்டும் எனப் பகிரங்கமாகக் கேட்டுக் கொண்டதன் மூலம் அந்தப் பட்டம் நடராஜா அவர்களுக்கு வழங்கப்பட்டது என்றே பொருள் கொள்ள வேண்டும்.

முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அவர்கள், நடராஜா அவர்களுக்கு யாழ்.பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதன் ஊடாக நடராஜா அவர்களின் முயற்சி, ஆளுமைத்திறன், நற்பண்பு, சமூக சேவை என்பன மிக உன்னதமாக மதிக்கப்படுகிறது என்ற உண்மை வெளிப்படுவதைக் காண முடியும்.

யுத்த சூழ்நிலையிலும் நேர்மையோடு, நியாயத்தோடு, பண்புமிக்க மனிதராக இருந்து மிகப்பெரிய தொழில் நிறுவனத்தை இயக்கி; பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் அறத்தைப் பாதுகாத்த தொழிலதிபர் நடராஜா அவர்கள் முயற்சியால் உயர்ந்த உத்தமர் என்ற இலக்கணத்திற்கு அடையாளமானவர்.

எங்கள் இனத்தின் எதிர்காலச் சந்ததிக்கான கற்றல் துறையில் அமரர் பொ.நடராஜா ஒரு பாடவிதானம். வருங்காலத் தொழிலதிபர்களுக்கு அவர் ஒரு முன்மாதிரி.

தொழில்முயற்சியை தர்மத்தோடு செய்து சமூகப் பணியிலும் தன்னை அர்ப்பணித்த அந்தப் பண்பாளனுக்கு தமிழ்த் தாய் தலைவணங்கி விடை கொடுக்கிறாள். சென்று வருக!

### சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்

## பொதுச் செயலர் பதவியிலிருந்து அநுரவை நீக்க நடவடிக்கை

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து அனுர பிரியதர்சன யாப்பாவை நீக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு நெருக்கமான இவரை சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார் எனக் கூறப்படுகின்றது.

நாடாளுமன்றத் தேர்தலில் சுதந்திரக் கட்சி போட்டியிடுவது தொடர்பில் தேர்தல்கள் ஆணையாளருக்குத் தெரியப்படுத்த முன்னர், கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து அனுர பிரியதர்சன யாப்பா நீக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கைச் சின்னத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிடுவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருவதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

இத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் மகிந்த ராஜபக்ச போட்டியிடுவார் என அதன் செயலாளர் சுசில் பிரேமஜயந்த அறிவித்ததை அடுத்தே, சிறிலங்கா சுதந்திரக் கட்சி இவ்வாறு ஆலோசித்து வருவதாக கூறப்படுகின்றது. (செ-11)

## கைப்பணி உற்பத்தியாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 50 பனம் கைப்பணி உற்பத்தியாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று உடுவில் கிராமிய வலுப்படுத்தல்களுக்கான அமைப்புக்களின் இணைய அலுவலகத்தில் நடைபெற்றது.

பனை அபிவிருத்தி சபையால் உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இணுவில், உடுவில், மயிலங்காடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 50 பெண் பனம் கைப்பணி உற்பத்தியாளர்களுக்கு கடந்த வருடம் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

பயிற்சியை நிறைவு செய்த உற்பத்தியாளர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

உடுவில் கிராம வலுப்படுத்தல்களுக்கான அமைப்புக்களின் இணையத்தின் தலைவர் மா.ஜெயசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பனை அபிவிருத்தி சபைத் தலைவர் சோ. சோகுலதாசன், கௌரவ விருந்தினராக கிராமிய வலுப்படுத்தல்களுக்கான அமைப்புக்களின் இணையத்தின் இயக்குநர் பசுபதி சீவரத்தினம், சிறப்பு விருந்தினர்களாக பனை அபிவிருத்தி சபையின் முகாமையாளர் (விரிவாக்கம்) மற்றும் பனை அபிவிருத்திச் சபையின் மாவட்ட இணைப்பதிகாரி கியூபேட் அன்டனி ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-9)

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தேனுக விளக்கமறியலில் வைப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தேனுக விதானகமகே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தேனுக விதானகமகே உள்ளிட்ட இருவர் சட்டத்தரணி மூலம் நீதிமன்றத்தில் நேற்று சரணடைந்ததை அடுத்து இவர்களை எதிர்வரும் 14-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த ஊவா மாகாண சபைத் தேர்தல் காலப் பகுதியில், மஹியங்கனை நகரில், பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தேனுக விதானகமகே உள்ளிட்ட குழுவினர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

எனினும் இச்சம்பவம் தொடர்பில் ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட நால்வர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மைத்திரியின் முறையில் கூட்டணி போட்டியிடும்

கடந்த ஜனாதிபதி தேர்தலில் கிடைத்த அனுபவத்தை கொண்டு இம்முறை பொதுத் தேர்தலில் முகம் கொடுக்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி குறிப்பிட்டுள்ளது.

மைத்திரிபால சிறிசேன கடந்த ஜனாதிபதி தேர் தலில் பயன்படுத்திய முறையை கொண்டு இம் முறை பொதுத்தேர்தலில் கூட்டணி போட்டியிடும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக் கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தினுள் நாட்டை சீரழிக்கும் கதாபாத்திரங்கள் காணபபட்டமையே அவரது தோல்விக்கு காரணமாகியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீராவியடி கடையிற் சுவாமி கோவில் அலங்கார உற்சவ விஞ்ஞாபனம் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

மறுநாள் வியாழக்கிழமை முதல் 10 நாட்களுக்கு அலங்கார உற்சவம் நடைபெற்று எதிர்வரும் 19 ஆம் திகதி 108 சங்காபிஷேகம், ருதுசோபனம், மாலை திருக்கல்யாணம், திருவூஞ்சல் என்பன இடம்பெற்று சுவாமி வீதியுலா வரவுள்ளார்.

20 ஆம் திகதி மாலை 4 மணிக்கு வைரவர் சாந்தி உற்சவம் நடைபெறும். (3)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனம் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் சங்கம் (கண்டி) என்பன இணைந்து நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பி.ப4 மணி வரை கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளன.

பெண்களும் அரசியலும் எனும் தலைப்பில் இலக்கம் 121,இரண்டாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள சிந்தனைக்கூட கேட்போர் கூடத்தில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. (இ-3)

## கட்டடத்திலிருந்து விழுந்த இலங்கைப்பெண் மரணம்

இலங்கை பெண் ஒருவர் பஹ்ரேனிலுள்ள மாடிக் கட்டடமொன்றின் ஒன்பதாவது மாடியிலிருந்து கீழே விழுந்து நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். இலங்கையைச் சேர்ந்த 23 வயதுடைய நிமேசா குணசேகர என்ற இளம் யுவதியே அமெரிக்க கடற்படைக்குச் சொந்தமான பஹ்ரேனில் உள்ள கட்டடமொன்றில் இருந்து விழுந்து உயிரிழந்துள்ளார்.

குறித்த மாடி வீட்டின் ஒன்பதாவது மாடியில் இடம்பெற்ற விருந்துபசாரம் ஒன்றில் கலந்து கொண்ட குறித்த யுவதி மது அருந்தியுள்ளார்.

இதன்போது குறித்த யுவதி மதுபோதையில் இருந்தமையினாலேயே தவறுதலாக மாடியிலிருந்து கீழே விழுந்துள்ளார். யுவதி கீழே விழுந்த போது அமெரிக்க கடற்படை வீரர் ஒருவர் காப்பாற்ற முயற்சித்த போதும் அது பயனளிக்கவில்லை. (இ-7)

## பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### ஊரெல்லாம் தேடிய கதை



✦ ஓம் என்பது பிரணவ மந்திரத்தை ஓசை அனைத்தும் அடங்கிய நிலையில் கேட்க முடியும். யோக சாஸ்திரம் கூறும் மூச்சுப்பயிற்சியால் உண்டாகும் நற்பலனை பிரணவ மந்திரம் உச்சரிப்பதால் ஒருவன் பெற முடியும்.

✦ மூச்சுப்பயிற்சியில் மூச்சை உள்ளே இழுத்து வெளிவிடுவதைப் போன்று, "ஓம்" என்று உச்சரிக்கும் போது, நம் வயிற்றுத்தசை அனைத்தும் சுருங்கி உள்ளே செல்வதைப் பார்க்கலாம். இப்பிரணவ மந்திரத்தின் மகத்துவத்தை உணர்ந்து சொல்பவர்களுக்கு மனம் ஒருநிலைப்படும்.

✦ வேதங்கள் காயத்ரி மந்திரத்தில் ஒன்றி விடுகின்றன. காயத்ரி மந்திரம் "ஓம்" என்னும் பிரணவ மந்திரத்தில் கலந்து விடுகிறது. "ஓம்" கடைசியில் சமாதியில் சேர்ந்து விடுகிறது.

✦ கடவுள் உனக்குள்ளேயே இருக்கிறார். ஆனால், நீ அவரைத்தேடி எங்கெல்லாமோ அலைகிறாய். இடுப்பில் பிள்ளையை வைத்துக் கொண்டு, ஊரெல்லாம் தேடிய கதையாகத் தான் கடவுளை தேடுவது இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்காளதேசத்திற்கு எதிரான 2 ஆவது இருபது-20 போட்டியிலும் தென்னாபிரிக்கா வெற்றி

வங்காளதேசம் - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான 2ஆவது இருபது-20 கிரிக்கெட் போட்டி மிர்புரில் நேற்று நடைபெற்றது.

இதில் டாஸ் வென்ற தென்னாபிரிக்க கப்டன் டு பிளிசிஸ் களத்தடுப்பில் தேர்வு செய்தார். அதன்படி குயின்டா டி காக், டிவில் லியர்ஸ் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள்.

கடந்த போட்டியில் சொதப்பிய டி வில்லியர்ஸ் இந்த போட்டியில் 34 பந்தில் 40 ஓட்டங்கள் எடுத்தார். டி காக் 31 பந்தில் 44 ஓட்டங்கள் விளாசினார்.

ஐந்தாவது நபராக களம் இறங்கிய மில்லர் 28 பந்தில் 30 ஓட்டங்களும், அடுத்து வந்த ரோஸவ் 6 பந்தில் 19 ஓட்டங்களும் குவிக்க தென்னாபிரிக்க அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்பிற்கு 169 ஓட்டங்கள் குவித்தது.

170 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் வங்காள தேச அணியின் தமீம் இக்பால், சவுமியாக சர்கார் ஆகியோர் களம் இறங்கினார்கள். இந்த ஜோடி முதல் ஐந்து ஓவரில் 41 ஓட்டங்கள் குவித்து தென்னாபிரிக்காவை சற்று மிரட்டியது.

6 ஆவது ஓவரை பர்னெல் வீசினார். இந்த ஓவரின் ஐந்தாவது பந்தில் தமீம் இக்பால் அவுட் ஆனார். அவர் 18 பந்தில் 13 ஓட்டங்கள் எடுத்தார். அடுத்து சாஹிப் அல் ஹசன் களம் இறங்கினார்.

அடுத்த ஓவரை தென்னாபிரிக்கா அணியின் அறிமுக சுழற்பந்து வீச்சாளரான வீரர் எட்டி லெய்யே வீசினார். இந்த ஓவரின் ஐந்தாவது பந்தில் சர்கார் அவுட் ஆனார். இவர் 21 பந்தில் 6 பவுண்டரி, ஒரு சிக்சருடன் 37 ஓட்டங்கள் குவித்தார்.

சர்கார் அவுட்டுக்கு பின் தென்னாபிரிக்கா சுழற்பந்து வீச்சாளர்களின் ஆதிக்கம் அதிகரித்தது. பாங்கிசோ வீசிய 11 ஆவது ஓவரில் சாஹிப் அல ஹசனும், லெய்யே வீசிய 12ஆவது ஓவரில் முஷ்பிகுர் ரஹிம், சபீர் ரஹ்மானும் அடுத்தடுத்து அவுட் ஆனார்கள்.

அதன்பின் வந்த மோர்தசா இரண்டு சிக்கர்கள் விரட்டி அவுட் ஆனார். கடைசி ஓவரை அபோட் வீசினார். இந்த ஓவரில் அபோட் இரண்டு விக்கெட்டுகள் எடுக்க வங்காளதேசம் 138 ஓட்டங்களில் சுருண்டது. இதனால் தென்னாபிரிக்கா 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. தென்னாபிரிக்க அணி சார்பில் லெய்யே, பாங்கிசோ, அபோட் தலா மூன்று விக்கெட்டுகள் வீழ்த்தினார்கள்.

இந்த வெற்றியின் மூலம் 2 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை 2-0 என தென்னாபிரிக்கா வென்றது. (இ)



வடமராட்சி கரவெட்டி ஞானம்ஸ் கிரிக்கெட் தொடரில் இமையாணன் இளைஞர் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. அவ் அணியினரை படத்தில் காணலாம்.

## ஞானம்ஸ், பருத்தித்துறை இளைஞர் காலிறுதி போட்டிக்கு தகுதி



இணுவில் கலை ஒளி விளையாட்டு கழகத்தால் நடத்தப்படுகின்ற துடுப்பாட்ட சுற்றுப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று வடமராட்சி அணிகளுக்கிடையிலான போட்டி கரவெட்டி ஞானமஸ் விளையாட்டு மைதானத்திலும் நெற்கொழு கழுகுகள் விளையாட்டு மைதானத்திலும் நடைபெற்றன.

இப் போட்டிகளில் ஞானம்ஸ் மற்றும் பருத்தித்துறை இளைஞர் கழகங்கள் வெற்றி பெற்று காலிறுதி போட்டிகளுக்கு தகுதி பெற்றுள்ளன. (க)

# இலங்கை அணியை வீழ்த்தி தொடரை வென்றது பாகிஸ்தான்




இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை பாகிஸ்தான் அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தியுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் சென்ற பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது.

இதன் முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் வென்றது. 2 ஆவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றது.

இரு அணிகளும் தலா ஒரு வெற்றிபெற்றுள்ள நிலையில், கடைசி டெஸ்ட் போட்டி பல்லகெலே மைதானத்தில் நடந்தது.

இதில் நாணய சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா, பந்து வீச முடிவு செய்தார். அதன்படி, இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

முதல் இன்னிங்சில் இலங்கை அணி 278 ஓட்டங்கள் எடுத்தது. இதில் கருணாரத்னே சதம் விளாசினார். இவர் 14 பவுண்டரி உட்பட 130 ஓட்டங்கள் எடுத்தார். பாகிஸ்தான் சார்பில், யாசிர் ஷா 5 விக்கெட் வீழ்த்தினார்.

இதைத் தொடர்ந்து தனது முதல் இன்னிங்சை தொடங்கிய பாகிஸ்தான் அணி, இலங்கை பந்து வீச்சில் திணறியது. இதனால் 215 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இதில் அசார் அலி (52), சர்பிராஸ் அகமது (78) அரைசதம் கடந்தனர். பந்துவீச்சில் பிரசாத், பிரதீப், கவுஷால் தலா 3 விக்கெட் வீழ்த்தினர்.

இதைத்தொடர்ந்து 2ஆவது இனனிங்சை தொடங்கிய இலங்கை அணிக்கு தொடக்கமே அதிர்ச்சியாக இருந்தது.

முதல் இன்னிங்சில் சதம் அடித்த கருணாரத்னே 10 ஓட்டங்களிலும், சில்வா 3 ஓட்டங்களிலும், திரிமன்னே டக்-அவுட்டாகவும் ஆட்டமிழந்தனர்.

பின்னர் சிக்கலில் இருந்த இலங்கை அணியை தரங்கா, மத்யூஸ் தங்களின் நிதானமான ஆட்டத்தால் நிலைநிறுத்தினர்.

தரங்கா (48) அரைசதத்தை தவறவிட்டார். சிறப்பாக விளையாடிய மத்யூஸ் (122) சதம் அடித்தார். முபாரக் 35 ஓட்டங்களில் வெளியேறினார்.

சந்திமால் (67) தன் பங்கிற்கு அரைசதம் அடித்தார். 2ஆவது இன்னிங்சில் 313 ஓட்டங்களுக்கு இலங்கை அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. பாகிஸ்தானின் இம்ரான்கான் 5 விக்கெட் வீழ்த்தினார்.

இதைத் தொடர்ந்து பாகிஸ்தான் அணிக்கு 377 ஓட்டங்கள் இலக்காக கொடுக்கப்பட்டது. இதனையடுத்து களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு அகமது ஷேசாத் (0), அசார் அலி (5) ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்து அதிர்ச்சி கொடுத்தனர்.

இதன் பின்னர் ஜோடி சேர்ந்த ஷான் மசூட், யூனிஸ்கான் ஆட்டத்தை பாகிஸ்தான் பக்கம் திருப்பினர். தூண் போன்று நிலைத்து நின்று இருவரும் சதம் அடித்தனர்.

4ஆவதுநாள்ஆட்டநேரமுடிவில யூனிஸ்கான் (101), மசூட் (114) ஆகியோர் களத்தில் இருக்க பாகிஸ்தான் அணி 2 விக்கெட்டுக்கு 230 ஓட்டங்கள்எடுத்திருந்தது.

இந்நிலையில் கடைசி நாள் ஆட்டம் நேற்று நடந்தது. இதில் ஷான் மசூட் 125 ஓட்டங்களில் வெளியேறினார்.

பின்னர் யூனிஸ்கானுடன் இணைந்த அணித்தலைவர் மிஸ்பா பாகிஸ்தான் அணியை வெற்றிபெற வைத்தார்.


மிஸ்பா 59 ஓட்டங்களுடனும், யூனிஸ்கான் 171 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதனால் பாகிஸ்தான் அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று, 2-1 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது.

போட்டியின் ஆட்டநாயகனாக யூனிஸ்கான் தெரிவானார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பந்து மார்பில் தாக்கியதில் இல.கிரிக்கெட் வீரர் மரணம்



இங்கிலாந்தின் சர்ரேவில் நடந்த உள்ளூர் லீக் ஆட்டமொன்றில், மார்பில் பந்து தாக்கியதால் பாவலன் பத்மநாதன் என்ற இலங்கையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மரணமடைந்தார்.

24 வயதான அந்த இளைஞர் மானிப்பாய் பரிஷ் ஸ்போர்ட்ஸ் கிளப்பிற்காக ஆடிவந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று, லாங் டிட்டன் மைதானத்தில் நடந்த பிரிட்டிஷ் தமிழ் லீக் போட்டிகளில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

அவர் காயமடைந்தவுடனேயே ஏர் அம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டது. இருந்தபோதிலும் அவர் மரணமடைந்தார்.

'அவருக்கு அடிபட்டவுடன், எப்படி இருக்கிறாய் என்று கேட்டபோது நெஞ்சை அழுத்திப்பிடித்தபடியே, கைகளை உயர்த்திக் காண்பித்தார்" என அவருடன் விளையாடிய வீரர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிறகு, ஸ்டெம்புகளுக்குப் பின்னால் சில அடிகள் நடந்து சென்ற பாவலன் கீழே சுருண்டுவிழுந்தார்.

' பாவலனின் மரணத்தை அறிந்து எல்லோருமே அதிர்ந்து போயிருக்கிறோம். அவரது குடும்பத்தினர், நண்பர்கள், அவரை அறிந்தவர்களுக்கு எங்களது அஞ்சலிகள்" என சர்ரேவின் சீஃப் எக்ஸிக்யூட்டிவான ரிச்சர்ட் கௌல்ட் தெரிவித்துள்ளார்.

கடந்த நவம்பர் மாதத்தில் சிட்னியில் நடந்த உள்ளூர் ஆட்டமொன்றில், கழுத்துப் பகுதியில் பந்து தாக்கியதால் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஃபிலிப் ஹ்யூக்ஸ் மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (க)


# ஆஸி - இங்கிலாந்து மோதும் ஆஷஸ் தொடர் இன்று ஆரம்பம்

அவுஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகள் இடையே நடைபெறும் ஆஷஸ் டெஸ்ட் தொடர் மிகவும் பிரபலம் பெற்றது. மைக்கல் கிளார்க் தலைமையிலான அவுஸ்திரேலிய அணி 5 டெஸ்ட் கொண்ட ஆஷஸ் தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்து சென்றுள்ளது.

இங்கிலாந்து- அவுஸ்திரேலியா மோதும் ஆஷஸ் தொடரின் முதல் டெஸ்ட் கார்டிப் நகரில் இன்று தொடங்குகிறது. 2013-ம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் நடந்த ஆஷஸ் டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலியா 5-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இங்கிலாந்து அணி தனது சொந்த மண்ணில் ஆஷஸ் தொடரை வெல்லும் ஆர்வத்துடன் உள்ளது.

அவுஸ்திரேலிய அணியில் கேப்டன் கிளார்க், ஸ்டீவன் சுமித், ரோஜர்ஸ், வோர்னர், வோட்சன், ஜோன்சன், ஹாசல்வுட் போன்ற



சிறந்த வீரர்கள் உள்ளனர்.

/ஹக் தலைமையிலான இங்கிலாந்து அணியில் ஜோரூட், இயன்பெல், பென் ஸ்டோக்ஸ், கேரி பேலன்ஸ் போன்ற சிறந்த வீரர்கள் உள்ளனர். ஆகஸ்ட் 24-ந்தேதி வரை 5 டெஸ்ட் கொண்ட ஆசஷ் தொடர் நடக்கிறது.

இரு அணிகள் இடையே 68 முறை ஆசஷ் டெஸ்ட் தொடர் நடைபெற்றுள்ளது.

இதில் அவுஸ்திரேலியா 32 தடவையும், இங்கிலாந்து 31 முறையும் தொடரை வென்றுள்ளது. 5 தடவை தொடர் சமநிலையில் முடிந்தது.

## மனோ கணேசன்...

அனுப்பி வைத்துள்ள செய்தியை அடிப்படையாக கொண்டே இப் பேச சுவார்த்தைகள் இடம்பெற்றன.

இந்த பேச்சுவார்த்தைகளை தொடர நாம் முடிவு செய்துள்ளோம். இது தொடர்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் தற்சமயம் இதைவிட பகிரங்கமாக கருத்து கூற முடியாதுள்ளது என மனோ கணேசன் தெரிவித்தார். (செ-11)

## மகிந்தவை...

கள் சுதந்திரக் கூட்டணி தடை செய்துள்ளது.

கட்சியின் ஒருசில பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளவிருப்பதன் காரணத்தினாலும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் வேட்பாளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கப்படவுள்ளதனாலும் இப்போதைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேர்தல் கூட்டங்களில் கலந்து கொள்ள மாட்டார் என தெரிவிக்கப்படுகின்றது. (செ-11)

## மத்திய வங்கி...

இதனை தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி தொடர்பாக சுமத்தப்பட்டுள்ள இந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்க முடியுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று புதிய நாடாளுமன்றம் அமைக்கப்பட்ட பின்னர், இந்த மோசடி குறித்து விசாரணைகள் ஆரம்பமாகுமெனவும் பிரதமர் தெரிவித்துள்ளார். (செ-11)

## வேட்பாளர்...

லில் பெண்களுக்கு 5.8 வீதம் வழங்கப்பட்டிருந்தது.

இம்முறை 30 வீதம் பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் மாத்திரமல்லாது, மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகளிலும் பெண்களுக்கு 30 வீத இடம் வழங்கப்பட வேண்டும் என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (செ-11)

## ஷிராந்தியின் நிதியத்திற்கு

# சுங்கத் தீர்வையற்ற வாகனம் வழங்கியமை குறித்து விசாரணை

முன்னாள் ஜனாதிபதியின் பாரியாரான ஷிராந்தி ராஜபக்ஷவின் பெயரில் இயங்கி வரும் நலன்புரி நிறுவனத்திற்கு உலக உணவு திட்டத்தின் கீழ் சுங்க தீர்வையின்றிய வாகனம் பரிசளிக்கப்பட்டமை தொடர்பான சம்பவம் குறித்து காவற்துறையினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கார் ஓட்டப் பந்தயங்களுக்கு பயன்படுத்தப்படும் கார் ஒன்று விபத்துக்கு உள்ளான சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளில், அந்த கார் உலக உணவு திட்டத்தினால், ஷிராந்தி ராஜபக்ஷவின் சிறிலிய சவிய நிதியத்திற்கு வழங்கிய கார்களில் ஒன்று என தெரியவந்துள்ளது.

350 வீத இறக்குமதி வரி அறவிப்பட வேண்டிய இந்த கார்களை இறக்குமதி செய்த போது எந்த நிறுவனத்திற்கும் வரியை செலுத்தவில்லை என கூறப்படுகிறது.

2004-ம்ஆண்டு இலங்கையை பாதித்த சுனாமி அனர்த்தத்தின் பின்னர், நாட்டை கட்டியெழுப்புவதற்காக இலங்கை செயற்பட்ட ஐ.நா அமைப்பின் பல்வேறு நிறுவ



னங்கள் வாகனங்களை இறக்குமதி செய்தன.

கொழும்பில் உள்ள உலக உணவு திட்டத்தின் அலுவலகம் இது சம்பந்தமாக எந்த கருத்துக்களையும் வெளியிடவில்லை

எனினும் தமது அமைப்பின் சட்டத்திற்கும் உரிய வரையறைகளுக்கு அமையவுமே வாகனங்களை வழங்கியதாக பேங்கொக்கில் உள்ள உலக உணவுத் திட்டத்தின் பிராந்திய அலுவலகம் தெரிவித்திருந்தது.

## ரூபாய் 9.4...

கால போரை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தி செய்து கொண்டிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை கடந்த ஜனவரி 8-ம் திகதி கவிழ்க்க அந்த அரசாங்கத்தின் மீது சுமத்திய பொய்க் குற்றச்சாட்டுக்களை போல இந்த பொய்க் குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## முன்னாள்...

நிலஅமைப்பு வரைபடங்கள், வங்கிப்புத்தகம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

விடுதலைப்புலிகளை மீள உருவாக்கும் செயற்பாட்டில் இவர் ஈடுபட்டதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (செ-11)

## மகிந்தவை இணைத்து...

வேண்டும் என்ற எண்ணம் கட்சிக்குள் அனைவருக்கும் இருந்தது. அதை தடுக்க ஒருசில புறக்காரணிகளும், சர்வதேச மற்றும் பிரிவினைவாத சக்திகள் செயற்பட்டன. ஆனால் இன்று அவற்றை வெற்றி கொண்டு கட்சியை பலப்படுதிவிட்டோம்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் எம்முடன் கைகோர்த்தமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

மேலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் வேட்பாளர் பட்டியலில் மஹிந்த ராஜபக்ஷவும் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். ஆனால் கட்சியின் பிரதமர் வேட்பாளர் யார் என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. மஹிந்தவை பிரதமர் வேட்பாளராக்க வேண்டும் என ஒரு சிலர் தமது தனிப்பட்ட கருத்துக்களை முன்வைத்துள்ளனர். என்னை பிரதமர் வேட்பாளர் ஆக்கக் கோரியும் சில பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு இன்னும் சில முக்கிய உறுப்பினர்களின் பெயர்களும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. ஆகவே இதில் இறுதி முடிவை கட்சியின் தலைவரும் கட்சியின் மத்திய குழுவுமே தீர்மானிக்கும். கட்சியின் இறுதி முடிவு எவ்வாறு அமையுமோ அதற்கு கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் கட்டுப்பட வேண்டும் என்பதில் நாம் முரண்படமாட்டோம். அதேபோல் கட்சியில் யாரை பிரதமர் வேட்பாளராக நிறுத்தினாலும் எதிர்த்தரப்பு வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சவாலாகவே அமையும்.

என்னால் ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிக்க முடியும். நாம் கட்சியாக ஒன்றுபட்டால் ஐக்கிய தேசியக் கட்சியை வீழ்த்துவோம் என்பதை மறந்துவிடவேண்டாம். மஹிந்த மட்டுமல்ல என்னை நிறுத்தினாலும் ரணிலுக்கு நெருக்கடியாகவே அமையும். நாம் எப்படியேனும் இம்முறை தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியை கைப்பற்றுவோம், அதில் எந்த சந்தேகமும் இல்லை. அதேபோல் இனிமேல் தேசிய அரசாங்கம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி ஆட்சியையே உருவாக்குவோம். அதேபோல் தமிழ், முஸ்லிம் மக்களையும் இணைத்துக்கொண்டு மீண்டும் ஜனநாயக ஆட்சியை நாம் முன்னெடுக்க வேண்டும்.

எமது ஆட்சியில் நாட்டில் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. வடக்கிலும், கிழக்கிலும் அமைதியான சூழல் உருவாக்கப்பட்டது. ஆனால் கடந்த ஆறுமாத காலத்தில் இவை அனைத்தும் மீண்டும் அழிக்கப்பட்டுள்ளன. வென்றெடுத்த ஜனாயகம் மீண்டும் பிரிவினைவாதிகளின் செயற்பாடுகளுக்காக தாரைவாக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் புலிகளின் தேவைக்காக நாட்டை காட்டிக்கொடுக்கும் செயற்பாடுகளை ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்டு வருகின்றது. ஆகவே இவை அனைத்தையும் தடுத்து மீண்டும் நாட்டை பாதுகாத்து வளமான நாட்டை கட்டியெழுப்ப வேண்டும். அதற்கு இம்முறை தேர்தலை சாதகமாக நாம் பயன்படுத்திக் கொள்வோம் என நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டார். (செ-11)

## மகிந்தவுக்கு வழ...

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர், அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் நேற்று சிறிகொத கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு இவ்வாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவாராயின் அவருக்கு முன்னாள் ஜனாதிபதிக்குரிய வரப்பிரசாதங்கள் வழங்கப்பட்டிருப்பது மற்றைய வேட்பாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

எனவே தேர்தல் ஆணையாளர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு வழங்கப்பட்டிருக்கும் மனித வளங்கள், சிறப்பு வாகனங்களின் பயன்பாடு, பாதுகாப்பு ஆளணியினர், கொடுப்பனவுகள் , சிறப்பு சலுகைகள் உட்பட அனைத்து சலுகைகளையும் நீக்க வேண்டும். அப்போதுதான் நீதியான தேர்தல் நடைபெறுவது உறுதிப்படுத்தப்படும் என்றார்.

இதேவேளை, எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பு மனு தொடர்பில் கூட்டணிக் கட்சிகளுடன் இன்னமும் இணக்கப்பாடு எட்டப்படவில்லை என அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிடுவதற்கான வாய்ப்பை இழக்கும் அறிகுறி தென்படுவதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அடுத்த சில நாட்களில் ஏனைய கூட்டணிக் கட்சிகளுடன் கலந்துரையாடி முன்னாள் ஜனாதிபதிக்கு வேட்பு மனுவை வழங்குவது குறித்து தீர்மானிக்க உள்ளதாகவும் அரசியல் தரப்புத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிந்தவை...

வதாகவும் தெரியவருகிறது.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ களமிறங்குவதில் கட்சிக்குள் தொடர்ந்தும் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. கூட்டணியின் வேட்பாளர் பெயர்ப் பட்டியலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு இடம் வழங்கப்பட்டிருந்த போதிலும் கட்சி சார்பில் அவர் போட்டியிடுவது இன்னும் உறுதியற்ற நிலையில் உள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த காலங்களில் மகிந்த ஆதரவுக் கூட்டணியினர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் மகிந்தவை பிரதமர் வேட்பாளராக களமிறக்க அழுத்தம் கொடுத்திருநத நிலையில் மஹிந்தவை கட்சியில் இணைத்துக்கொள்வதில் பல சிக்கல்களை ஜனாதிபதி மைத்திரிபால சறிசேன எதிர்கொண்டிருந்தார். இந்த தீர்மானம் தொடர்பில் பல மட்டப் பேச்சுகள், முக்கிய கட்சிக் கூட்டங்கள் என்பவற்றை கூட்டி அதன் பின்னரே கட்சியின் வேட்புமனு பட்டியலில் மஹிந்தவின் பெயர் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் தொடர்ந்தும் மகிந்தவை தேர்தலில் களமிறக்குவது தொடர்பில் கட்சிக்குள் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் சார்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு இடம் கிடைக்காவிடின் மகிந்த தலைமையிலான தனித்த கூட்டணியில் பொதுத்தேர்தலில் களமிறக்கும் நோக்கத்தில் மகிந்த ஆதரவு அணியினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். அதற்கான பேச்சுவார்த்தைகளும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை கட்சியில் இணைத்துக் கொணடுள்ள நிலையில் மகிந்த ஆதரவுக் கூட்டணியால் நடத்தப்பட வருந்த அரசியல் கூட்டங்களும் பிற்போடப்பட்டுள்ளன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஒன்றிணைந்து எதிர்வரும் வியாழக் கிழமை அனுராதபுரத்தில் நடத்தவிருப்பதாக குறிப்பிட்ட கூட்டத்

23ஆம் பக்கம் பார்க்க....

## முன்னாள் போராளிகள் விரும்பினால் எனது கட்சியில் போட்டியிட சந்தர்ப்பம்

### த.வி.கூட்டணியின் தலைவர் சங்கரி கருத்து

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுவதற்கு, முன்னாள் போராளிகளுக்கு சந்தர்ப்பம் வழங்க தயாராகவுள்ளதாக கட்சியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

முன்னாள் போராளிகள் போடடியிடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அனுமதி கோரப்பட்டிருந்த நிலையில், அதற்கான சந்தர்ப்பம் மறுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஆனந்த சங்கரி கருத்துத் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகளே தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள், அவர்களே தேசிய தலைவர்கள் என்று அவர்களது பெயரைக் கூறியே வளர்ந்த தமிழ்த தேசியக் கூட்டமைப்பு, இன்று அவர்களுக்கு அரசியலில் சந்தர்ப்பம் வழங்க மறுத்துள்ளமை மிகத்தவறு.

தமிழர்களின் இனப்பிரச்சினை பற்றி நன்கு தெரிந்த நேர்மையான, விசுவாசமானவர்களே நாடாளுமன்றம் செல்லவேண்டும் என்று என்று தெரிவித்த சங்கரி.

கடந்த தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை தோற்கடித்து வீட்டுக்கு அனுப்பியதைப் போன்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை தோற்கடித்து முன்னாள் போராளிகள் நாடாளுமன்றம் செல்வதற்கு வழி வகுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, வட மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் விரும்பும்பட்சத்தில், அவருக்கும் தமது தொகுதியில் சந்தர்ப்பம் வழங்கமுடியும் என்றும் ஆனந்த சங்கரி தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

## ரூபாய் 9.4...

எனவும் ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார நேற்று முன்தினம் ஊடக சந்திப்பொன்றில் கூறியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டை உறுதிப்படுத்தும் வகையில் ஹில்டன் ஹொட்டலின் ஆவணம் ஒன்றையும் ஊடகங்களுக்கு வழங்கியிருந்ததுடன் இந்த செய்தி ஊடகங்களில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

நளின் பண்டார குற்றச்சாட்டை நிரூபிக்க முன்வைத்த ஆவணம் 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி ஹில்டன் ஹோட்டல் வழங்கிய இன்வொய்ஸ் ஆகும்.

2013ஆம்ஆண்டு நவம்பர் 15 ஆம் திகதி பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின மாநாட்டின் ஆரம்ப நாள் வைபவத்தில் கலந்து கொண்ட ஆயிரத்து 400 உள்நாட்டு வெளிநாட்டு அதிதிகளுக்கு உணவு வழங்குவதற்காக வெளியிடப்பட்ட இனவொய்ஸாகும்.

இந்த வைபவத்தில் பிரித் தானிய இளவரசர் சார்ள்ஸ் உட்பட 53 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இதனால் அதுராஜபக்ஷ குடும்பத்தினர் காலைவேளைஉணவு அல்ல என்பதை கூற வேண்டும்.

இந்தக் குற்றச்சாட்டானது 30 வருட

23ஆம் பக்கம் பார்க்க....


**உடனடி வேலைவாய்ப்பு**

Innovage International Pvt (Ltd) ஆகிய எமது நிறுவனத்தில் 10 வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளமையினால் தகுதியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொண்டு தங்களுக்கான நேர்முகத்தேர்வு நேரத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

தகைமைகள்:- O/L or A/L சித்தியடைந்தவர்கள்

வயதெல்லை:-18-35 இறுதித்திகதி:- 12.07.2015 (1073)

28, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:-077 190 8997, 077 077 1377, 077 966 0885



**கண்ணீர் அஞ்சலி**



அமரர்

**எஸ்.பி.நடராஜா**

புகழ்பூத்த பழைய மாணவரும்,
கல்லூரி வளர்ச்சியில்
கருத்தூன்றி செயற்பட்டவரும்
எம்மனங்களில் என்றும்
நிறைந்திருப்பவரும்
அண்ணா தொழிலக
உரிமையாளருமாகிய
எஸ்.பி.நடராஜா அவர்களின்
இறைபதமெய்திய செய்தி கேட்டு
அதிர்ச்சியில் உறைந்து போனோம்
அவரது பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மாசாந்தியடைய இறைவனை பிரார்த்தித்து
நிற்கின்றோம் (C-1509)

யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அ.குழு, ப.மா.சங்கம்



**சிறுநீரகம் தேவை**

25 வயது இளம் யுவதிக்கு
$O^+$ அல்லது $B^+$ சிறுநீரகம்
அவசரமாகத் தேவை.
கொடையாளிகள் தொடர்பு கொள்ளவும் 0774455899 (1062)
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)



**A/L பொருளியல்**

வினா - விடை 5
(2014 புள்ளிவிபரங்களுடன்)
மற்றும் 6 MCQ, 10 வினாவிடைகள்)
ரூபா : 220 (1072)

**வே.கருணாகரன்**
ஆசிரியர் : பொருளியற் கல்லூரி

பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை



**B.A B.com B.BA**

**காமராசர் பல்கலைக்கழகம் மதுரை**

- ★ மேற்படி பல்கலைக்கழகத்தினால் (May 2016 பரீட்சைக்கான) புதிய ஆண்டுக்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- ★ A/Lல் முழுமைச் சித்தி அடைந்தவர்களும், இரண்டு பாடம் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆவர்.
- ★ A/Lல் - வரலாறு, அரச விஞ்ஞானம், பொருளியல், பொது நிர்வாகம், சமூக விஞ்ஞானம் Journalism & Mass Communication தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவு செய்ய முடியும்.
- ★ பதிவுகள் யாவும் எமது நிறுவத்தினூடாக நடைபெறுகின்றன.
- ★ பதிவு முடிவுத் திகதி 31.07.2015
- ★ விரிவுரைகள் ஆரம்பம்:-11.07.2015 காலை 8 மணி
- ➡ மேற்குறிப்பிட்ட பட்டநெறிகள் யாவும் இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவை ஆகும்.
- ➡ பரீட்சைகள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வட மாகாண இணைப்பாளராகிய புதிய உயர் கல்லூரி வளாகத்தில் நடைபெறுகின்றன.

குறிப்பு:-

1. விரிவுரைகளில் பங்கேற்கும் வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதிகள் இலவசம்.
2. (பொது நிர்வாகம் Public Administertion) பாடமானது அரச உத்தியோகஸ்தருக்கான சிறந்த தெரிவாகும்.

யாழ். இணைப்பாளர்
காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)
தொலைபேசி இல.021 222 8148 (C-1500)

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.



**CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை**

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




அழையுங்கள் - 077 29 31 062

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை) (C-1505)



**தேவை**

உணவகம் ஒன்றுக்கு நன்கு சமைக்க தெரிந்த (அசைவம், சைவம்) மற்றும் றொட்டி, கொத்து றொட்டி தயாரிக்க தெரிந்த ஆண்கள் இருவர் தேவை. (1071)

தொடர்புகளுக்கு :- 0771258072



**காணி / வீட்டுடன் இணைந்த காணி தேவை**

பருத்தித்துறையில் V.M. Road. NM Lane, ஐயனார் கலட்டி மற்றும் நகர்ப்புறத்தை அண்டிய பகுதியில் 2-3 பரப்புடைய காணி தேவப்படுகிறது. மேற்கூறப்பட்ட பிரதேசங்களில் காணி / வீட்டுடன் இணைந்த காணி விற்க விரும்புவோர் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தயவு கூர்ந்து தொடர்பு கொள்ளவும். (C-1507)

தொடர்புக்கு : ம.மயூரன்
தொ.பே. - 077 3151 654



**V2 TRAVELS** குறைந்த கட்டணத்தில் **அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்**

வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு (Srilankan Visa extension)/வீசா எடுப்பதற்கான மாதிரி பயணச்சீட்டு (Travel Itinerary)

UK/CANADA/EUROPE போன்ற அனைத்து நாடுகளுக்குமான Visit visa/Spouse Visa/Tourist visa/Student visa/ Business visa போன்றவற்றிற்கான ஆலோசனைகள்,ஆவணத்தயார்ப்படுத்தல்கள் ONLINE விண்ணப்ப படிவங்கள் நிரப்புதல் மற்றும் நிராகரிக்கப்பட்ட(REFUSAL) விசாக்களுக்கு சட்டநிபுணர்களின் உதவியுடன் Appeal செய்து VISA பெற்றுக்கொடுத்தல்

இந்தியா, மலேசியா விசாக்கள் (Visa Services) /விமான ஆசனத்தினை பதிவு செய்தல்(Advanced Free Booking)

பயண திகதியினை மாற்றுதல் (Date change) / பயணக்காப்புறுதி (Travel Insurance) (C-1508)

ஞாயிற்றுக்கிழமை உட்பட அனைத்து நாட்களிலும் எமது அனைத்து கிளைகளும் இயங்கும்

கிளிநொச்சி 0768226240 0768226244 — A9 வீதி, கிளிநொச்சி (பழைய ஆஸ்பத்திரிக்கு முன்னால்)

யாழ்ப்பாணம் 0212221984 0768226241 — 49A, சப்பல் [illegible]

நெல்லியடி 0776699892 0768226243 — [illegible] சந்தி, நெல்லியடி.

வல்வெட்டித்துறை 0212055043 0776697960 — யாழ் வீதி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.07.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது